# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12,



மில்க்வைற்
நீல சோப், பார் சோப்
சீரான சலவைக்கேற்ற சிக்கனமான சோப்






புத்தகம் 20 | திருவள்ளுவர் ஆண்டு 1997 ஆனி திங்கள் 11-ம் நாள் (25—6—1966) சனிக்கிழமை ரபி: அவ் 5 | இதழ் 4




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 10-வது தேசிய மாநாட்டுச் சிறப்பிதழ்


இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# கல்முனை எங்கும் விழாக்கோலம்

## இல்லங்கள் வீதிகள் தோறும் மூவர்ணக் கொடிகள்

### மாநாட்டு ஏற்பாடுகள் பூர்த்தி

கல்முனை—யூன்-22

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 10வது தேசிய மாநாடு நடைபெறுவதை யொட்டி கல்முனை கிராமமும் அதையடுத்த கிராமங்களும் விழாக்கோலம் பூண்டுள்ளன. மகரதோரணங்களும், மூவர்ணக் கொடிகளும், வீதிகளையும், வீடுகளையும் அலங்கரித்த வண்ணம் காட்சியளிக்கின்றன. மாநாட்டில் கலந்து கொள்ள வரவிருக்கும் பெருந்தொகையான மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவதற்கு மட்டக்களப்பு-கல்முனை மக்களும், தமிழரசு மாநாட்டு வரவேற்புக் குழுவும் ஏற்ற ஒழுங்குகளையெல்லாம் செய்து முடித்துவிட்டதென்று தெரிகிறது.

பிற இடங்களிலிருந்து மாநாட்டுக்கு வரும் மக்களை மட்டக்களப்பில் வரவேற்று கல்முனைக்கு அழைத்துச் செல்ல மட்டக்களப்பு மக்களும், மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி கிளையும் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது.

கல்முனை வீதிகளில் பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருக்கும் மூவர்ணக் கொடி மாநாட்டுக்கு வருவோரை வருக வருக என வரவேற்புக் கீதம் இசைத்துக்கொண்டிருக்கிறது.

திருவிழாக்கோலம் பூண்டுவிட்ட கல்முனை நகரிலுள்ள நொத்தாரிஸ் பொ. வி. கந்தையா அவர்களின் இல்லத்தில் இம்மாதம் 23-ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் விடயாலோசனைக் கூட்டத்துடன் மாநாடு ஆரம்பமாகிறது. இந்த விடயாலோசனைக் கூட்டத்தில், பொதுக் குழு உறுப்பினர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

#### வன்னியசிங்கம் அரங்கில்

24-ந் திகதி வெள்ளிக்கிழமை பாத்திமா கல்லூரியின் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள வன்னியசிங்கம் அரங்கில் மாநாட்டு நிகழ்ச்சிகள் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும். மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து வரும் சைகிள் ஊர்வலங்கள் அன்று காலை 8 மணிக்கு வன்னியசிங்கம் அரங்கை வந்தடையும். அதையடுத்து காலை 9 மணிக்கு தொண்டர்களின் அணிவகுப்பு மரியாதையை தலைவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். பின்னர் தந்தை திரு. செல்வநாயகம் அவர்களினால் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக்கொடி யேற்றி வைக்கப்படுவதைத் தொடர்ந்து தமிழரசுத் தேசியகீதம் இசைக்கப்படும். அதன் பின்னர் ஜனாப் மசூர் மவுலானாவின் வரவேற்புரையைத் தொடர்ந்து கட்சியின் புதிய தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைமைப் பேருரையை நிகழ்த்துவார்.

#### தொழிலாளர் மாநாடு

அன்று காலை 11 மணிக்கு 'தியாகிகள்' அரங்கில் இலங்கைத் தொழிலாளர் கழகத்தைச்சேர்ந்த திரு. பி. சாமன் தலைமையில் நடைபெறும் தொழிலாளர் மாநாட்டில், ஜனாப் வை. எம். எம். றசீத், திரு. வ. பாலசிங்கம், ஜனாப் ஏ. உதுமான் லெப்பை, திரு. பீதாம்பரம், திரு. க. துரைரத்தினம், திரு. மு. ஆலாலசுந்தரம், திரு. க. சிவானந்தசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

இடைவேளைக்குப் பின் பிற்பகல 2 மணிக்கு தமிழர் அரசியல் வரலாறு பற்றி கடந்த 30 ஆண்டுகளாக குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் தம்பதிகளால் தொகுக்கப்பட்டுவந்த பத்திரிகைத் தொகுப்பு கண் காட்சியை தமிழரசுத் தந்தை திறந்து வைப்பார்.

#### இலக்கிய மாநாடு

பி. ப. 2.30க்கு உமறுப்புலவர் அரங்கில் மட்டக்களப்பு முதல் பிரதிநிதி திரு. செ. இராசதுரை தலைமையில் இலக்கிய மாநாடு நடைபெறும். இலக்கிய மாநாட்டில், கவிஞர் நீலாவணன், ஜனாப் பசீர்தம்பி, வித்துவான் கமலநாதன், கவிஞர் காசி. ஆனந்தன், பண்டிதர் கா. பொ. இரத்தினம், கவிஞர் பாண்டியூரன் ஆகியோர் பங்கேற்பர்.

#### மாதர் மாநாடு

மாலை 5 மணிக்கு 'பாடும் மீன்' அரங்கில் நடைபெறும் மாதர் மாநாட்டுக்கு திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் தலைமை தாங்குவார். திருமதி இராசபூபதி அருணாசலம், செல்வி. கலா மாணிக்கம், செல்வி. நோ. இராசம்மா, செல்வி சி. ருக்மணி, திருமதி ரா. கி. பிள்ளை, செல்வி இ. ஈஸ்வரி ஆகியோர் பேசுவர்.

#### கலை நிகழ்ச்சிகள்

அன்று இரவு 7 மணிக்கு விபுலானந்தர் அரங்கில் பட்டிருப்புப் பா. உ. திரு. சி. மூ. இராசமாணிக்கம் தலைமையில், கலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். நடனம், சங்கீதம், வில்லுப்பாட்டு, நாட்டுக் கூத்து, நாடகம் முதலிய நிகழ்ச்சிகள் இக் கலைவிழாவில் இடம் பெறும்.

#### அரசியல் மாநாடும் பொதுக் கூட்டமும்

25-ந் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வன்னியசிங்கம் அரங்கில் டாக்டர் இ. மு. வி. தலைமையில் அரசியல் மாநாடு துவங்கும். அரசியல் மாநாட்டில் பொதுச் செயலாளரின் ஆண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதுடன், தீர்மானங்கள் நிறைவேற்றலும், புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

அன்று மாலை 3 மணிக்கு ஒரு பிரமாண்டமான ஊர்வலம் பெரிய நீலாவணைச் சந்தியிலிருந்துபுறப்பட்டு கல்முனையின் பல வீதிகள் வழியாக வந்து பொதுக் கூட்டம் நடைபெறும் கல்முனைக் கடற்கரை மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள இராசவரோதயம் அரங்கை வந்தடையும். பொதுக் கூட்டத்துக்கு டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைமை தாங்குவார். இப் பொதுக்கூட்டத்தில் தமிழரசுப் பாராளுமன்ற, மூதவை, உறுப்பினர்களும், விசேட விருந்தினரான பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவும் உரை நிகழ்த்துவார்கள். கூட்ட முடிவில் மாநாட்டு தீர்மானங்கள் பொது மக்களுக்கு வெளியிடப்படும்.


வந்துற்ற துயர்கள் யாவும்

வந்த வழியே பறந்திட

இன்றே என் உதவியை

நாடுங்கள்!

குறிப்பு: கடிதங்கள் கம்பளை விலாசத்திற்கே எழுதப்படல் வேண்டும்

ஆலோசனை இலவசம்

| கொழும்பில் சந்திக்கும் நாட்கள்: | கல்யாணம்—காதல் | கம்பளையில் சந்திக்கும் நாட்கள்: |
| --- | --- | --- |
| செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி | கிரகதோஷம்—கீர்த்தி குடும்பத் தகராறு கூடுதல் லாபம்—கெடுதல் கேடுகள்—கைராசி-கொடிய நோய்கள் கோபதாபங்கள் கௌரவ வாழ்வு சம்பந்தமாக | ஞாயிறு. திங்கள் |
| முகவரி: ஸ்ரீ சங்கராஜ மாவத்த, மருதானை,—கொழும்பு-10 | கடித மூலமும் நேரிலும் ப | முகவரி: |

பி. எம்.

—மகா மா

அருத எண்ணெய்த் தொழிலகம்

கம்பளை போன்: 454



ஏஜெண்டுகள் தேவை

இன்சூரன்ஸ் செய்வதற்கு கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் பகுதிநேர-முழுநேர ஏஜெண்டுகள் தேவை.
விண்ணப்பிக்கவும்: விளம்பரம்
மே. பா. சுதந்திரன், த. பெ. இல. 1183 கொழும்பு



கூடுதலான பால் உற்பத்தி செய்து

கூடுதலான பால் பருகுங்கள்.

தேசிய பால் சபை



விற்பனைக்கு

வீட்டுக் கட்டிடத்துக்குத் தேவை
யான சகல விதமான இரும்புச்
சாமான்கள் எங்களிடம்
மலிவான விலைக்குப்
பற்றுக் கொள்ளலாம்.

. வயித்திலிங்கமும்
சகாக்களும் வரை

3ம் குறுக்குத் தெரு
கொழும்பு—11

பழைய சோனகத் தெரு
கொழும்பு—12

128, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

# மதங்கட்கு போதனைபீடங்கள்

## தமிழ் பல்கலைக் கழகத்தில் நிறுவ மாநாட்டுக்கு வரும் பிரேரணை

உத்தேச தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஒவ்வொரு மதத்தினருக்கும் தனி போதனைபீடம் அமைக்கப்பட வேண்டுமென்று கோரும் பிரேரணை ஒன்று இன்று கல்முனையில் நடைபெறும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பத்தாவது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்படலாம் என்று நமது கல்முனை நிருபர் அறிவித்துள்ளார்.

கல்முனையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் தமிழ் பேசும் மக்கள் சம்பந்தப்பட்ட பல பிரச்சினைகளை யிட்டு ஆராயப்படுவதாகவும் குறிப்பாக தமிழ் பேசும் வாலிபரிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம் பற்றியும் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவது பற்றியும் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட விருப்பதாகவும் தெரிகிறது. இப்பிரேரணைகள் பற்றிய விபரம் இன்று (25-6-66) கல்முனைக் கடற்கரை மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் மக்களுக்கு தெரிவிக்கப்படும்.

உத்தேச தமிழ் பல்கலைக் கழகத்தில் இஸ்லாமிய, கிறிஸ்தவ, இந்து மத தத்துவப் போதனைக்கென்று தனித்தனிப் போதனை பீடங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்தைக் கோரும் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்படுமாம். இத்தீர்மானத்தை விடயாலோசனைக் குழு பரிசிலனை செய்திருப்பதாக கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் நமது நிருபரிடம் கூறியுள்ளார். இப்பிரேரணை பற்றி வேறு விளக்கங்கள் எதையும் அவர் கொடுக்க மறுத்துவிட்டார்.

இன்று காலை (25-6-66) நடைபெறும் அரசியல் மாநாட்டில் இப்பிரேரணை மூன்றுவதாக விவாதிக்கப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப்படலாம் என்று தமிழரசுப் பிரமுகர் ஒருவர் நமது நிருபரிடம் கூறியுள்ளார். அரசியல் மாநாட்டில் விவாதிக்கப்பட விருக்கும் இதர பிரேரணைகளில் முதன்மை பெற்றிருப்பது படித்தவாலிபர்களின் வேலை இல்லாப் பிரச்சினை பற்றிய தீர்மானம் என்று தெரிகிறது.

வட - கீழ் மாகாணங்களில் உள்ள தர்சு நிலங்களில் புதிதாகக் குடியேற்றத் திட்டங்கள் ஏற்படுத்த வேண்டுமென்ற பிரேரணையும் விவாதிக்கப்படலாம் என்று நம்பப்படுகிறது.

## 29 வது ஷரத்துக்கு எதிர்ப்பு

இலங்கைஅரசியற்சட்டத்தின் 29வது ஷரத்து இரத்துச் செய்யவோ, திருத்தப்படவோ மாட்டாதென்றும், பௌத்த கமிஷன் சிபார்சுகள் அமுல் நடத்தப்படமாட்டாதென்றும் அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்தன கொழும்பில் அசோகா ராம பௌத்த ஆலயத்தில் நடைபெற்ற ஒரு விழாவில் கூறியது பற்றி பௌத்த சமயத் தலைவர்கள்வெறுப்படைந்துள்ளனர். 29வது ஷரத்தை திருத்தி அமைக்காமல் பௌத்த சமயத்துக்கு ஓர் அந்தஸ்து எப்படி அளிக்க முடியுமென்று அவர்கள் வினவுகின்றனர்' இவ்வாறு ஒரு செய்தியை எத்த (13-6-66) வெளியிட்டுள்ளது.

## பகிரங்கமாகக் கூடவில்லையாம்

அண்மையில் தமிழரசுக் கட்சியின் செயற்குழு அந்தரங்கமாகக் கூடி, இந்த வருடம் முடியுமுன்பு பொதுத் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதால், தங்களின் கோரிக்கைகளை உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தீர்மானித்தது.

— எத்த (21-6-66)


## அருத எண்ணெய்

பல்லாண்டு காலமாக பல்லாயிரக்கணக்கான பாவனையாளர்களுக்கு பயன் நல்கி வரும் ஒரு அற்புதமான கூந்தல் தைலம்!

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட, ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த எண்ணெய்-அறுபதாம் பச்சை எனும் தமிழ் மூலிகையையும், வேறு ஆயுர்வேத மூலிகைகள் நாற்பத்தி நான்கினையும் சேர்மானமாகக் கொண்டது!

உஷ்ணமான உடல் உள்ளவர்களுக்கும், உஷ்ணப் பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கும் அதிசயிக்கத்தக்க பலன் அளிக்கவல்லது!

இதனை தலையில் தேய்த்தமாத்திரத்தில்...

கூந்தல் அடர்த்தியாகவும், நீளமாகவும் வளரும்.

தலைமயிர் உதிர்வதும், நரைப்பதும் நிற்கும்.

மூளைக்குக் குளிர்ச்சியும், கண்களுக்குப் பிரகாசமும்

உண்டாகும். நீங்காத ஜலதோசமும்,

பீனிசமும் நீங்கும்.

அதுமட்டுமா?

கண்—தலை—காது—மூக்கு

சம்பந்தப்பட்ட சகல வியாதிகளும் குணமாகும்!

தேவை: ஏஜன்ஸி இல்லாத எல்லா ஊர்களிலும் சோல் ஏஜண்டுகள் தேவை. விபரம் கோரி விண்ணப்பிக்கவும்.

தயாரிப்பாளர்:

பி. எம். திசாநாயக்க,

அருத எண்ணெய் தொழிலகம்—கம்பளை.

போன்: 454.


## தமிழ்க் கடிதங்கள் கணக்கெடுப்பு

## அரசாங்க அலுவலகங்களில் நடைபெறுகிறது

தமிழ்க் கடிதங்களின் கணக்கெடுப்பு தலைநகரில் உள்ள ஒவ்வொரு திணைக்களங்களிலும் இந்த மாதம்முதல் ஆரம்பமாகியிருப்பதாகத் தெரிகிறது.

அரசாங்கத் திணைக்களங்கள் ஒவ்வொன்றுக்கும் தினமும் எத்தனை தமிழ் கடிதங்கள் வருகின்றன என்றகணக்கெடுப்பு இந்த மாதம் முதல் ஆரம்பமாகியிருப்பதாக திறைசேரி வட்டாரத்திலிருந்து நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. இந்தக் கணக்கெடுப்பு அடுத்த மாதத்தில் நாடு பூராவும் விஸ்தரிக்கப்படும் என்றும் திறைசேரி வட்டாரத்தில் பேசப்படுகிறது.

தினமும் இருபதுக்குக் குறையாத தமிழ்க் கடிதங்களாவது ஒரு காரியாலயத்திற்கு வந்தாலே மொழிபெயர்ப்பாளரையும், தட்டச்சாளரையும் நிரந்தரமாக ஏற்படுத்த முடியும் என்று திறைசேரி கருதுகிறதாம். இக் கருத்தை தமிழ் அரசாங்க ஊழியர்கள் வன்மையாக எதிர்க்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.



உருதுப்புலவர் அரங்கில் 24-ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு தமிழரசுத்தந்தை அவர்களால் திறந்து வைக்கப்படவிருக்கும் முப்பதாண்டுப் பத்திரிகைக் கண் காட்சியை தொகுத்த இரா. கனகரத்தினம் தம்பதிகள்.


## வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

ஈழத்தில் தனிப்பெரும் சாதனையை ஏற்படுத்தி ஈடு இணையற்று விளங்குவது

# கல்கி பீடி



சிறந்தது, சிக்கனமானது, சிந்தனையூட்டுவது

சோர்வு நீக்கி உற்சாகத்தை அளிப்பது

புகைக்க புகைக்க இன்பம் பயப்பது

# 786 கல்கி பீடிகளே

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்

சி. சின்னத்துரை அன் பிரதர்,

44, 3ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

தொழிற்சாலை: 79, 79/1, மெசஞ்சர் வீதி, கொழும்பு - 12.

# கல்முனை மாநாட்டில் ஜனுப் மௌலாஞ வரவேற்புரை

'இலங்கைத் தமிழரசுக்கட்சியின் 10-வது தேசிய மாநாட்டை நடத்துவதற்கு மீன்பாடும் தேன் நாடாகிய மட்டக்களப்பில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வதியும் அம்பாரை மாவட்டத்துக்கு தலை நகராக விளங்கக் கூடிய கல்முனையினைத் தெரிந்தெடுத்தற்காகவும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஓர் அங்கமாகிய இஸ்லாமிய மக்களை கௌரவிக்கு முகமாகவும் கட்சியின் கொள்கைக்கு கட்டு பட்டு தளராத இலட்சியபற்றும் தயங்காத செயல் நோக்கும் கொண்ட ஒரு முஸ்லிம் மகனை உரிய முறையில் சிறப்புப்படுத்துவதற்காகவும் இப்பத்தாவது தேசிய மாநாட்டின்வரவேற்புக் குழுவின் தலைவராக என்னை தெரிவு செய்ததற்காகவும் தமிழரசுக் கட்சிக்கும் வரவேற்பு குழுவினருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

### கல்முனை மக்களின் இலட்சியப் பற்று

'இம்மாநாடு நடைபெறும் இப்புண்ணிய பூமி இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களது உற்றுநோக்குக்கு-குறிப்பாக இஸ்லாமியப் பெருங்குடி மக்களது உற்றுநோக்குக்குரிய ஒரு பிரதேசமாகும். 1956ம், 1960ம் ஆண்டுத் தேர்தல்களில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு முஸ்லிம் மகனை தெரிந்தெடுத்து பெருமை பெற்றது. அது மட்டுமல்லாமல் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் தமிழரசு அபேட்சகர் தோல்வி கண்டதுகூட மிகச் சிறிய வித்தியாசத்தில்தான். தமிழரசு பாராளுமன்ற உறுப்பினர்களாக கல்முனைத் தொகுதியில் வெற்றியீட்டியவர்கள் கட்சியை விட்டு விலகிய போதும், இத்தொகுதி வாழ் தமிழ் பேசும் பெருங்குடி மக்களிடம் தமிழரசுக் கட்சி மீதுள்ள இலட்சியப்பற்று சிறிதும் குறையவில்லை.

### முதற்குரல்

'இப்பகுதியிலுள்ள தமிழ் பேசும் பெருங்குடி மக்களுக்கு சிறப்பாக முஸ்லிம் மக்களுக்கு பரம்பரைபரம்பரையாக சொந்தமாக விளங்கி வந்த அம்பாரை மாவட்டத்திலுள்ள நிலங்கள் முன்னைய அரசாங்கங்களால் குடியேற்றத்திட்டம் என்ற பெயரால் சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்ட போது அதை எதிர்த்து குரலெழுப்பிய ஒரே கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சியே. அந்த நேரத்தில்நமதுமுன்னை நாள் பிரதிநிதிகள் தூங்கிக் கொண்டிருந்த செயல் எமக்கு மிக வருத்தத்தை அளிக்கிறது.

### குறை நீங்கும்

'முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாவட்டத்தில் ஆக்கப்பட்ட ஒரேயொரு கச்சேரியை முற்றிலும் பொருத்தமற்ற இடத்தில் நிறுவ எத்தனங்கள் நடந்த போது அதனை எதிர்த்து பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் குரலெழுப்பிய ஒரே கட்சி தமிழரசுக் கட்சிதான் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்பிரதேசத்தில் முன்னை நாள் பா. உ. க்கள் இந்த விஷயத்தில் அலட்சிய மனோபாவம் காட்டி, ஏனோதானோ என்று இருந்துவிட்ட படியால் இன்று அம்பாரை மாவட்ட தமிழ் பேசும் பெருங்குடி மக்கள் மிகுந்த அவதிக்காளாகிறார்கள். எனினும் இ. த. அ. க. வின் திட்டங்கள் அமுலுக்கு வரும் போது இக்குறை நிவர்த்தி செய்யப்படும் என்பதை உங்களுக்கு கூறி வைக்க வரும்புகிறேன்.

### சனநாயகம் காப்பற்றப்பட்டது

'1965ம் ஆண்டு நடைபெற்ற தேர்தல், தமிழ் பேசும் மக்களுக்கு மூச்சு விடக் கூடிய வாய்ப்பொன்றை நல்கியுள்ளது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, எமது கட்சி தேசிய அரசை நிறுவ உதவியதனுல், இந்நாட்டில் சனநாயகம் காப்பாற்றப்பட்டதோடு, தமிழ் பேசும் மக்களும் ஓரளவு சுபீட்சம் அடைய முடிந்தது.

### சரிசம நிலை

'வடக்குகிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழி ஆக்கக் கூடியவகையில் தமிழ் மொழி விசேட விதிகள்சட்டத்தைஇயற்றியதன் மூலம், தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையை தேசியஅரசுபெற்றுவிட்டது. இதனுல் சிங்கள மக்களோடு தமிழ் பேசும் மக்களும் ஓரளவு சரிநிகர் சமானமாக வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.



### முன்னைய மாநாடுகள்

'இதற்கு முன்பு நடைபெற்ற மாநாடுகள் எல்லாம் ஆவேசத்தோடும், துயரத்தோடும் பொங்கியெழும் உணர்ச்சியோடும் நடைபெற்றன. ஆனுல் நாட்டை ஆள்பவர்களில் நாமும் ஒருவராகி தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு சுபீட்சம் கிடைத்த பின்பு நடைபெறும் இம்மாநாடு கல்முனையில் நடைபெறுவதால் இந் நகர் புனிதத்துவம் பெற்றுள்ளது.

நான் இதற்கு முன்புபங்கு பற்றிய மற்றெல்லா தமிழரசு மாநாடுகளையும் விடஇம் மாநாடு சிறப்புற அமைய வேண்டும் என்பதற்காக இரவு பகல் பாராது பாடுபட்டுழைத்த தோழர்களுக்கு எம் நன்றி.

### வருக! வருக!

'கடைசியாகஒன்றைக்கூறி என் பேச்சை முடிக்க விரும்புகிறேன். இ. த. அ. கவின் சரித்திரத்திலேயே அதன் தேசிய மாநாட்டில் நமது நாட்டின் பிரதம அமைச்சரும் இன்னுமோர் அமைச்சரும் கலந்து கொள்வது இதுவே முதற்தடவை. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இதுவரை செல்லாத கௌரவ டட்லிசேனநாயகா அவர்களும், கௌரவஜே. ஆர். ஜயவர்தன அவர்களும் எமது அழைப்பை ஏற்று மாநாட்டின் கடைசிநாள் நிகழ்ச்சியான பொதுக் கூட்டத்தில் கலந்து உரையாற்றச் சம்மதம் தெரிவித்ததற்கு எமது நன்றியைக்கூறி இம்மாநாட்டுக்கு வருகை புரிந்துள்ள அனைவரையும் வருக வருக என்று வரவேற்றேன்.'


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

(போலிகளை வாங்கி ஏமாருதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிட மிருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,

கொழும்பு-11



அதிசயம், ஆச்சரியம், ஆனுல் உண்மை



நவலங்கா டிரேடாஸ ஸ்தாபனத்தார தயாரிக்கும ஸ்ரீ தேவி வியாபாரச் சின்னமிட்ட திடீர் ரசப் பவுடரைக் கொண்டு சில விஞடிகளில் ஒரு நல்ல சூப்பை (ரசத்தை) அற்புதமாக, நேர்த்தியாக தயாரித்துவிடலாம். ஒரு கோப்பை நல்ல ரசத்தை உட்கொண்ட மாத்திரத்தில் நெஞ்செரிவு, வாய்வுக் கோளாறு, அஜீரணம், பசியின்மை, மற்றும் வயிற்று உபாதைகள் அனைத்தும் பறந்தோடிப் போகும். ஒவ்வொரு சாப்பாட்டுடனும் இந்த ரசத்தைப் பாவிக்கலாம்.

M. B. BS (லண்டன்) M. R. C. S. — L. R. C. P. (இங்கிலாந்து) முதலிய பட்டம் பெற்ற இலங்கையின் பிரபல டாக்டர்களில் ஒருவர் கூறுகிறூர்:-

உங்கள் ஸ்ரீ தேவி திடீர் ரசத்தை நான் பாவித்ததோடு எனது சிகிச்சா நிலையத்திலுள்ள நோயாளிகளுக்கும் கொடுத்து பரீக்ஷித்துள்ளேன். வயிற்றுக் கோளாறுகளை குணப்படுத்த உங்கள் திடீர் ரசம் சிறந்த முறையில் பயன்படுவதுடன், விரும்பி ருசித்து சாப்பிடக் கூடியதாகவும் உள்ளது. முக்கியமாக வாய்வு உபாதைகள், அஜீரணக் கோளாறு, வாந்திக் குணம் முதலியவைகளால் அவதியுறும் கற்பவதிகள் இதை தினசரி பாவித்து சிறந்த நிவாரணத்தைப் பெறலாம் என்பதற்கு சிபார்சு செய்கிறேன்.

இதையும், இதேபோல் நூற்றுக்கணக்கான நற்சாட்சிப் பத்திரங்களையும் எங்கள் காரியாலயத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.

¼ ருத்தல் பக்கெட் -/50 சதம். ½ ருத்தல் பக்கெட் 1-00.

சில நிமிடங்களில் தயார் செய்யக்கூடிய எங்களின் இதர தயாரிப்புகள்.

திடீர் தோசைப் பவுடர், திடீர் முறுக்கு பவுடர்,
திடீர் உளுந்து வடை பவுடர், திடீர் சாம்பார் பவுடர்,
திடீர் மசால் வடை பவுடர்.

மற்றும் சுத்தமான உளுந்து மாவு—கடலை மாவு—அரிசி மாவு, கொச்சிக்காய், மல்லி, மசாலா தூள் முதலியனவும் கிடைக்கும்.

உற்பத்தியாளர்கள்:

நவலங்கா டிரேடர்ஸ்,

212/48, கேஸ்வேர்க்ஸ் வீதி,

[ இலங்கை வங்கி புறக்கோட்டை கிளைக்கு அருகாமையில் ]

கொழும்பு-11. தொலைபேசி: 5113.




இ. ராமலிங்கம்,
மருதோனை.

கே: தி. மு. கழகத்துடன் கம்யூனிஸ்ட்கட்சி தேர்தல் உடன்பாடு செய்ததாமே உண்மையா?

ப: தேர்தல் உடன்பாடு உண்மையே, காங்கிரசைத் தோற்கடிக்க இது பயன்படுமென்று தி. மு. க. கருதுகிறதாம்.

சி. கி. கணேசமூர்த்தி,
யாழ்ப்பாணம்.

கே: தமிழ் பல்கலைக் கழகம் நிறுவுவதைத் தான் எதிர்க்கவில்லை என்று திரு. ஜீ. ஜீ.கூறியிருக்கிறரே, எதிர்க்காவிட்டால் ஆதரிக்கிறர் என்பதுதானே!

ப: வேறென்ன!

எஸ். பார்வதி,
பதுளை.

கே: 'கல்கண்டு' பத்திரிகையின் ஆசிரியர் தனக்குத்தானே புகழ்மாலை சூட்டிக்கொள்கிறரே, இது அசல் தன்னலமல்லவா?

ப: தன்னலத்தில் போலி வேறு இருக்கிறதா? தன்னலமின்றி பிறர்நலம் பேணமுடியாது. தன்னைத் தானே புகழ்ந்து கொள்வதிலோ, தன்னைத் தானே உயர்த்திக் கொள்வதிலோ தவறு கிடையாது. தன்னைத் தானே தாழ்த்திக்கொள்வது தான் தவறு. தனக்குப் பகைவனும் தானே, நண்பனும் தானே.

சிறிதரன்,
மட்டக்களப்பு.

கே: எனது அத்தைமகள் சதா என்னைச் சுற்றிச் சுற்றி வருகிறள். என் உள்ளத்தையும் வேறு திருடிவிட்டாள். இவ்விரு குற்றங்களுக்கும் அவளுக்கு என்ன தண்டனைகொடுக்கலாம்?

ப: குற்றங்கள் பாரதூரமானவை. எனவே ஆயுள் தண்டனை கொடுங்கள். அது தான் அவளைக் கலியாணம் செய்துகொள்வது.

டி. பாலன்,
கொழும்பு-7.

கே: தேசிய அரசாங்கத்தில் எந்த வேலையும் செய்யாத ஓர் அமைச்சும் இருக்கிறதா?

ப: ஏன், விளையாட்டு அமைச்சு.

மு. சுவாமிநாதன்,
கொழும்பு-4.

கே: தமிழரசுக் கட்சி தனது மாநாட்டைக் கல்முனையில் நடத்துவதால் ஏற்படக்கூடிய விளைவு யாது?

ப: எங்கு நடந்தாலும் இம் மாநாடு அகில இலங்கையின் கவனத்தை தயும் ஈர்த்துள்ளது.

கே: மாநாட்டிற்குப் பிரதமர் வருகை தருவது பற்றித் தங்கள் கருத்து யாது குயுக்தியாரே?

ப: மாநாட்டில் பிரதமர் கலந்துகொள்வதைத் தடுக்க எதிர்க்கட்சிகள் செய்த முயற்சிகள், தந்திரங்கள் முறியடிக்கப் பட்டது மாநாட்டின் முதல் வெற்றியாகும் என்பது எனது கருத்து.

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: உங்களிடம் கறுப்புப் பணம் இருப்பதாகக் கேள்விப் பட்டேன், உண்மைதானே?

ப: இல்லையே, இப்பொழுது என்னிடம் 'பச்சைப்' பணமல்லவா இருக்கிறது?

எ. தில்லையம்பலம்,
ஏருவூர்.

கே: ஏட்டுச் சுரக்காய் என்பதன் கருத்து யாது?

ப: கடுதாசி என்னும் கமத்திலே பேனு என்னும் கலப்பையால் உழுது மை என்னும் விதையை நட்டு பயிர் செய்து பெற்ற சுரைக்காயே ஏட்டுச் சுரைக்காய் என்பது.

எஸ். சிங்கநாதன்,
ஏருவூர்-3.

கே: திரு. ஜீ ஜீ. யின் இந்து பல்கலைக்கழக, திட்டத்தை திரு. ஆர். ஜீ. ஆதரிப்பதன் நோக்கமென்ன?

ப: தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தைக் குற்றுயிராக்க அந்தப் பிரசாரத்தைப் பயன்படுத்தலா மென்பதே நோக்கம்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல. 1188
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டி அனுப்பப்படும் விணுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

கந்த-ஞானமூத்தன்,
கைதடி. தெற்கு.

கே: ஜவுளிக்கடைக் காரர்களின் தற்போதைய நிலை எப்படி இருக்கிறது?

ப: விலை உயர்ந்த துணிகளைப் பதுக்கிவிட்டு, பல வருடங்களாக விற்பனையாகாதிருந்த நடுத்தரக் கட்டு ஜவுளிகளை கூப்பனுக்குவிட்டு விட்டோமென்ற பெருமிதத்துடன் பதுக்கிய துணிகளை தரகர்மூலம் கறுப்புச் சந்தையில் விற்றுக்கொண்டிருக்கிறர்களாம்.

செல்வி. ஞானகுமாரி,
நீர்கொழும்பு.

கே: என் தம்பி புதுமையான பேர்வழி. எங்கள் தோட்டத்தில் ஒரு மாமரத்தில் கனி பழுத்து குலுங்குகிறது. அதில் அவன் ஆரம்பத்தில் கைவைக்கவே யில்லை. ஆனல் அதற்குக் கல் எறியக்கூடாது என்று அவனை எச்சரித்தபிறகுதான், இரகசியமாக கல்லெறிந்து, மாங்கனி பறிக்கிறன். காரணமென்ன?

ப: இதில் புதுமை எதுவுமில்லை. மனித மனப்பான்மையே அதுதான். 'சாயம் இன்னும் காயவில்லை' என்று ஒரு போர்டு எழுதிவைத்தால் வருகிற போகிற அத்தனைபேரும் ஏன் சாயம்பூசப்பட்ட இடத்தை விரலால் தொட்டுப் பார்க்கிறர்கள் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். போர்டு இல்லாவிட்டால் அதையாருமே தொடமாட்டார்கள். மனித மனப்பான்மையின் தன்மை அது.

எம். எம். முருகேசு,
திருமலை.

கே: நான் கஸ்தூரி என்னும் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். எங்கள் காதலை இரகசியமாக வைத்துக்கொள்ள என்ன செய்யவேண்டும்?

ப: எதைச் செய்தும் பயனில்லை. காதலையும் கஸ்தூரியையும் இரகசியமாக வைத்திருக்க முடியாதென்பது ஒரு பாரசீக முதுமொழி.

'நாரனூர் லிங்கன்',
கம்பளை.

கே: தமக்கும் எம். ஜி. ஆருக்கும் கருத்து வேற்றுமை எதுவுமில்லை யென்று இலங்கையில் கூறிய எஸ். எஸ். ஆர். இந்தியா சென்றதும் எம். ஜி. ஆர். பற்றி பிரச்சினையைக் கிளப்பியதேன்?

ப: தங்கள் கட்சி உறுப்பினர்களிடையேயுள்ள கருத்துவேற்றுமைகளைப் பிறநாட்டில் பறைசாற்றுகிறது திருந்தது அவரது பெருந்தன்மையையேகாட்டுகிறது.

ஆர். மருதைநாயகம்,
தலவாக்கொல்லை.

கே: இலங்கைவாழ் இந்தியர்கள் தாய்நாட்டுக்கு நாடு கடத்தப்பட்டால் அவர்களின் கதி என்னவாகும்?

ப: அதோகதிதான்.

பூ. தயானந்தன்,
கந்தர்மடம்.

கே: 'சோசலிசம்' என்றுல் என்ன? அதில் உட்பிரிவுகள் உண்டா?

ப: சோஷலிஸம் என்றுல் ஏழைமக்களைக் கவரும் ஒரு கவர்ச்சியான சொல். வேறென்றுமில்லை. உட்பிரிவுகள், வெளிப் பிரிவுகளெல்லாம் வெறும் சுயநலப் பிரிவுகள் தான். விஞ்ஞான சோஷலிஸம் என்பது மார்க்ஸ் உருவாக்கிய ஒரு பொருளாதார சமுதாயத் திட்டம்.

சி. இ. அமிர்தகௌரிநாயகி,
அல்வாய் தெற்கு.

கே: யாழ். முனிசிப்பல்சபை கலைக்கப்பட்டதைப் பற்றி அத்தொகுதி எம். பி. வாய்கூடத் திறக்கவில்லையே, ஏன்? வழக்குத் தொடரப்பட முன்பாவது அவர் கருத்தைக் கூறியிருக்கலாமே!

ப: மௌனத்தின் அர்த்தம் அங்கீகாரமே.

ம. ஸ்ரீகந்தராஜ்,
வியாபாரிமூலை.

கே: உடுப்பிட்டி எம். பி. யின் அமெரிக்க சுற்றுலாவினுல், தமிழ் மக்களுக்கு ஏதும் விமோசனம் ஏற்படுமா?

ப: ஏற்படாவிட்டாலும் 2/3 அமெரிக்காவுக்குச் சென்று வந்ததாக கூறிக் கொள்ளலாமல்லவா.

இண்டல்தாசன்,
கொழும்பு-4.

கே: உலகில் மிகவும் போற்றத்தக்கவை எவை?

ப: துக்கமும் ஏமாற்றமும்.

ஏ. சாரநாதன்,
சிலாபம்.

கே: பிறரின் மதிப்பைப்பெற வேண்டுமானுல் நான் என்ன செய்யவேண்டும்?

ப: மற்றவர்களின் சிறுமைகளை மறந்து பெருமையை ஒலிபரப்புங்கள். புகழும், மதிப்பும் உங்களைத் தாமாகவே வந்தடையும்.

இந்த அடையாளத்தை யுடைய கேள்வி கேட்ட வாசகர் மூன்று ரூபா பரிசு பெறுகிறர்.

இரும்புப் பணப்பெட்டிகள்
பீம் நிறுவைகள்
பிளாட்போம் நிறுவைகள்
மற்றும் சகலவித கட்டிட சாமான்களும்
எம்மிடம் சகாய விலையில் கிடைக்கும்.

எம் எஸ். எஸ். ஹமீத்
பிரபல இரும்பு வியாபாரி
315 பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12.

"மஸ்கோனைட்"
அஸ்பெஸ்டாஸ் - சிமிந்தி
நெளிவுத் தகடுகள்
"அட்மோஸ்பெரிக்" முறைப்படி

பிரிட்டிஷ் நிர்ணய பிரமாணம் 690. 1953 & 1963 & இலங்கை நிர்ணய பிரமாணம் 13: 1960 ஆகியவைகளுக்கு இணங்க உற்பத்தி செய்யப்படுகிறது.

நீளம் 4 லிருந்து 10 அடி வரை
தட்டைத்தகடுகள் 4'X4' 6'X3' 6'X4'

அத்துடன் கீழ் கண்டவைகளும் கிடைக்கும்:
முகட்டு ஓடுகள், ஜலதாரை சாமான்கள் வளைவு தகடுகள் வடவெளிச்ச வளைவுகள், காற்று வசதி கவுல்ஸ் பிளைக்ஸ், எக்ஸ்ட்ரெக்டர்கள் முதலியன.

பிரத்தியேக சாமான்கள் ஆடருக்கு செய்து கொடுக்கப்படும்.

அஸ்பெஸ்டாஸ் சிமிந்தி
இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்,
கொழும்பு.

SATHYALAYAM'S
KASA NASINI
காச நாசனி

"காச நாசனி" எல்லாவிதமான இருமல்களையும், அவை. எவ்வளவு நாள் பட்டதானுலும், கடுமையானதானுலும், விரைவில் சுகப்படுத்துகிறது. பீனிசம், நெஞ்சுச்சளி (ப்ரோங்கைடீஸ்) சயரோகம் முதலிய வருத்தங்களுக்கும் மிகச் சிறந்தது.
"ப்ரதிச்சாய ததோகாஸ: காஸால் ஸம்ஜாயதேஹய" என்னும் பிரமாணப்படி, பீனிசத்திலிருந்து இருமலும், இருமலிலிருந்து சயரோகமும் உண்டாகிறது. ஆதலால இருமலை வளர விடாமல், தகுந்த மருந்தை உடனே பாவிக்க எவரும் கடமைப்பட்டிருக்கிறர்கள்.
நீண்டகால ஆராய்ச்சியின் பயனுகக் கண்டு பிடிக்கப்பட்ட இம் மருந்தின், சீக்கிரமாயும், நிரந்தரமாயும் குணமளிக்கும் தன்மை, மற்றெரு இருமல் மருந்துக்கும் இல்லை என்பதை பாவித்தவர்கள் சொல்லுகிறர்கள்.
அளவு: 15 - 25 சொட்டுகள் விகிதம்: தினம் மூன்று முறை
விலை: அவு. போத்தல் ரூபா 5/-

SATHYALAYAM'S
ASTHMA DROPS
சத்யாலயத்தின் ஆஸ்மா ட்ரொப்ஸ்

இளைப்பு (ஆஸ்தமா) நோயை விரைவில் சுகப்படுத்தும் நவீன மருந்து. நானு விதமான இருமல்கள், க்ஷயரோகம், நெஞ்சுச்சளி, (ப்ரோங்கைடீஸ்) முதலியவைகளுக்கும் சிறந்தது, ஊசி மருந்தாலும் Injection தற்கால சாந்தியாவதும் செய்ய முடியாதபடி மூச்சுத் திணறல் ஏற்பட்டிருக்கும், மிகக் கடுமையான நிலைமையிலும், இம் மருந்தை ஒரு முறை கொடுத்தாலும் குணம் கிடைக்கிறது. பொறுக்க முடியாத வருத்தங்களையும், துன்பங்களையும் உண்டாக்கும் இக் கொடிய வியாதியை (ஆஸ்த்மா) நீண்ட காலமாகாமலிருந்தால் விரைவிலும் மிகவும் நாள் பட்டவைகளானுலும் சில வாரங்கள் தொடர்ந்து சாப்பிடுவதாலும், திரும்பி வராதபடி சம்பூரணமாகக் குணப்படுத்துகிறது. ஆஸ்த்மா வியாதிக்கு இது ஒரு சிறந்த மருந்து என்பது பாவிப்பவர்களுக்கு எளிதில் விளங்கும்
அளவு: 15 - 20 சொட்டுகள் தினம் இரு முறை
விலை: அவுன்ஸ் ரூபா 7 - சதம் 50
குறிப்பு: எல்லாவித வியாதிகளுக்கும் வைத்தியம் செய்யப்படும்.
நேரம்: மு. ப. 7-30, 10-30 பி. ப. 3-30, 8-30

எஸ். என். குரு மெடிக்கல் ஹால்
80, புதுச்செட்டித் தெரு, - - கொழும்பு-13

# தமிழே உருவான தானைத் தளபதி

## லண்டன் மாநகரிலும் தனித் தன்மை பேணினுர்



உலகப் பாராளுமன்ற மாநாட்டுப் பிரதிநிதிகள் வரிசையாக வந்து கொண்டிருக்கிருர்கள். லண்டன் மாநகர முதல்வருக்கு (லோட்மேயர்) அவர்களை அறிமுகப்படுத்தும் சடங்கு ஆரம்பமாகிறது. மாநாட்டுப் பிரதிநிதிகளில் ஒருவர் - சற்று குள்ளமான தோற்றம். அவரையும் லோட் மேயருக்கு அறிமுகப் படுத்துகிருர் மாநாட்டுச் செயலாளர். அறிமுகப் படுத்தப்பட்ட பிரதிநிதியைப் பார்த்து லோட் மேயர் வினவுகிருர் "நீங்கள் தமிழ்நாட்டுக் குறுநில மன்னர் வழித்தோன்ருலா?" என்று. "அப்படியும் கூறுகிருர்கள். ஆனுல் நான் இலங்கையின் வட பகுதியில் ஒரு சாதாரண தமிழ் குடும்பத்தில் பிறந்தவன் - ஒரு பாராளுமன்றப் பிரதிநிதி" என்கிருர் அறிமுகப்படுத்தப் பட்டவர். "இல்லை; உங்கள் உடையைப் பார்த்ததும் நான் வரலாற்றில் படித்த அன்றைய 'சோழ' மன்னர்களின் நினைவுதான் எழுந்தது" என்கிருர் லோட் மேயர். "புகழ் பூத்த சோழ மன்னர்கள் எங்கள் மூத்தோர்தான்; ஆனுல் இது நமது தேசிய உடை" என்கிருர் அறிமுகப்படுத்தப்பட்டவர். "உங்கள் தேசிய உடையில் ஒரு கம்பீரம் இருக்கிறது" என்கிருர் லோட் மேயர். 'நன்றி' என்று கூறி விடை பெறுகிருர் அறிமுகப் படுத்தப்பட்டவர்.

### தேசிய உடையில் பெருமிதம்

இந்த உரையாடல் சரியாக ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் லண்டன் மாநகர சபைக் கட்டிடத்தில் நடைபெற்றது. விருந்து வைத்தவர் லண்டன் நகர மேயர். அறிமுகப் படுத்தப்பட்டவர் வேறுயாருமல்ல - தமிழினத்தின் தானைத் தளபதி வட்டுக்கோட்டை தந்த தியாகச் செம்மல், செயல் வீரர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களே.

உலகப் பாராளுமன்ற மாநாட்டுக்கு இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சிப் பிரதிநிதியாக அன்று (1957) திரு. அமிர்தலிங்கம் அவர்கள் சென்றிருந்தார்கள். மாநாட்டின் முடிவில் பிரதிநிதிகள் அனைவருக்கும் லண்டன் மேயர் விருந்து வைத்தார். பல நாட்டு அரசியற் பிரமுகர்களும் கலந்து கொள்ளும் முக்கிய நிகழ்ச்சியாக இது அமைந்திருந்தது. இவ்வைபவத்திற்கு கோட்டும் சூட்டும் அணிந்து சென்று நம்மவரின் செயற்கைத் தன்மையைக் காட்ட விரும்பாத திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தேசிய உடையில் தமிழர்களுக்கு உரிய தலைப்பாகையும் அணிந்து சென்ருர். இந்த நிகழ்ச்சி திரு. அமிர்தலிங்கம் அவர்களின் தமிழ்ப்பற்றையும் தமிழ் நெஞ்சத்தையும் படம் பிடித்துக் காட்டுவதாக உள்ளது.

ஆங்கிலத்தின் அகர வரிசையை மட்டும் தெரிந்தவர்கள் கூட தேசிய உடை அணிய வெட்கப்படும் நேரத்தில், ஆங்கில மொழியிலும் புலமை பெற்ற திரு. அமிர்தலிங்கம் அம் மொழி பிறந்த நாட்டின் தலைநகரில் தன்னைத் தமிழனுகக் காட்டிக் கொண்டார். திரு. அமிர்தலிங்கம் அவர்களின் தமிழ்த் தொண்டின் தூய்மையை எடுத்துக்காட்ட இது ஒன்றே போதுமானதாகும்.

திரு. அமிர்தலிங்கம் அவர்களின் உயர் நிலைப் பள்ளி வாழ்க்கையின் போதே தமிழினத்தின் விடுதலைக்காக உழைக்க வேண்டுமென்ற விருப்பம் தோன்றிவிட்டது. உயர் நிலைப்பள்ளி வாழ்க்கையில் உருவாகிய இக் கரு பல்கலைக்கழக வாழ்க்கையின் போது நோக்காடு கண்டு, சட்டக் கல்லூரிக்குள் கால் அடி எடுத்து வைக்க முன்னரே முழு உருவில் பிரசவமாகி விட்டது.

1927-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26-ம் திகதி பிறந்த திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தமது ஆரம்ப கல்வியை பண்ணுகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலையில் பெற்ருர். அதைத் தொடர்ந்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் சேர்ந்து பயின்று நேராகப் பல்கலைக்கழகத்துள் பிரவேசித்தார். விக்ரோறியாக் கல்லூரியின் ஐம்பதாண்டு வரலாற்றில் திரு அமிர்தலிங்கம் அவர்களே அக்கல்லூரியிலிருந்து முதலாகவும் கடைசியாகவும் பல்கலைக்கழகப் பிரவேசம் பெற்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

பல்கலைக் கழகத்தில் கலைத் துறைப் பட்டம் பெற்றதும் நேராக சட்டக் கல்லூரி சென்று முதல் வகுப்பில் அறவாதிப் பரீட்சையில் சித்தியெய்தினுர். அரசியல் திரு. அமிர்தலிங்கம் அவர்களை மிகவும் சிறு வயதிலேயே ஆட்கொண்டு விட்டது. உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் நாட்களிலேயே அரசியல் வாதிகளுடன் தர்க்கித்து உண்மை காண அவர் பல முறை முயன்றிருக்கிருர். பல்கலைக் கழக வாழ்க்கை அவரை அரசியலில் புடம் போட்டு எடுத்தது. மார்க்சிய சித்தாந்தம் முதல் சகல அரசியற் தத்துவங்களையும் பல்கலைக் கழகக் காலத்திலேயே அவர் தெரிந்து கொண்டார்.

### காங்கிரஸ் பிரச்சாரம்

பல்கலைக் கழக இறுதிப் பரீட்சையை எழுதிவிட்டு வெளியில் வந்த திரு. அமிர்தலிங்கம் அவர்களிடம் ஒரு பெரும் பொறுப்பு சுமத்தப் பட்டது. 1947-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தமிழ் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கான பிரச்சாரப் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. கடமைமை உணர்ந்து பொறுப்புடன் நடந்து அவர் நடத்திய புயல் வேகப் பிரச்சாரம் மாபெரும் வெற்றியைத் த. காங்கிரசிற்குத் தேடிக் கொடுத்தது. அன்று முதல் அவரும் தீவிர அரசியல் வாதியாக்கப்பட்டார்.

தமிழ் காங்கிரஸ் தறிகெட்டு நிலை கெட்டு ஏற்ற பணியை இடையில் மறந்த நேரத்தில் தந்தை செல்வாவின் இடக்கரமாக அமரர் வன்னியசிங்கமும் வலக்கரமாக திரு. அமிர்தலிங்கமும் நின்று தமிழரசுக் கட்சியைக் கட்டி வளர்த்தார்கள். சட்டக் கல்லூரியிலிருந்து வெளியேறிய நாற்பத்திரண்டாவது நாள் தந்தை செல்வாவின் ஆணை பிறந்தது. இளைஞனுக ஆட்பலமும் பணப் பலமும் மிக்கவர்களை எதிர்த்து 1952-ம் ஆண்டுத் தேர்தலில் வட்டுக் கோட்டைத் தொகுதியில் தமிழரசு வேட்பாளராகப் போட்டியிட்டார்.

(16-ம் பக்கம் பார்க்க)

எமது புகழ் பெற்ற
T. K. மருந்துகளில் சில
ஒருமுறை பாவித்து உண்மை உணருங்கள்.

T. K. நேத்திரா அமிர்த தைலம்
தலை, கண் சம்பந்த நோய்களை நீக்கி கூந்தலை அழகாக வளர்க்கிறது. ரூ. 3/-

T. K. ஜீரண சக்தி லேகியம்
வாய்வு ரோகங்களை நீக்கி மலர்ச்சிக்கலையும் நிவர்த்திக்கிறது. ரூ. 3/-

T. K. கார்பால்
முகப்பரு, வேனல் கட்டி, கரப்பான், சொறி சிரங்கு, தீப்பட்ட புண் முதலியவைகளை குணமாக்கவல்லது. சதம் -/75.

T. K. கல்நார் பற்பொடி.
பல் சம்பந்த நோய்களை நீக்கி, பற்களை சுத்தமாகவும், உறுதியாகவும் இருக்கச் செய்கிறது.
பக்கட் சதம் 15, டின் ரூ. 1/-

T. K. சுகானந்த லேகியம்
உடல் வலிமைக்கும், தேக ஆரோக்யத்துக்கும், இரத்த விருத்திக்கும் அதியுன்னத டானிக்.
புட்டி ரூ. 6/-

விபரங்களுக்கு:
பாக்கியலெட்சுமி வைத்தியசாலை
செல்லராஜா
அன் கோ.,
170, செட்டியார் தெரு, கொழும்பு-11.
★
டிக்கோயாவில்எமது T. K.மருந்துகள் கிடைக்குமிடம்!
வியாபாரிகளுக்கு விசேட கம்சன் தரப்படும்
வி. பி. பி. ஆடர் ஏற்றுக்கொள்ளப்படும்





பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறைவாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தந்தி: தாமரை
தொலைபேசி: 3597-6522

கையிருப்பிலிருந்து
இப்பொழுது கிடைக்கின்றன
● "கியோனைட்ஸ்" அஸ்பெஸ்டஸ்
கொறகேற்றட் பிளெய்ன், ஷீற்ஸ்
★ M.S.ஆங்கிள்ஸ், பிளாற்ஸ், & ஸ்கொயேர்ஸ்
★ அலுமினியம் கொறகேற்றட் & எம்போஸ்ட் ஷீற்ஸ்
★ P. V. C. பைப்புகள் & பிற்றிங்சுகள்
★ E. W. பைப்புகள் & பிற்றிங்சுகள்
★ வோஷ் பேசின்கள், லோலெவல் பிடேற்ஸ் ஸ்கொட்டிங் பான்ஸ், சிங்க்ஸ் ஆகியனவும் வெல்டெட் மெஷ், வயர் மெஷ், B. R. C. & எக்ஸ்பான்கடட் மெட்டல் ஆகியவற்றுக்கு
தொடர்பு கொள்ளுங்கள்:
பாச்சா அன் கம்பனி,
320, பழைய சோனகத் தெரு,
கொழும்பு—12.
தந்தி: சரன்டிவ் (SARANDIVE) தொலை பேசி: 5036, 3679

# மொராக்கோ சுதந்திரத்திற்கு போராடிய வீர வரலாறு

## வின்சன்ட் சர்ச்சிலுடன் நடத்திய கடிதப் போர்

## டாக்டரின் வாழ்வில் சுவையான சம்பவங்கள்

**பல** வருடங்களுக்கு முன்பு...

மொராக்கோ நாட்டின் சுதந்திரத்திற்காக, அப்துல் கரீம் என்பவர் தலைமையில் பிரெஞ்சுக்காரரையும் ஸ்பானிஷ் காரரையும் எதிர்த்து தீவிரமான போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலம். மொராக்கோ நாட்டில் வாழக்கூடிய 'மூர்' எனறு அழைக்கப்படும் முஸ்லிம் மக்கள் தங்கள் தாயகத்தின் தளையறுக்க நடத்திக்கொண்டிருந்த வீர சாகசங்கள் உலகமெங்கும் உள்ள சுதந்திரம் விரும்பிகளை பெரிதும் கவர்ந்தன.

அக் காலகட்டத்தில் இயல்பாகவே விடுதலை வேட்கையும் அரசியல் ஆர்வமும் நிரம்பப் பெற்ற ஈழத்தைச் சேர்ந்த அந்த இளைஞன் இங்கிலாந்தில் மருத்துவம் பயின்றுகொண்டிருந்தான். அவனையும் மொராக்கோ மக்களின் சுதந்திரப் போர் கவர்ந்திழுத்தது. ஆக்ஸ்போட், கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக் கழகங்களில் படித்துக்கொண்டிருந்த இன்னும் பல மாணவர்களும், அப்துல் கரீமின் விடுதலைப் போருக்கு உதவி செய்ய ஆர்வம் காட்டினர். நமது ஈழத்து இளைஞனும் ஏனைய மாணவர் பலரும் கூடித் திட்டமிட்டனர். அதன் பயனாக மாணவர் படையொன்று அப்துல் கரீமுக்கு உதவி செய்ய மொராக்கோ சென்றது. அந்தப் படையில் நமது துடிப்புள்ள இளைஞன் முன்னணியில் நின்றான். மொராக்கோவில் ஒரு வெள்ளையருக்குச் சொந்தமான ரகசிய பங்களாவில் இருந்துகொண்டு அப்துல் கரீமின் விடுதலைப் போருக்கு மறைமுகமாக பல உதவிகள் செய்து வந்தனர். அவ்விளைஞர்கள். அதன் பயன்...

### துருப்புக்களுடன் மோதல்

ஒரு நாள் இரவு. 12 மணி. மொராக்கோ நாட்டு கரீமுக்கு இவர்கள் உதவி செய்வதை எப்படியோ அறிந்துவிட்ட ஸ்பானிஷ், பிரஞ்சு துருப்புக்கள், இவர்கள் குடியிருந்த வீட்டைச் சுற்றி முற்றுகையிட்டுவிட்டன. அதன் பின்பு என்ன? இரண்டு பகலும் இரண்டு இரவும் இந்த மாணவர் படைக்கும், பிரஞ்சு, ஸ்பானிஷ் துருப்புக்களுக்கும் பயங்கரச் சண்டை நடைபெற்றது. பிரெஞ்சுத் துருப்புக்களிடம் இருந்த ஆயுத பலம் மாணவப் படையிடம் இல்லாத போதிலும் இருந்த ஆயுதங்களுடன் உக்கிரமாக போராடினார்கள். சண்டையில் பல மாணவர்களுக்குக் காயங்கள் ஏற்பட்டன. ஈற்றில் இதையறிந்த வெள்ளை அரசாங்கம் இடையில் தலையிட்டு சமாதானம் செய்து வைத்தது. பயங்கரச் சண்டையின் போது நமது ஈழத்து மாணவருக்கும் வலது முழங்காலில் குண்டு பாய்ந்து காயம் ஏற்பட்டது. அதன் காரணமாக எட்டு மாதங்கள் வைத்திய நிலையத்தில் இருந்து சிகிச்சை பெற வேண்டி வந்தது.

இப்படி படிக்கும் போதே, மொராக்கோ நாட்டு முஸ்லிம் மக்களின் சுதந்திரத்திற்காகப் போராடி குண்டடிபட்ட ஈழத்து இளைஞன் வேறுயாருமல்ல. அவர்தான் நம்மவருக்கும் தெரிந்த இரும்பு மனிதர் டாக்டர். இ. மு. வி. நாகநாதன் அவர்கள். அவர் இங்கிலாந்தில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே இந் நிகழ்ச்சி நடைபெற்றது.

### பரம்பரை உறைவிடம்

சிறுவயதிலிருந்தே டாக்டரிடம் கல்வியிலும், விளையாட்டிலும் அக்கறை இருந்ததுடன், அரசியலிலும் ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வம் தான் கிளை விட்டு, முளை விட்டு, இன்று அவரை இந் நாட்டின் அரசியற் தலைவர்களில் ஒரு முக்கிய இடத்தை வகிக்க செய்திருக்கிறது.

டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களின் முழுப் பெயர் இலங்கை முருகேசு விஜயரத்தினம் நாகநாதன் என்பதாகும். டாக்டரது



முன்னோர்கள் பரம்பரை பரம்பரையாக நல்லூர் சங்கிலித்தோப்பிலேயே வாழ்ந்து வந்தவர்கள். டாக்டரின் தந்தையார், சென்னை சர்வகலாசாலையில் பதிவாளராகக் கடமையாற்றியிருக்கிறார்.

### படிப்பு

டாக்டர் அவர்கள் தமது ஆரம்பப்படிப்பை, செல. ஜோன்ஸ் கல்லூரியிலும், பின்னர், சென்னைப் பல்கலைக் கழகத்திலும், வைத்தியப் படிப்பை 'செல்டின்காம்' சர்வகலாசாலையிலும் படித்தார்.

இங்கிலாந்தில் வைத்தியப் படிப்பை மேற்கொண்டிருந்த காலை விளையாட்டுக்களிலும் அதிக ஆர்வம் காட்டினார். கால் பந்தாட்டம், கிரிக்கெட், ஹொக்கி இவற்றில் அதிகம் ஈடுபட்டார். இங்கிலாந்திலுள்ள ஹொக்கி விளையாட்டுக் கழகத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட முதல் இந்தியர் இப்பொழுது லோகசபை அங்கத்தவராக இருக்கும் நாகா தலைவர் திரு ஜெயபால்சிங். முதல் இலங்கையர் நமது டாக்டர் தான்.

### விளையாட்டு வீரர்

டாக்டர் அவர்கள் 'ஹெமிஸ்ற் ஹொக்கி கிளப்'பின் தலைவராக விளங்கியது மட்டுமின்றி, இந்தியன் ஒலிம்பிக் ஹொக்கிக் குழுவில இடம் பெற்று ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியிலும் பங்கேற்றார்.

விளையாட்டுத் துறையில் ஆர்வம் அதிகம் இருந்தது போலவே பொதுநலத் துறையிலும் அக்கறை காட்டி வந்தார். இந்தியன் மஜ்லிஸ், இந்திய மாணவர் சம்மேளனம் இவற்றின் தலைவராகவும் செயலாளராகவும், 1927 முதல் 1929 வரை பணியாற்றினார்.

### லோர்ட் பேக்கன்ட் தோற்றார்.

இந்தியன் மஜ்லிஸில் டாக்டர் உறுப்பினராக இருந்த போது ஒரு பட்டிமன்றத்தில் பங்கு பற்றிப்பேச வேண்டியிருந்தது. அதில் மறுபக்கம் பேசவிருப்பவரோ லோர்ட் பேக்கன்ட்என்பவர். லோர்ட் பேக்கன்ட் குறுக்கிட்டுப்பேசுவதிலும், எதிரிகளை மடக்குவதிலும் சிறந்த சொல்லாற்றல் பெற்றவர் என அக்காலத்தில் பெயர் பெற்றிருந்தார். ஆனால் அன்று நடைபெற்ற அந்தப் பட்டிமன்றத்திலேலோர்ட்பேக்கண்ட்டின் பேச்சுக்களுக்கெல்லாம் சுடச்சுட பதில் கொடுத்து லோர்ட் பேக்கன்ட்டை விட ஒருபடி மேலே சென்றுவிட்டார் நமது டாக்டர். அன்று பார்வையாளராக வந்திருந்தவர்கள் எல்லாம் டாக்டரிடம்வந்து இதுவரைஇப்படிப் பட்டபேச்சை நாங்கள் கேட்டதில்லையென்று அவரைப் பாராட்டிவிட்டு சென்றார்களாம். லோர்ட் பேக்கன்ட் அவர்களே நாகநாதனின் முதுகில் தட்டி, 'அருமை அருமை' என்று பாராட்டினார். அத்தகைய பேச்சாற்றல் கைவரப் பெற்றவர் டாக்டர் நாகநாதன்.

### சர்ச்சிலுடன் கடிதப் போர்

இங்கிலாந்தில் டாக்டர் நாகநாதனின் மாணவ வாழ்க்கையின் போது, வின்சன்ட் சேர்ச்சிலுக்கும் டாக்டருக்குமிடையில் நடைபெற்ற 'கடிதப் போர்' மறக்க முடியாத ஒன்றென்பதுடன், டாக்டரின் தூர திருஷ்டியையும் கூர்ந்து நுணுகி நோக்கும் தன்மையையும் வெளிப்படுத்துகிறது.

1928-ம் ஆண்டு முதலாவது உலகயுத்தம் முடிந்துவிட்ட நேரம். இங்கிலாந்தில் நடைபெற்ற தேர்தலில் தொழிற் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெற்றியீட்டினர். அதன் பயனாக திரு. ராம்ஸ்டெம்பிரதமரானார். புதிதாக ஏற்பட்ட தொழிற்கட்சி அரசாங்கத்துக்கு பொருளாதாரப் பிரச்சினை உறுத்திற்று. பணத்தை மிச்சம் பிடிக்க என்ன என்ன நடவடிக்கை மேற்கொள்ள முடியுமோ அதையெல்லாம் செய்தனர். பணத்தை மிச்சம் பிடிக்கும் ஒரு வழியாக-சிங்கப்பூர் துறைமுகத்தை கடற்படைத் துறைமுகமாக்க முன்னைய கன்சவேட்டிங் அரசாங்கம் தீர்மானித்திருந்த திட்டத்தை—தொழிற் கட்சி அரசாங்கம் கைவிட்டது. தொழிற் கட்சி ஆட்சியின் இச்செயலைக் கண்டித்து சேர். வின்சன்ட் சர்ச்சில் 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையில் ஒரு கடிதம்எழுதினார்.


சர்ச்சில் எழுதிய கடிதத்தை டாக்டர் நாகநாதன் அகஸ்மாத்தாக கண்டார். நாகநாதன் அவர்கள் ராணுவ பயிற்சி பெற்றதுடன் யுத்த முறைகளும் நன்கறிந்தவர். படை நடத்தும் ஆற்றலும் அவரிடம் உண்டு. சர்ச்சிலின் கடிதத்தைக் கண்ட டாக்டரின் 'ராணுவ மூளை' வேலை செய்தது. உடனே சர்ச்சிலுக்கு பதிற் கடிதம் எழுதினார். சிங்கப்பூர் துறைமுகத்தைகடற்படைத் துறைமுகமாக்குவது வீண் வேலையென்றும், சுற்றிவர நாடுகள் இருப்பதால் எப்பொழுதும் அதற்கு ஆபத்து ஏற்படலாமென்றும் கருத்து வெளியிட்டு, நல்லூர், சங்கிலித்தோப்பு என்று மூகவரியிட்டு டைம்ஸ் பத்திரிகைக்கு அனுப்பினார். மறுநாள் கடிதம் பிரசுரமானது.

இதற்கு மறுமொழியாக சேர்ச்சில் மீண்டும் ஒரு கடிதம் எழுதினார். குறித்த நபரது கூற்றுக்கு எவ்வித ஆதாரமுமில்லை என்றும் அவரது கூற்றில் உண்மையில்லையென்றும் எழுதி இருந்தார். இதைக் கண்டதும்விடுவாரா நாகநாதன்? உடனே பதில் கடிதம் தயாரானது. 'சர்ச்சில் தூர நோக்கு இல்லாமல், இப்பொழுதுள்ள கண்கொண்டே இனி வரும் காலத்தையும் நோக்குகிறார். சிங்கப்பூரில் கடற்படை அமைக்கட்டும் அது எத்தனை வருடங்களுக்கு இருக்கப் போகிறதுஎன்பதைபொறுத்திருந்து பார்ப்போம்' என்ற கருத்தைக் கடிதம் கூறியது.

### டாக்டர் கூற்று உண்மையாகியது

டாக்டர் நாகநாதன்சேர்ச்சிலுக்குச் சுட்டிக் காட்டிய அந்த உண்மையை இரண்டாவது உலகயுத்தம் உலகுக்கு உணர்த்திற்று. ஜப்பானியரின் குண்டுவீச்சால்சிங்கப்பூர் தளம்பொரிப் பொரியானது. இதையடுத்து 1944ல் இலங்கைக்கு கவர்னராகவும் தளபதியாகவும் வந்த அட்மிரர் லேடன், 15 வருடங்களுக்கு முன்பு டைம்ஸில் கடிதம் எழுதிய டாக்டர் நாகநாதன் யார் என்பதைத் தேடிக் கண்டு பிடித்து நமது டாக்டரின் தூர திருஷ்டியை

(18-ம் பக்கம் பார்க்க)

திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கைவாய்ந்த பம்ப்

விங்கெட்

நிர்மாண இயந்திரப் உற்பத்தியில் உலகப்பிரசித்திபெற்ற மெஸர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான, உறுதிவாய்ந்த தண்ணீர் பம்ப்கள், அதிககாலம் மிகத்திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிகமிகக் குறைவு. மிகப் பொட்டா பொட்டி வகைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ரோக் பெற்றோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்குச் சிக்கனமானவை. ஸம்பிடம் அவற்றில் பலரக உபகரணங்கள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், கை உருளைகளும் கிடைக்கும்.

உபவிநியோகஸ்தர்கள்:

ராஜூருதன் அன் கம்பெனி; 244, கே. கே. எஸ். ரோடு, யாழ்ப்பாணம்.

மேலும் விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

இலோன் மனுபக்ஷரர்ஸ் அன். மேர்சன்ட்ஸ் லிமிடெட்

121, சேர்ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை கொழும்பு-2 த. பெ. 1304

தொ. பேசி: 79088, 79093

உயர்ந்த சேவை

1½" மொடல்-மணித்தியாலம் 1500 - 6000 கலன் இறைக்கிறது.

2" மொடல்-மணித்தியாலம் 1680 - 11000 கலன் இறைக்கிறது.

3" மொடல்-மணித்தியாலம் 4800 - 16800 கலன் இறைக்கிறது.

டிலிவாக்கேர்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும தேவை ஆகக் கூடுதல் முழு ஹெட் 70 அடி

ஆகக் கூடுதல் சக்ஷன் லிவ்ட் 25 அடி

எமது பிரதிநிதியை விசாரிக்கவும்: எம. பூபாலசிங்கம, 244, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். போன: 278

# உலக மொழியியற் பல்கலைக் கழகங்கள்

**தமிழ்ப் பல்கலைக் கழகக் கோரிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் சமீபகாலமாக, மொழியடிப்படையில் உலகத்தில் எந்த நாட்டிலும் பல்கலைக் கழகங்கள் அமைந்திருக்கவில்லையென்று கூறி வருகிருர்கள். அவர்களின் தவருன கருத்துக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையில் உலகின் பல நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கும் மொழியிற் பல்கலைக் கழகங்கள் பற்றி புள்ளி விபரத்துடன் இங்கே தருகிருர் உள்ளூராட்சி அமைச்சர் கனம் மு. திருச்செல்வம் அவர்கள்.**

முன்னேறி வரும் நாட்டுக்கு முழுமைபெற்ற பல்கலைக்கழகம் ஒரு தோன்ருத் துணையாகும். நாட்டின் பொருளியல் தொழிலியல் வளர்ச்சிக்கு நல்ல முறையில் திட்டமிடுபவர்களை உருவாக்கித் தருவதும் பல்கலைக் கழகமே. முன்னணியில் நிற்கும் நாட்டின் அறிஞர்கள் தங்கள் நாட்டில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு பின் தங்கிய நாட்டின் முன்னேற்றத்திற்குத் திட்டங்களை வகுத்து உதவலாம். ஆனல், சொந்த நாட்டு அறிஞர்களால் மட்டுமே அந்நாட்டின் இயற்கைசால் அமைப்புக்களையும் நெளிவு சுழிவுகளையும் தெரிந்து முன்னேற்றத் திட்டங்களை முழுமைபெறச் செய்யமுடியும்.

ஒரு முழுமைபெற்ற பல்கலைக்கழகம் ஒரு நாட்டின்--இனத்தின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக விளங்குவதுடன்; அந்த நாட்டு--இனத்து மக்களின் தனித்தன்மையைப் பேணிக் காக்கவும் ஒரு பேரரணுக எழுந்து நிற்கக்கூடிய வலிமைபெற்றதாகும். உலகியல் வரலாற்றை நாம் ஆய்ந்துசெல்லும் பொழுது இந்த உண்மையைக் காண முடியும். ஒரு இனத்தின் பண்பாடு-மொழி கலாசாரத்திற்கு பாதுகாவலனுக பல்கலைக்கழகங்கள் விளங்கியிருப்பதுடன் விடுதலைச் சிற்பிகளைத் தோற்றுவிக்கும் உலைக் கூடங்களாகவும் அவை செயற்பட்டிருக்கின்றன.

## இனப் பாதுகாப்புக்கு அவசியம்

இந்த வகையில் பல இன்னல்களுக்கும் இடர்ப்பாடுகளுக்குமிடையில் முன்னேறி வரும் தமிழ்பேசும் மக்களுக்கு இன்று ஒரு தமிழ் பல்கலைக் கழகம் தவிர்க்கமுடியாத தேவையாக இருக்கிறது என்பதை நியாயபுத்தி படைத்த எவரும் மறுக்கமுடியாது. தமிழ்பேசும் மக்களுக்கு அவசியம் தேவை என்று கருதப்படும் பல்கலைக்கழகம் எப்படிப்பட்டதாக அமைய வேண்டும் என்பதும் நமது சிந்தனைக்குரிய ஒன்ருகும். இன்று எமக்கு வேண்டியது நமது பண்பாடு-மொழி--கலாசாரம் ஆகியவற்றைப் பேணிக்காக்கக் கூடியதும்; நமது வளமான பிரதேசத்தைச் செல்வச் செழிப்புடன் திகழச் செய்யக் கூடிய அறிஞர்கள், பொறியியலாளர்களை உருவாக்கித் தரக்கூடியதுமான ஒரு பல்கலைக்கழகமே. இந்த அடிப்படை இலட்சியத்துடன் நோக்குகையில் நமக்கு வேண்டியது முழுமை பெற்ற தமிழ் பல்கலைக்கழகம் என்பதை எவரும்மறுக்க முடியாது.



கனம் மு. திருச்செல்வம் கியூ. சி.
உள்ளூராட்சி அமைச்சர்

தமிழ்ப் பல்கலைக் கழகம் என்று நாம் கூறுகையில்சிலர் மொழியியல் அடிப்படையில் பல்கலைக்கழகங்கள் உலகில் உண்டா என்ற கேள்வியை எம் முன் வைக்க முற்படுகிருர்கள். உலகில் எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும் அங்கு மொழியடிப்படையிலான பல்கலைக்கழகங்கள் பரவிக்கிடப்பதை நாம் காண முடியும்.

## மொழியியற் பல்கலைக்கழகங்கள்

மொழியையும் பண்பாட்டையும் வளர்க்க ஒவ்வொரு மொழிக்கும் தனிப பல்கலைக கழகம் வேண்டுப. இந்த உண்மையை உலகக் கல்விமான்கள் ஒப்பிஉள்ளார்கள். அந்த அடிப்படையிலேயே நாமும் தமிழ்ப்பல்கலைக்கழகக் கோரிக்கையைத் துணிந்து முன்வைத்துள்ளோம். அன்று யூதர்கள் பலஸ்தீனத்தில் இடம்பிடித்துக் கொண்டதும் அவர்கள் செய்த முதல் வேலை தமக்கென ஒரு அறிவகத்தை நிறுவியதே. அப்படியொரு அறிவகத்தின் மூலமே தமது தனித்துவத்தைக் காப்பாற்றவும், தமது நாட்டு முன்னேற்றத்தை வழிப்படுத்தவும் முடியும் என்று நம்பினர்கள். அதை நிருபித்தும் காட்டினர்கள்.

உலக நாடுகளில் எங்கும் தேசியப் பல்கலைக் கழகங்கள் மொழியியல் அடிப்படையிலேயே இயங்குகின்றன. இதற்கு மாருன கருத்தை முன்வைப்பவர்களின் கவனத்திற்கு சில உதாரணங்களை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

## கனடாவில்

கனடாநாட்டில் பிரெஞ்சும், ஆங்கிலமும் அந்நாட்டு மொழிகளாக உள்ளன. அங்கு இவ்விரு மொழிகளினதும் அடிப்படையில்பல்கலைக் கழகங்கள் உள்ளன. நமக்கு பல வழிகளிலும் தொடர்புடைய சிங்கப்பூர் மிக அண்மையிலேயே விடுதலைபெற்றது. இங்குள்ள மிகப்பெரிய பல்கலைக்கழகமான 'நங்சாங்' பல்கலைக்கழகம் மொழிஅடிப்படையிலேயே இயங்கி வருகிறது. சினமொழி இப் பல்கலைக்கழகப் போதனமொழியாகும். அதே நேரத்தில் ஆங்கில மொழியைப் போதனமொழியாகக்கொண்ட பல்கலைக்கழகமும் சிங்கப்பூரில் இருக்கிறது.

## கொங் கொங்கில்

கொங் கொங்கிலும் இதே போன்று சினமொழிப் பல்கலைக்கழகம் தனியாகவும், ஆங்கிலமொழிப் பல்கலைக் கழகம் தனியாகவும் உள்ளன.

## பெல்ஜியத்தில்

பெல்ஜியத்தில் ஒவ்வொரு மொழிக்கும் தனிப பல்கலைக கழகங்கள் உண்டு. டச் மொழிக்கு 'ஜென்ற்' பல்கலைக்கழகமும், பிரெஞ்சு மொழிக்கு 'லீக்' பல்கலைக்கழகமும், பிரெஞ்சு-டச்சு மொழிகளின் ஒப்பிலக்கணக் கல்விக்கு 'பொவெயின்' பல்கலைக்கழகமும், பிரெஞ்சு மொழி பேசுபவர்களின் தொழில் நுட்பக்கல்விக்காக 'மொன்ஸ்' தொழில் நுட்பக் கல்லூரியும், டச்சு-பிரெஞ்சு-ஆங்கிலம் ஆகியவற்றைப் போதனமொழியாகக் கொண்ட கணக்கியற் கல்லூரியும், அந்நாட்டு மருத்துவக் கல்விக்காக டச்சையும் பிரெஞ்சையும் போதனமொழிகளாகக் கொண்ட 'பிறின்ஸ் ரோஸ் போல்ட்ரொப்பிக்கல்' மருத்துவக் கல்லூரியும் பெல்ஜித்தில் இருக்கின்றன.


## பின்லாந்தில்

பின்லாந்தில் பத்துவிகிதத்தினர் பேசும் சுவீடிஷ் மொழிக்கும் தனிப் பல்கலைக் கழகம் இருக்கிறது. 'அபோ 'அக்கடமி' என்பது சுவிடிஷ் மொழியைப்போதனமொழியாகக்கொண்ட பல்கலைக் கழகமாகும். பின்னிஷ்-சுவிடிஷ் மொழிக் கல்விக்காக 'ஹெல்சிங்கி' பல்கலைக்கழகம் வேறு இங்கு இருக்கிறது. அத்துடன் பின்னிஷ்மொழிக்கான 'உழு' பல்கலைக்கழகமும், அந்நாட்டவரின் பொறியியற் கல்விக்காக பின்னிஷ்--சுவிடிஷ்மொழிகளைப் போதனமொழியாகக் கொண்ட பொறியியற் கல்லூரியும் இங்கு செயற்படுகின்றன.

சுவிட்சர்லாந்தில்ஜெர்மன் மொழிக்கு 'பேரல்' பலகலைக் கழகமும், 'ஜுரிச்' பல்கலைக்

(18-ம் பக்கம் பார்க்க)



# முஸ்லிம்களின் தனித் தன்மையை ஏற்றவர்கள் தமிழரசுக்கட்சியினரே

---0---

# மொழி உரிமையில் தேசிய அரசின் நிலை

---0---

## தமிழரசுத் தந்தை பேட்டி

"எமது கட்சியின் தேசிய மாநாடு முதன் முறையாக இந்துக்களும் இஸ்லாமியர்களும் கலந்து வாழும் கல்முனையில் நடைபெறுகிறது. கல்முனையிலிருந்து தெற்கே பொத்துவில்வரை உள்ள பிரதேசத்தில் முஸ்லிம் பெருமக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எங்கள் கட்சியின் கொள்கைப்படி இப்பகுதி சமஷ்டி இலங்கையின் ஓர் அங்கமாகத் திகழும். இந்த முறை முஸ்லிம் மக்களுக்கு ஒரு பெரும் சலுகையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை' என்று தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பத்தாவது தேசிய மாநாட்டையொட்டி அவர்களைப் பேட்டி கண்ட பொழுது நமது நிருபரிடம் கூறியுள்ளார்.



'தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்குவதற்கு தமிழரசுக் கட்சியும் முன்னின்று உழைத்தது. இன்று தேசிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஓர் ஆண்டு கழிந்துவிட்டது. இக்காலத்துள் தமிழ் பேசும் மக்களின் முந்திய நிலையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக நீங்கள் கருதுகிறீர்களா' என்ற கேள்விக்கு தமிழரசுத் தந்தை அவர்கள் பதில் கூறுகையில்!

'மொழி விடயத்தில் எங்கள் கோரிக்கை ஓரளவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மேலும் தேசிய அரசாங்கத்தின் கீழ் ஓர் அங்கமாக மாவட்ட சபை ஏற்பட்டு எங்கள் பகுதியின் ஆட்சி உரிமை எங்கள் பொறுப்பில் வரும்பொழுது மேலும் பல நன்மைகள் ஏற்படும். இதனால் எமது நிலை உயருவதுடன் எமது உரிமைகளில் சிலவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.


'இவையனைத்தும் நமது சமஷ்டிக் கோரிக்கைக்கு சமமாகமாட்டாது. மாவட்ட சபைக்கும் சமஷ்டி அமைப்புக்கும் இடையில் நிறைய வேறுபாடு உண்டு. ஆயினும் சமஷ்டி அமைப்பை எமது இலக்காகவைத்துக்கொண்டு மாவட்ட சபையை ஏற்படுத்துவோம். அரசியலில் பிரதேச சபையை நாட்டுவது ஓர் முன்னேற்றமான நடவடிக்கையாகும்.'

### அமைச்சரவையில்

'தமிழ் பேசும் மக்களின் குறைகளை எடுத்து விளக்க ஒரு தமிழர் மட்டும் அமைச்சரவையில் இருப்பது போதுமானதல்ல என்று நகர்ப்புறங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களில் சிலர் கருதுகிறார்கள். இது பற்றி நீங்கள் ஏதாவது கூறமுடியுமா?' என்ற கேள்விக்கு 'ஆம்' என்று கூறிய தமிழரசுத் தந்தை மேலும் இது பற்றி விளக்கமாகக் கூறுகையில:

'இரண்டு அல்லது மூன்று அமைச்சர்கள் இருந்தால் நன்மையாக இருந்திருக்கும். ஆனால் அமைச்சரவையைக் கூட்டின நாட்களில் இருந்த சூழ் நிலையில், மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களில் ஒருவரும் பதவியை ஏற்றுக்கொள்ளவிரும்பவில்லை. நாம் அன்று நடந்து கொண்டவிதம் இன்றும் நன்மையை விளைவித்திருக்கிறது. நாம் அரசாங்கத்தில் சேர்ந்தது பதவியை நோக்கி அல்ல என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறோம்' என்று கூறினர்.


## சென் அந்தனீஸ் நிறுவனங்கள்




**சென் அந்தனீஸ் ஹாட்வெயார் ஸ்டோர்ஸ் லிமிட்.,**

516, ஸ்கின்னர்ஸ்ரோட் தெற்கு, கொழும்பு 10.



## அவசியமுள்ளவர்கள் யார்?

★ உத்தியோகத்தில் உங்களுக்கு நல்ல வெற்றி வேண்டுமா?
★ எதிரிகளை வெற்றிகொள்ள வேண்டுமா?
★ ஆண், பெண் விருப்பப்படி மணம் புரிய உதவி வேண்டுமா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எங்களுக்கு கடிதமெழுதுங்கள்.

விலாசம்:-

**பண்டார மந்திராச்சாரியார்**
அன் கம்பெனி,
தலாவ (வழி) அநுராதபுரம்.



## சர்வகலாசாலை போதனு கழகம்

காலை, மாலை பாடசாலை பாலர் வகுப்பு முதல் உயர்தர வகுப்புவரைநடைபெறுகிறது.

சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்குப் பதிவியல் உட்பட வர்த்தக, கலை, விஞ்ஞான பாடங்களும், ● ஆங்கிலம் ● சிங்களம் ● தமிழ்பட்டதாரி ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.

**மாணவ மாணவிகளுக்கு.**

வயது கட்டுப்பாடின்றி சேருவதற்கு இடமுண்டு:

விபரங்களுக்கு:

அதிபர்

**சர்வகலாசாலை போதனு கழகம்**
(U. T. I.)

540 & 674, மருதானை வீதி,

த. பெ. இல: 1079, கொழும்பு-10.
தொலைபேசி: 91699.

சுதந்திரன்
SUTANTIRAN

1966 ஜுன் மாதம் 25-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12,
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1188

# கல்முனை மாநாடு

கல்முனையில் ஆரம்பமாகியுள்ள தமிழரசுக் கட்சியின் பத்தாவது தேசிய மாநாடு இம்முறை நாட்டு மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது. காரணம், இது தேசிய அரசாங்கத்தின் இரண்டாவது பெரிய கட்சியின் மாநாடாக இருப்பதும், பிரதம மந்திரி முதற்தடவையாக மாநாட்டில் பங்குபற்ற இருப்பதுமாகும். முதன் முறையாக சிங்களப் பெரு மக்களும இம்மாநாடு பற்றியும் அது நிறைவேற்றவிருக்கும் தீர்மானங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டுகின்றனர்.

இன்று நாட்டிலே ஒருமைப்பாடும், இருபெரும் இனங்களினிடையே ஐக்கிய உணர்ச்சியும் நட்பும் நிலவுகின்றன. நாட்டின் அபிவிருத்திக்குத் தமிழ்ப் பேசும் மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததென்பதைச் சிங்கள மக்கள் உணர்ந்து வருகின்றனர். நாடெங்கிலும் அமைதி நிலவுகிறது ஒத்துழைப்பு மனப்பான்மையும் காணப்படுகிறது. அரசாங்கத்தில் தமிழரசுக்கட்சி சேர்ந்திருப்பதும், சிறுபான்மையோரை மதித்து, அவர்களின் கோரிக்கைகளை வழங்குவதற்கு அரசாங்கம் முன்வந்திருப்பதுமே இந்நிலை உருவானதற்குக் காரணமாகும். இத்தகைய ஒரு சமூகச் சூழ்நிலையிலே கல்முனை மாநாடு கூடியிருக்கிறது. ஆகவே இம் மாநாட்டின் முடிவுகள் நாடு முழுவதும் எதிரொலிக்கும் என்பதில் ஐயமில்லை.

பிரதம மந்திரி டட்லி சேனநாயக்கா இம்மாநாட்டுக்கு வருகை தருவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். அவர்களின் வருகையில் இரு முக்கியத்துவங்கள் பொதிந்துள்ளன.

ஒன்று: நாட்டின் பிரதம மந்திரி தமிழரசுக் கட்சி மாநாடொன்றில் முதற் தடவையாகப் பங்குபற்றுகின்றார். மற்றொன்று: பிரதம மந்திரி ஒருவர் சுமார் 12 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன்முறையாகத் தமிழ் பிரதேசததுக்கு விஜயம் செய்துள்ளார்.

பிரதம மந்திரி தமிழ்ப் பிரதேசங்களுக்குச் சென்று ஒரு மாமாங்கத்துக்கு மேலாகி விட்டது. தமிழ்ப்பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியின் விளைவாக, மக்கள் முன்னணி அரசாங்கத்தின் பிரதமருக்கோ, சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் பிரதமருக்கோ வட, கிழக்கு மாகாணங்களுக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்வதற்குத் துணிவு இருக்கவில்லை. அவர்கள் அன்று தமிழ்ப் பிரதேசங்களுள் நுழைந்திருந்தால், கறுப்புக் கொடிகளும், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் அவர்களைத் தலைகுனியச் செய்திருக்கும். அந்த அளவுக்குச் சிறுபான்மை மக்களின் வெறுப்புக்கும், எதிர்ப்புக்கும், கோபத்துக்கும் அவர்கள் ஆளாகியிருந்தனர். ஆகவே அவர்கள் தமிழ்ப் பிரதேசங்களின் பிரதமர்களாக அன்று கருதப்படவில்லை. நாட்டின் ஒரு பகுதியை மட்டுமே அவர்கள் ஆட்சிபுரிந்தனர் என்று கூறின் தவறாகாது.

இந்த நிலைமை மாறிவிட்டது. இருண்ட காலகட்டம் மாறி இன்று சுதந்திர சூரியன் உதயமாகியுள்ளான். வகுப்பு வாதம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது. அரசாங்கமும், அமைச்சரவையும் பிரதம மந்திரியும் தமிழ்ப் பேசும் மக்களின் நம்பிக்கையையும் அமோக ஆதரவையும் பெற்றுள்ளனர். இந்தச்சூழ் நிலையில் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமான தமிழரசுக் கட்சியின் அழைப்பின் மீது பிரதம மந்திரி தமிழ்ப் பிரதேசத்துக்கு வருகை தந்துள்ளார்;

தமிழ் பிரதேசத்துக்கு அவரின் முதலாவது வருகை தமிழரசு மாநாட்டில் பங்கு பற்றுவதற்காகவே என்பது ஓர் உண்மையை எடுத்துக் காட்டுகிறது. அதுதான் தமிழரசுக் கட்சியே தமிழ்ப் பேசும் மக்களின் ஏக பிரதிநிதித்துவ ஸ்தாபனம் என்பதைத் தேசிய அரசாங்கமும், அரசாங்கத் தலைவர்களும், மக்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர் என்ற உண்மை.

பிரதம மந்திரி மாநாட்டில் பங்குபற்றுவதின் மூலம் தமிழரசுக் கட்சிக்குத் தமிழ்ப் பேசும் மக்களிடமுள்ள பேராதரவையும், தமிழ்ப்பேசும் மக்களின் அபிலாசைகளையும் நேரிடையாகவே அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

மேலும், தமிழ்- சிங்கள நல்லுறவை மென்மேலும் வளர்க்கவும், தேசிய ஐக்கியத்தைப் பலப்படுத்தவும் பிரதமரின் வருகை பெரிதும் பலன்படுமென்பதில் ஐயமில்லை. பிரதமர் தமிழ்ப் பகுதிக்குச் செல்வதைத் தடுப்பதற்காக எதிர்க் கட்சிகள் பல்வேறு தந்திரங்களைக் கையாண்டதுடன், சிங்கள மக்கள் மத்தியில் விசமப் பிரசாரமும் செய்தன. ஆனால் தமிழ்ப் பேசும் மக்களிடம் சென்று அவர்களின் ஆதரவையும் அன்பையும் பெற வேண்டுமென்ற பிரதமரின் உறுதியைக் குலைக்க எதிர்க் கட்சிகளால் முடியவில்லை. இதிலும் எதிர்க்கட்சிகள் தோல்வியே கண்டன.

இதற்கு முன்பு நடைபெற்ற தமிழரசு மாநாடுகளுக்கும் இந்த மாநாட்டுக்கும் ஓரளவு வித்தியாசம் உண்டு. அந்த மாநாடுகளில் விதைத்ததை அறுவடை செய்து மாகுலை பெறுவதற்காகத் திட்டம் தீட்டும் மாநாடே இது. அன்றைய அரசியற் சூழ் நிலையிலும் இன்றையச் சூழ்நிலை மாறுபட்டதாகும். அதற்கேற்ப மாநாட்டில் காணப்படும் உணர்ச்சியிலும் மாற்றம் இருத்தல் வேண்டும்.

மேலும், தமிழ்ப் பிரதேசங்களிலே வேலையின்மை, தொழில் வளர்ச்சி, விவசாய உற்பத்தி பெருக்கம் முதலிய பிரச்சினைகளையும் தீர்த்து பொருளாதாரத் துறையில் தமிழ்ப் பகுதிகளுக்குச் சுபீட்சத்தைக் கொண்டு வருவதற்கும் இம்மாநாடு வழிகாட்டுமென்று திடமாக நம்புகின்றோம்.

# மலையகத்தில் நடைபெறுவது அரசியல் வேலை நிறுத்தமா?

# குட்டையைக் குழப்புபவர்கள் உண்மையை உணரட்டும்

பஞ்சப்படி கோரிமலை நாட்டுத் தொழிலாளர்கள் நடாத்தும் வேலை நிறுத்தப் போராட்டம் தொடருகிறது. இவர்களின் கோரிக்கை பற்றி இரண்டுபட்ட கருத்துக்கு இடமில்லை. கடந்த ஒன்பது ஆண்டுகளாகப் பொதுத்துறை ஊழியர்கள் இவ்வசதியை அனுபவித்து வருகிறார்கள். மலைநாட்டுத் தொழிலாளரும் இக் கோரிக்கையை அன்று முதல் முன்வைத்தே வந்திருக்கிறார்கள்.

இப்பொழுது வேலை நிறுத்தம் மலைநாட்டில் சுரவேகத்தில் பரவியிருக்கிறது. இடையில் சோர்வு தட்டிய போராட்டம் இப்பொழுது இலங்கைத் தொழிலாளர் கழகம் போன்ற ஏனைய தொழிற் சங்கங்களும் கலந்து கொண்டதன் மூலம் புதிய உத்வேகத்துடன் நடைபெற்று வருகிறது. இத்தகை உத்வேகத்துடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை நிறுத்தத்தை இடையில் முறித்துவிட முடியாதா என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கனவு காண்கிறது. இ. தொ. காங்கிரசினர் பத்திரிகைக்கு விடுக்கும் அறிக்கைகளைப் பார்க்கும் பொழுது அவர்கள் கருங்காலி வேலையில் மறைமுகமாக ஈடுபடுகிறார்களோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

## இது என்ன கோலம்?

பஞ்சப்படிக் கோரிக்கை வலுப்பெற்று வருவதை உணர்ந்த இ. தொ. காங்கிரசினர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் அடிப்படைச் சம்பளத்தில் ஒரு ரூபா உயர்வு வேண்டுமென்ற புதுக் கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர். இ. தொ. காங்கிரசினரின் இக் கோரிக்கைக்கு தோட்ட முதலாளிமார் சம்மேளனம் என்றுமில்லாத ஒரு முக்கியத்துவத்தை இப்பொழுது கொடுத்திருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முன்வைத்த கோரிக்கை பற்றி கடந்த மாதம் அக்கறையுடன் ஆராய்ந்து இ. தொ. கா. வினரையும் அழைத்து தோட்ட முதலாளிமார் சம்மேளனம் பேச்சு வார்த்தை நடாத்தியிருக்கிறது.

ஒரு ரூபா அடிப்படைச் சம்பள உயர்வு பற்றி முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சு வார்த்தை நடாத்த முற்பட்ட இ. தொ. கா.வினர், இப்பிரச்சினையையிட்டு சக தொழிற்சங்கத்தினருடன் கலந்து பேசவில்லை. சக தொழிற் சங்கங்களும் தோட்ட தொழிலாளர்களின் சம்பளம் ஏதோ ஒரு வழியில் உயர்த்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்திருப்பதனால், இ. தொ. கா. வினர் உண்மையில் தொழிலாளர் நலனில் அக்கறையுடையவர்களாக இருந்திருந்தால் சக தொழிற் சங்கங்களுடன் கருத்துப் பரிமாறல் செய்திருப்பார்கள். அல்லது முதலாளிமார் சம்மேளனத்துடன் நடாத்திய மாநாட்டுக்கு ஏனைய தொழிற்சங்கப் பிரமுகர்களையும் அழைத்துச் சென்றிருப்பார்கள்.

"மேலும் ஒன்பது ஆண்டுகளாகக் கோரி வரும் பஞ்சப்படிக் கோரிக்கையை விடுத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் விடுக்கப்பட்ட அடிப்படைச் சம்பள உயர்வுக் கோரிக்கை பற்றி ஆராய அதுவும் பஞ்சப்படியில் பார்க்க கூடுதலான ஒரு தொகையைப் பற்றி ஆராய முதலாளிமார் சம்மேளனம் இ. தொ. கா. வை அழைத்ததிலும் ஒரு உண்மை மறைந்திருக்கிறது. இ. தொ. கா.வின் கோரிக்கையை வழங்கப் போவதாகக் காட்டி மலையகத்தில் இச் சங்கத்திற்கு பெரும் செல்வாக்கை ஏற்படுத்தினால் ஏனைய சங்கங்களில் உள்ள தொழிலாளர்களும் இச்சங்கத்தில் சேருவார்கள் என்று முதலாளிமார் சம்மேளனம் கருத

**சுதந்திரன் அரசியல் நிருபர்**

லாம். இ. தொ. கா. வினது பலம் அதிகரிப்பது தமக்கு சாதகமானது என்றும் முதலாளிமார் சம்மேளனம் நம்புகிறது. இ. தொ. கா.வினர் தமக்கு பிரச்சினை கொடுக்க மாட்டார்கள் என்று முதலாளிகள் கருதுவதிலும் அர்த்தமுண்டு.

## திட்டமில்லை

இன்று பஞ்சப்படிக்கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருக்கும் ஐ. தொ. கா வினர் முன்னேற்பாடாக நடந்து கொள்ளவில்லை என்று கூறலாம். இப் போராட்டத்தை ஆரம்பிக்க முன்னர் இவர்கள் ஏனைய தொழிற்சங்கங்களையும் கலந்தாலோசித்திருக்க வேண்டும். ஏனைய தொழிற் சங்கங்களும் இக்கோரிக்கையை முன்வைத்திருக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ள ஏனோ ஐ. தொ. கா. வினர் மறந்துவிட்டனர். ஐ. தொ. கா. வினரின் வேலை நிறுத்த முடிவு ஒருவகைத் தொழிற்சங்க ஆதாயம் கருதிய முடிவு என்றே அவர்களின் தன்னிச்சையான போக்கிலிருந்து தெளிவாகிறது.

மேலும் முதலாளிமார் சம்மேளனம் இப்பிரச்சினையை சம்பள நிர்ணய சபை முன் விடுமாறு இப்பொழுது கோருகின்றது. சம்பள நிர்ணய சபை இக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டால் அரசாங்கமும் தோட்ட முதலாளிகளை நிர்பந்தப்படுத்தியாவது பஞ்சப்படி வழங்கச் செய்ய முடியும் என்றும் கூறப்படுகிறது. இப்பிரச்சினையை எச்சங்கத்தினரும் சம்பள நிர்ணய சபை முன் வைக்கவில்லை என்ற கருத்தை பொதுவில் ஏற்படுத்துவதற்கே இத்தகைய பிரச்சாரம் நடைபெறுகிறது. 1959ம் ஆண்டு பஞ்சப்படிக்கோரிக்கை சம்பள நிர்ணயசபைமுன் வைக்கப்பட்டது. ஆனால் சம்பள நிர்ணய சபை அதை ஏற்க மறுத்துவிட்டது. மீண்டும் ஒரு முறை இக்கோரிக்கையைச் சம்பள நிர்ணயசபை முன் வைப்பதில் எத்தகைய மாற்றமும் நிகழ்ந்துவிடப் போவதில்லை.

## அரசின் கடமை

பஞ்சப்படிக் கோரிக்கையை சம்பளநிர்ணயசபை முன் சமர்ப்பிப்பதே தீர்வுக்கான பரிகாரம் என்று தொழில் அமைச்சர் அறிக்கையொன்றில் கூறியிருக்கிறார். இதைத்தான் முதலாளிமார் சம்மேளனமும் கூறுகிறது. ஏற்கனவே சம்பள நிர்ணய சபை இதை ஏற்க மறுத்துவிட்டது. மீண்டும் அதை வலியுறுத்துவதில் அர்த்தமில்லை. அதே நேரத்தில் இ. தொ. காங்கிரசின் அடிப்படை சம்பள உயர்வுக் கோரிக்கைபற்றி பேச்சு வார்த்தை நடாத்த முதலாளிமார் சம்மேளனம் முன் வந்திருக்கிறது. முதலாளிமார் சம்மேளனம் எதற்காக இக் கோரிக்கையையும் சம்பள நிர்ணய சபை முன் சமர்ப்பிக்கும் வண்ணம் இ. தொ. கா. வைக் கேட்கக் கூடாது. தொழிற்சங்கங்களிடையே பாரபட்சம்காட்டப் படுவதை இது தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

மலைநாட்டுத் தொழிலாளர்களுக்கு எந்தவகையிலாவது ஊதியம் அதிகரிக்கப்பட வேண்டும். அத்துடன் ஏனைய வகைத் தொழிலாளர்கள் அனுபவிக்கும் பஞ்சப்படி உரிமை அவர்களுக்கு எதற்காக மறுக்கப்பட வேண்டும்? எனவே இப் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் நோக்க அரசாங்கம் கடமைப் பட்டிருக்கிறது.

## மாயை நீங்கட்டும்

இ. தொ. காங்கிரஸ்தான் மலையகத்தின் ஏகப் பிரதிநிதி என்று அரசாங்கமும், முதலாளிமார் சம்மேளனமும் தவறாக எடைபோட்டுக் கொண்டுள்ளன. ஒன்பது லட்சம் மலையகத் தொழிலாளர்களில் மூன்று லட்சத்திற்கும் குறைவானவர்களே இ. தொ. கா. வை ஆதரிக்கின்றனர்; மிகுதி ஆறு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வேறு தொழிற்சங்கங்களில் கட்டுப்பாட்டுடன் இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கமும் முதலாளிமார் சம்மேளனமும் மலையகத் தொழிலாளர் பிரச்சினையென்றால், அது இ. தொ. கா. வுடன்தான் பேச்சுவார்த்தை நடாத்துவோம் என்ற முடிவை இப்பொழுதே மாற்றிக்கொள்ள வேண்டும். இன்று நடைபெற்றுக்கொண்டிக்கும் வேலைநிறுத்தம் நிச்சயமாக அரசாங்கத்தினதும் முதலாளிகளினதும் கண்ணைத் திறக்கச்செய்யுமென்று நம்புகிறோம்.

## அரசியல் வேலைநிறுத்தமா?

இன்று நடைபெறும் வேலை நிறுத்தம் அரசியல் சம்பந்தப்பட்டது என்று சிலர் கயிறு திரிக்க முற்பட்டிருக்கிறார்கள். நிச்சயமாக இது ஒரு அரசியல் வேலை நிறுத்தமல்ல. சிறுபான்மை மக்கள் ஒருமனதாக தேசிய அரசாங்கத்தை ஆதரிக்கும் நேரத்தில் எங்ஙனம் அரசாங்கத்திற்கு மாறான ஒரு அரசியல் வேலைநிறுத்தம் நடைபெறமுடியும். இன்று நடைபெறுவது பொருளாதார வேலை நிறுத்தம். வாழ்க்கைக்கான வேலைநிறுத்தம். இதில் சம்பந்தப் பட்டவர்கள் தொழிலாளர்களும் முதலாளிகளுமே. இதனை அரசாங்கமும் ஏனையவர்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

# மாநாட்டு தீர்மானங்களுக்கு பிரதமரின் ஆசி

## சிங்களத் தினசரியின் கற்பனைச் செய்தி

இம்மாத இறுதியில் கல்முனையில் நடைபெறவிருக்கும் தமிழரசு மாநாட்டில் நிறைவேற்றப்படவிருக்கும் தீர்மானங்களுக்குப் பிரதமரினதும், ராஜாங்க அமைச்சரினதும் ஆசியும் அனுக்கிரகமும் கிடைத்திருக்கிறதென்றும், யு. என். பிக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையே ஓர் இணக்கம் ஏற்பட்ட பின்னரே இத்தீர்மானம் தயாரிக்கப் பட்டன என்றும் அரசியல் வட்டாரங்களில் வதந்தி அடிபடுகிறது'' இவ்வாறு ஒரு செய்தியை ''எத்த'' (15-6-66) பிரசுரித்துள்ளது.

''எத்த'' மேலும் குறிப்பிட்டிருப்பதாவது!

''தமிழரசு மாநாட்டில் பங்குபற்றும் திரு. டட்லி சேனநாயக்கா திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஆகியோர் முன்னிலையில் மாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்குப் பிரதமரும் ராஜாங்க அமைச்சரும் ஓரளவுக்காவது பொறுப்பேற்க வேண்டி வரும் என்று அவர்களின் அரசியல் ஆலோசகர்கள் சுட்டிக் காட்டியதின் பேரில், மாநாட்டில் சமர்ப்பிக்கப் படவிருக்கும் தீர்மானங்கள் பற்றி பிரதமர் தமிழரசுத் தலைவர்களுடன் விவாதித்ததாக அறியப்படுகிறது.

இந்த பேச்சு வார்த்தைகளின் விளைவாக இவ்விரு தலைவர்களும் மாநாட்டில் கலந்து கொள்ளும் தங்களின் முடிவை மாற்றிக் கொள்ளாததால், தமிழரசுத் தீர்மானங்களுக்கு இவ்விருவரின் அனுமதி கிடைத்துள்ளதென்பது ஊர்ஜிதமாகிறது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். இது தமிழரசுக் கட்சி பெற்ற மாபெரும் வெற்றி என்பது அவர்களின் கருத்து.

சிங்களத்தை மட்டும் உத்தியோக மொழியாக்குவதை எதிர்த்து தமிழரசுக் கட்சி கடைசித் துளி இரத்தம் வரை போராடும் என்று தமிழரசுக் கட்சி கடந்த மாநாட்டில் வாக்குறுதியளித்தது.

வட, கிழக்கு மாகாணங்களில் பாடசாலைகளில் சிங்களம் போதிப்பதை எதிர்த்தும் அன்று ஒரு தீர்மானம் நிறைவேற்றினர்.

சமஷ்டி அரசியற் சட்டமொன்றினை அங்கீகரிக்காத எந்த அரசாங்கத்துடனும் ஒத்துழைப்பதில்லை என்றும் அந்த மாநாடு தீர்மானித்தது.

யு. என். பியுடன் சேர்ந்த பின்னர் தமிழரசுக் கட்சியின் இந்தத் தீர்மானங்கள் எதுவும் திருத்தப்படவில்லை.

சிங்களம் மட்டும் கொள்கையைத் தாங்கள் என்றும் எதிர்ப்பதாக தமிழரசுத் தலைவர்கள் இன்றும் கூறிக் கொண்டுதான் இருக்கின்றனர். வட, கிழக்குப் பாடசாலைகளில் சிங்களம் போதிப்பதை எதிர்க்கும் தங்களின் கொள்கை இன்னும் அப்படியே இருக்கிறது என்பது அமைச்சர் திருச்செல்வம் செனட்டில் கூறியிருப்பதிலிருந்து தெளிவாகிறது.

தமிழரசுக்கட்சி சமஷ்டி முறைக்காக நடத்தும் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தும் என்று திரு. திருச்செல்வம் பருத்தித்துறையில் ஒரு கூட்டத்தில் கூறியுள்ளார். ஆகவே கடந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இந்த மாநாட்டில் ஊர்ஜிதமாக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

''ஆதலின், பிரதமர், ராஜாங்க அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் அவர்களின் அனுக்கிரகத்துடன் மாநாட்டில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் ஏழு கட்சி கூட்டு அரசாங்கத்தின் உண்மை உருவத்தை அம்பலப்படுத்தி விடும் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

## சிங்கள இதழ்களில்...

## கல்முனை மாநாடு

### ''ஐ. தே. கட்சியினுள் கருத்து வேற்றுமை''

''பிரதமர் டட்லி சேனநாயக்கா தமிழரசுக்கட்சியின் மாநாட்டில் கலந்து கொள்ளக்கூடாதென்று யு. என். பியின் செயற்குழு செய்த முடிவின் விளைவாக ஏழுகட்சி கூட்டரசாங்கத்துள் மட்டுமின்றி யு. என். பியுள்ளும் பெரும் கருத்து வேற்றுமைகள் தோன்றியுள்ளன'' என்று ஜனதின (15-6-66) ஒரு செய்தி வெளியிட்டுள்ளது.

இச் செய்தியில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது!

''பிரதமர் எப்படியாவது மாநாட்டில் பங்கு பற்ற வேண்டுமென்று தமிழரசுத் தலைவர்கள் திட்ட வட்டமாகக் கூறியுள்ளனர். பிரதமர் மாநாட்டுக்குப் போகாவிட்டால் திரு. ஜே. ஆர். ஜயவர்தனவும் போகக் கூடாது என்று யோசனை கூறுவதற்கு யு. என். பியில் ஜே. ஆர். கோஷ்டி தீர்மானித்துள்ளது.

சிங்கள மக்களின் கோபத்துக்கோ, தமிழரசுவாதிகளின் கேள்விகளுக்கோ பயந்து பிரதமர் மாநாட்டில் கலந்து கொள்ள மறுத்தால், ஜே. ஆர். மட்டும் அதில் போய் சிக்கிக்கொண்டு பெயரைக் கெடுத்துக் கொள்வதில் அர்த்தமில்லை என்று அக் கோஷ்டி கூறுகிறது

செயற்குழு உறுப்பினர்களின் பெரும்பாலோர் டட்லியின் அனுதாபிகளாதலின், ஜே. ஆருக்கு சங்கடமான ஒரு நிலையை ஏற்படுத்தவே இந்த முடிவைச் செய்துள்ளனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

இம் மாநாட்டில் எப்படியும் கலந்து கொள்ளுமாறு திட்ட, பொருளாதார அமைச்சின் உயர்தர அதிகாரிகள் பிரதமரைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.''

## அதிகாரம் இல்லையாம்

'கள்ளக் குடியேற்றக்காரர்களைக் கண்டு பிடிப்பதற்காக வட பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ள இராணுவத்தினருக்குச் சந்தேகமுள்ள இடங்களைச் சோதனையிடுவதற்கும், சந்தேக நபர்களை விசாரணை செய்வதற்கும் அதிகாரமில்லாத முறையில் கட்டளைகள் அனுப்பப்பட்டிருப்பதால், கள்ளத்தோணிகளைப் பிடிக்கும் நடவடிக்கை முற்றாகக் குற்றுயுராகியுள்ளது'

—ஜனதின (13-6-66)


நினைவில் வையுங்கள்!
கட்டடச் சாமான்களுக்கு
எம். எஸ். எம். சாறுக் அன்ட் கம்பனி

| | |
|---|---|
| சீமெந்தும் சீமெந்துக் கலர்களும் | கம்பி வலைகள் |
| எல்லா அளவுகளிலும் | ஜுட் ஹெசெயின் |
| G. I. பிளெய்ன் & கொற கேற்றட் ஷீட்ஸ் | எல்லா அளவிலுமான கார்ட் போட்டுகள் |
| அலுமினியம் பிளெய்ன் & கொற கேற்றட் | G. I. வாளிகள் |
| அஸ்பெஸ்டஸ் பிளெய்ன் & கொற கேற்றட் ஷீட்ஸ் | M. S. றவுண்ட் அயர்ன் |
| G. I. பைப்புகளும் பிற்றிங்சுகளும் | M. S. பிளாற் அயர்ன் |
| G. I. & B. I. வெல்ட் ரீஸ்கொயர் மெஷ் | M. S. ஆங்கிள் அயர்ன் |
| B. R. C. வெல்டெட் பாப்ரிக் இல 6, 7, 8, 9, & 10. | M. S. ரீ அயர்ன் |
| கம்பி ஆணிகள் | R. S. ஜொயிஸ்ற்ஸ் |
| கொலற் ஆணிகள் | M. S. சனல் அயர்ன் |
| G. I. போல்ட்ஸ் & நட்ஸ் | M. S. பிளேற்ஸ் & B. I. ஷீட்ஸ் |
| கராச் போல்ட்ஸ் & நட்ஸ் | பிறாஸ் & அயர்ன் மெற்றல் றெட்ஸ் |
| G. I. மடக்கு ஆணிகள் | சோல்டெறிங் லிட் |
| G. I. முள்ளுக் கம்பிகள் | றாவிங் பெல்ட்ஸ் 1, 2, & 3 Ply |
| எல்லா அளவுகளிலுமான எக்ஸ்பாண்டெட் மெற்றல்ஸ் | பனல் பின்ஸ் |
| | வீல் பரோஸ் |
| | நெல் அவிக்கும் யந்திரம் |
| | ஹூப் அயர்ன் |
| | எல்லாவிதமான G. I. வயர் |
| | பிரஸ் ரியூப்ஸ் |

மரப் பாதுகாருணிகள், ஷொவெல்ஸ் & போர்க்ஸ்.
கால்சியம் காபைட், போமிக் & அசெட்டிக் அசிட்
சாதகமான விலைகளில் கிடைக்கிறது

எம். எஸ். எம். சாறுக் & கோ
397 & 418, A பழையசோனகத் தெரு,
கொழும்பு-12.
தொலைபேசி: 78862 தந்தி:- ''கஸ்னா''



மாயா ஜோதி ஊது பத்திகள்

பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை விரும்புவது

மாயஜோதி ஊதுபத்திகளே!

- ★ அதன் சுகந்த நறுமணம்
- ★ அதன் நிலைத்து எரியும் தன்மை
- ★ நவீன தயாரிப்பு
- ★ அதன் நியாய விலை.

உங்களுக்கு மட்டும் ஏன் தயக்கம்?

வாங்குங்கள் ஒருமுறை! நிலைத்து விடும்

'மாயஜோதி'

விபரங்களுக்கு:

ந. செல்லத்துரை
மாயஜோதி இன்டஸ்றீஸ்
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.



இலங்கைத் தமிழரசுக் கட்சியின்
10-வது தேசிய மாநாடு சிறப்புற
நடைபெற எமது நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக் கொள்கிறோம்.

தம்பிப்பிள்ளை பிறதர்ஸ்
மன்சூர் கட்டிடம்
பிரதான வீதி, கொழும்பு-11
தொலைபேசி: 3672

# களரி

## எஸ். பொன்னுத்துரை

கல்முனை பஸ் நிலையம். மட்டக்களப்பு நோக்கிச் செல்ல பஸ் தயாராக நிற்கின்றது. அந்த பஸ்ஸை சுற்றி வந்து, வியாபாரத்தைச் சுறுசுறுப்பாகக் கவனிக்கிறான் பீடாக்காரன்.

"பஸ் போய்விடும்
நான் நின்று விடுவேன்
ஜில்ஜில் பீடா இஸ்
வெறி நைஸ் பீடா..."

தன் பீடாவுக்கு அவனே செய்யும் விளம்பரம்.

பஸ் போய் விடுகிறது! அவன் நின்றுவிடுகின்றான்.

அக்கரைப்பற்றுக்குப் போகும் பஸ்ஸுக்காக நான் காத்து நிற்கின்றேன். "இன்னும் எவ்வளவு நேரம் ஒற்றைக் காலிலை நிண்டு தூங்க வேணுமோ?... அப்பவும் கல்முனைக்குத் தெற்கை பஸ் சேர்விஸ் மோசந்தான். இப்பவும் அப்படித்தானே இருக்குது?..." அப்புஹாமியைச் சந்திக்கும் அவசரம் உந்த மனதிலே எழுந்த சலிப்பு, 'என்ன இருந்தாலும் அப்புஹாமி நேர்மையானவன் தான். வேறையாரெண்டாலும் ஏமாத்திப் போடுவாங்கள். தன்ரை சொந்தக்கா



சுதுமெனிக்கா

ணியைப் போலையல்லோ என்ரை வயலை ஆயத்துக்கு விட்டு ஒழுங்காகக் காசனுப்பிக் கொண்டிருந்தான். மனசார அவனுக்கு அந்த வயலை விற்கிறதிலை ஒரு புழையுமில்லை...' அப்புஹாமியைப் பற்றிய தண்மை நினைவு விரிந்து அவிகின்றது.

நான் கடைசியாகக் கல்முனைக்கு வந்து பத்து ஆண்டுகள் இருக்கும். இந்தப் பத்து ஆண்டுகளுக் கிடையில் கல்முனை அதிகம் மாற்றமடையவில்லை. இரண்டொரு புது வீடுகளும், நாலைந்து கடைகளும் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த பெட்ரோல் 'செட்டுக்கு முன்னால், புதிதாக டொக்டர் முருகேச பிள்ளை டிஸ்பென்சரி திறந்திருக்கின்றார். அங்காலை இருந்த பஸ் ஸ்டாண்டை இங்கை மாத்தியிருக்கிறாங்கள். கரவாகுப் பற்றின் செழுமையைப் பறைசாற்றி, மரகதப் பாய் விரித்து மருத வெளி விரிந்து கிடக்கின்றது. எழுவானில் வங்காளவிரிகுடாவிற் குளித்து எழுந்து வரும் காற்று, கடற்கன்னியின் நீலப் பட்டுமேனியைத் தீண்ட, அவள் அலை சிலிர்த்து நாணத்துடன் கரைதட்டி முகம் புதைக்கும் காட்சியையும், காற்றின் விரகதாப ஓதையையும் இங்கிருந்து பார்க்கவும் கேட்கவும் முடியாது.

வீதி கொள்ளச் சனம் போய் வருகின்றது. தெரிந்த முகங்களைக் காணோம். அன்று மூன்று எட்டிற்கு ஒரு தெரிந்த முகம். அவ்வளவு பழகிய ஊரில், அந்நியனாக அக்கரைப்பற்று பஸ்ஸுக்குக் காத்திருக்கிறேன்.

"வாய் சிவக்கும் மனம்
மணக்கும் ஜோரான
ஜில் ஜில் பீடா!"

என்று பாடிச் சிரித்த வண்ணம் பீடாக்காரன் ஒரு பீடாவை என்னிடம் நீட்டுகின்றான். 'வேண்டாம்' என்று மறுக்கும் நிலையில்லை. அவன் செய்யும் சாதுர்ய விளம்பரத்திற்காக ஒரு பீடா வாங்கிப் போட்டுக் கொள்ளுகின்றேன்.

வாய் பீடாவை
குதப்புகின்றது.
மனம் சென்ற கால
நிகழ்ச்சிகளை அசை
போடுகின்றது.

வட மாகாண வட கோடிக் கடலிலே மிதக்கும் தீவொன்றிலே பிறந்து, படித்து, இடையில் உழைத்துத்தான் வாழவேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டு திரைகடல் ஓடியும் திரவியந்தேடு என்ற முதுமொழிக்கேற்ப எங்களூர் 'பெரும் புள்ளி' ஒன்று கொழும்பிலே பல கடைகள்வைத்திருக்கிறார். 'பாவம் எங்கடை ஊர்ப் பொடியன் பிழைக்கட்டும்' என்று தமது கடையொன்றிலே வேலை தருகின்றார். தொழில் கற்றுத் தருவதான பாவனையில், மலிவான உழைப்புக் கறக்கப் படுகின்றது. வியாபார நுணுக்கம் கற்று 'முதலாளிமாரின் ஆக்கினை போதும், சிறிய முதலுடன் என்றாலும் சொந்தத்தில் ஒரு கடை கண்ணி வைப்போம்' என்ற எண்ணம் பிறக்கிறது.

அப்பொழுதுதான் நெல் சீனி - மின்சாரம் ஆகிய பல துறை அபிவிருத்திக்காக சுதந்திர இலங்கை மேற்கொள்ளும் மிகப் பெரிய நிர்மாணத் திட்டமாக கல்லோயாப் பள்ளத்தாக்கின் அபிவிருத்தி வேலைகள் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தன. யானைகள் உலவித் திரிந்த காடுகள், நெல் பொலியும் மருத நிலங்களாகமாறின. குடியேற்றங்கள் அமுலாக்கப்பட்டன. 'வளர்ந்து வரும் ஊரில் சிறிய முதலுடன் கடை ஒன்றைப் போட்டால், ஊரின் வளர்ச்சியுடன் கடையும் வளரும்' என்ற நம்பிக்கையுடன் அம்பாறையில் சொந்தத்தில் கடை அமைத்தேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை. 'உருண்டை' வியாபாரத்தில் தொற்றி, நெல்லுச் சங்க மனேஜர்களையும் கையுக்குப் போட்டு ஒரு 'சுழிப்பு'ச் சுழித்ததிலே கண்மூடித் திறப்பதற்கிடையில் நான் பெருந்தனவந்தரானேன்.

சொந்த ஊரிலே, குடிசை ஒன்று பதுங்கிக் கிடந்த இடத்திலே, பணப் பெருமை பறை சாற்றி மாடிவீடு நிமிர்ந்து நின்றது. 'பொடியன்' என்று அலட்சியமாகப் பார்த்தவர்களெல்லாரும், பெருமதிப்புத்தரத் தொடங்கினர். தரகர் தம்பையா குழைந்து குழைந்து இழைய வந்தார். மட்டக்களப்புப் புதினங்களைக் கேட்பார். 'எப்பிடித்தம்பி யாவாரப்பாடுகள்? நீதான் விண்ணன். 'மட்டக்களப்புக் காட்டுக்குள்ளை போய்த் துலையப்போறான்...' எண்டு உனக்குப் பின்னாலை சொன்னவை இப்ப மூக்கிலை விரல் வைக்கினம்' என்று முகஸ்துதியுடன் தொடங்கி, தொண்டையைக் கனைத்து, "...மெய்ய, தம்பி! பாயோடை ஒட்ட வைக்கிற வித்தை இப்பவும் மட்டக்களப்பிலை இருக்கோ?" என்று கேட்காமல் விட மாட்டார். "மந்திரம் தெரிஞ்சவங்கள் கோளாவிலிலை இருக்கிறாங்கள் எண்டு தான் அப்புஹாமி சொல்லுறவர். எனக்கு உதுகளை விடுப்புப் பார்க்க எங்கை அண்ணை நேரம்?... ஆனால் உந்தப்பாயோடை ஒட்ட வைக்கிற கதை ஒரு பேக்கதை. இவையல்லே போய் இருந்திட்டு எழும்பாமல் குந்தியிடுகினம்... அதுகள் மனசார நல்ல சனம், எங்கடை கசவாரங்களைப் போலையே. இந்தக் காலத்துச் சடையப்ப வள்ளல்களைப் பாக்க வேணுமெண்டால், மட்டக்களப்புப் பக்கத்துப் பெரும் போடிமாருடைய வீட்டைத்தான் போய்ப்பாக்க வேணும்... சோறென்ன? பாலென்ன? தயிரென்ன? பழமென்ன? தேனென்ன? அவங்கள் எங்களைப்போலை படலையைக் கட்டிப் போட்டு வந்திருந்தோ சாப்பிடுறவங்கள்? என்று அலுப்புச் சலிப்பில்லாமல் விபரித்தாலும் அவருக்குப் 'பொச்சம்' தீராது. "நீ தம்பி பேசிற சாங்கத்தைப் பார்த்தால் அங்கை கொட்டை போட்டிடு வாய் போல கிடக்குது..." என்று இழுப்பார்.

அந்த இழுப்பு எங்கு கொண்டு வந்து நிறுத்தியது என்பது பின்னர்தான் தெரிந்தது. ஊரில் 'பெரிய இடத்துப் பெண்'ணைகப் பார்த்து, ஆச்சி எனக்கு அவசரக் கல்யாணம் செய்து வைத்து, இவ்வளவு காலமும் தன் மடியிலே கட்டி வைத்திருந்த நெருப்புத் தணலைக் கீழே கொட்டி விட்டதைப் போன்று நிம்மதியடைந்தாள். முன்பின் தெரியாத பெண்தான். ஆனால் எனக்கு மனைவியாகக் கிடைத்த பூரணம் தங்கப் பவுண்தான்.

பூரணத்தைப்பற்றி நினைத்துக் கொண்டதும் மனதிலே ஒரு தரிப்பு ஏற்படுகின்றது.

வேதனை முள் ஏறிய அவதி.
"... ஜில் ஜில் பீடா இஸ்
வெறி நைஸ் பீடா!"

பீடாக்காரனின் விளம்பரம் தொடருகின்றது. இருவர் அவனைத் தாண்டிப் பேசிக் கொண்டு போகின்றார்கள்.

"அவன் இவ்ருனைப் புடிச்சு வெள்ளாம வாடியில் செய்கைக் காறனுக்கு வெச்சா, அவன் கஞ்சா அடிச்சிற்று வெள்ளாமை வாடியில படுத்திரிக்கான்... பண்டி வந்து வெள்ளாமயெல்லாம் ஊளக்கிப்போட்டு ஹறவாக்கிப் போட்டுது..." என்று மிதியடி கட்டியங்கூற நடப்பவர் பேசுகிறார். ஒரு போடியாராக இருக்கவேணும். என்ன இருக்கவேணும்? அவரை எனக்கு நன்றாகத் தெரியும். அவர் மருதமுனையில் இருக்கிற கலந்தர் போடியார். பேச்சுச் சுவாரஸ்யத்தில் என்னைக் கவனிக்காது போகின்றார். அவரைக் கூப்பிட்டுப்பேச மனம் ஒப்பவில்லை.

வாய் பீடாவை
குதப்புகிறது.

மனம் சென்ற கால நிகழ்ச்சிகளை அசைபோடுகின்றது.

பூரணம் சாது. எதுக்கும் வெக்கப்பட்டவள். சுற்றி வர நல்ல அறுக்கையான வேலிகளுக்கிடையில் வளர்க்கப்பட்டவள். அம்பாறைக்கு என்னுடன் வரவே பயப்பட்டாள். 'எனக்கு ஒரு சொல்லும் சிங்களம் தெரியாது' என்றுகூடச் சிணுங்கினாள். 'பாவம் அந்தப் பொடியனும் பறந்து பறந்து உழைக்கிற... ஒரு நேரத்துக்கெண்டாலும் உன்ரை கையாலை சமைச்சுப் போடுற ஆனமான கறியளோடை சாப்பிடுறது போலை வருமே?' என்று நாலு பத்துப்பேர் 'புத்தி' சொன்னப் பிறகுதான் என்னுடன் எந்தாள். என் கடையில்வாடிக்கையாகச் சாமான் வாங்கும் சுதுமெனிக்கா நல்ல மனுஷி. ஆறுதலாகக் குடும்பக் கதை எல்லாம் பேசுவாள். அடுத்த தெருவில் குடியிருக்கும் அவள் தான் பூரணத்திற்கு அன்பாகவும் ஆதரவாகவும் இருப்பாள். கண்டிச் சிங்களத்தி. தமிழ் கொஞ்சம் பேசவரும். தமிழர்களுடன் தனக்குத் தமிழின் 'ஞான'த்தைப் பறைசாற்றிப் பேசுவதில் தனி ஆர்வம்.

தான் கர்ப்பவதியாக இருக்கும் சமாசாரத்தைச் சொல்லப் பூரணம் பட்ட வெக்கத்தையும் அவதியையும் நினைத்தால் இப்பொழுதும் சிலிர்க்கின்றது. வீட்டுக்கு அழைத்துச் சென்று விட்டு வரலாமோ என்று கூட யோசித்தேன். இந்தக் காலத்தில் மனைவியின் மனம் பயமோ சஞ்சலமோ அடையக் கூடாது என்றும், கணவன் கூடவே இருப்பதுதான் நல்லதென்றும், ஆறேழு மாதமானவுடன் ஊரிலே கொண்டு போய் விட்டால் போதுமென்றும் சுதுமெனிக்கா கூறிய ஆலோசனையின் பெயரில் பூரணம் என்னுடனேயே தங்கினாள்.

ஒரு பெண் பீடா வாங்கித் தரித்துக் கொள்ளுகிறாள். அவள் ஒரு ஆசிரியையாக இருக்க வேண்டும். உடையைப்பார்த்துத்தான் ஊகம்.

'சிங்கார வாய் சிவக்கும்
சின்னஞ்சிறுவாய் மணக்
கும் 'சோய்' ஸானபீடா
இந்த ஜில் ஜில் பீடா...'

பீடாவின் விளம்பரம் தொடருகின்றது.

அவன் கூறுவதில் உண்மை இருக்கிறது. இதற்கிடையிலேயே அவளுடைய உதடுகள் சிவந்து விடுகின்றன. அவளுடைய கைகளில் சுதந்திரன் சிறப்பிதழ் இருக்கின்றது. இன்றைக்கு என்ன திகதி? ஓம். 1966 ஆம் ஆண்டு, ஜுன் மாதம் 24-ந் திகதி. நான் பிறந்தது மே 24-ந் திகதி. அது நடந்தது... சரியாகப் பத்து வருஷம். 1956 ஆம் ஆண்டு, ஜுன் மாதம். அந்த மாசந்தானே தனிச்சிங்கள மசோதா பாராளுமன்றத்திற்கு வந்தது? நேற்றுநடந்தது போல அது பசுமையாக நினைவில் நிற்கின்றது. நாங்கள் ஒரு இடத்தில் நிற்கும் பொழுது கூடக் காலம் ஓடிக் கொண்டிருக்கின்றது. நான் இந்த இடத்தில் நிற்கும் பொழுதே முப்பது நிமிடங்கள் ஓடிவிட்டனவே.

இப்படி மறைந்து போன காலத்தை என்னுடைய மனம், அதுவும் பத்து வருடங்களுக்கு முன்னர் ஓடி மறைந்துபோன காலத்தை என் மனம் அசை போடுகின்றது,

வழக்கம் போல கடை திறககப் பட்டிருக்கின்றது. ஆனால் ஓர் அசாதாரணச் சூழல், பிணம் கிடக்கும் இடத்திலே குடி கொண்டிருக்குமே, அப்படியொரு அமைதி. அந்தஅமைதியை ஊடறுத்துக் கொண்டு இரண்டு லொறி நிறைய ஆள்கள் கொலனிப் பகுதி நோக்கி விரைய, புல்டோஸர் ஒன்று தொடர்கின்றது.

"அபே ஆண்டுவ அபி சிங்களயோ...!" என்ற கோஷம் காற்றை ஊறுத்து வருகின்றது.

"குழப்பம் துவங்கிட்டுது போலை..." என்று கடையில் வேலை செய்யும் இருவர் ஒரு மூலையில் நின்று குசுகுசுக்கின்றார்கள். பயத்தின் சாயல் கடைக்கு உள்ளேயும், வெளியேயும் அகண்டாகாரமாக வியாபித்துக் கிடக்கின்றது. அப்பொழுது சுதுமெனிக்கா ஓடுகின்றாளா, நடக்கின்றாளா என்று அவதானிக்க முடியாத அவசரத்தில் கடைக்குள் நுழைந்தாள்.

"நோனா மாத்தயா அவசரஞ் சுட்டி வரச் சொன்னாங். கடே பூட்ட சொன்னாங். வெடக்காரங் கடே பூட்டுவாங்தானே? நீங்க சுறுக்கா வாங்க..." என்றுமேயில்லாத அச்சம் அவள் குரலிலே மண்டிக் கிடந்தது. சிந்திக்கும் அவகாசத்தைக்கூட அவள் தரவில்லை கடையைப் பூட்டும்படி சொல்லிவிட்டு, நான் சுதுமெனிக்காவைப் பின் தொடருகின்றேன்.



பூரணம்

சுதுமெனிக்காவின் வீட்டுக்கு வந்துவிட்டோம். அதைத் தாண்ட வரும் சந்தியால் திரும்பி நடந்தால் நாலாவது வீடு என் வீடு. சந்திக்கு வந்த பொழுது, ஒரு காடையர் கோஷ்டியால் என் வீடு தகர்க்கப் படுவது தெரிகின்றது. 'ஐயோ, என் பூரணம்!' என்று என்னை அறியாமலே அலறிவிட்டேன். வாய் பேசவேண்டாமென்று சைகை காட்டி, கைப் பிடியில் இழுத்துக்கொண்டு சென்றாள். முன் அறையில் அவளுடைய கணவன் ரத்னாயக்கா இருந்தான். ஆனால் அவன் எதுவுமே பேசவில்லை. மனைவியைப் பார்த்துக் கண் அசைத்தான். அவள் என்னை நேரே அடுக்களைக்குள் அழைத்துச் சென்றாள். அங்கு ஒரு பெரிய அலுமாரி ஒன்று. அடுப்படியிலிருந்தும் அதில் புகை பிடிக்கவில்லை. அங்கு சென்று மறைந்து கொள்ளும்படி சொன்னாள். அங்கே பயத்தால் உடல் பதற, கண்களில் நீர் சிந்தப் பூரணம் நின்றுகொண்டிருந்தாள். என்னைக்கண்டு என் மார்பின்மீது முகம் புதைத்து அழத் தொடங்கினாள். சத்தம் போடாது இருக்கும்படி சைகை காட்டி, சுதுமெனிக்கா மீளுகின்றாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் முன் அறையிலே குரல் கேட்டது.

'பற தெமிலாகே கேனி அத்துலே தமாய் இன்னே. தெம்மம எலியட்ட என்ட கியாப்பாங்நெத்தங் உம்பகீ பவுலட்ட கியாப்பாங் எலியட்ட என்ட ..' (பறத்தமிழனின் மனுஷி உள்ளதான் இருக்கிறாள். வெளியே வரச் சொல்லு. இல்லாவிட்டால் உன் மனைவியை வெளியே

(19-ம் பக்கம் பார்க்க)

# அதிகாரபரவலும் பிரதேச சுயாட்சியும்

## கலாநிதி ஏ. ஜே. வில்சன்

மத்திய அரசில் குவிந்திருக்கும் நிர்வாக அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு என்றும் அவற்றைப் பரவலாககுவதன் மூலம் ஏற்படும் விளைவுகளையும் இக்கட்டுரையில் ஆராய்கிறார் கட்டுரையாசிரியர். நிர்வாக அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கு ஒரு துணையாக விளங்கும் பிரதேச ஆட்சி பற்றியும் இக்கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

நிர்வாக அதிகாரத்தை (மத்தியிற் குவித்து வைத்திருக்காது) பரவலாக்குவதற்கு இருக்கும் நோக்கங்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று நிர்வாகத் தொழிற்பாட்டிலும் அரசாட்சித் தொழிற்பாட்டிலும் உள்ளூர் சார்ந்த மக்கள் பரந்து பங்கு பற்றுவதாகும். மற்றது, அதிகாரம் ஒரே மையத்தில் குவிந்திருப்பதான ஆட்சி அமைப்பில் "இடசார்புத்திறமை" என்று அரசியற் சித்தாந்தத்தில் வர்ணிக்கப்படும் உள்ளூர்த்திறமை திறம்படப் பங்குபற்றுவதற்குவாய்ப்புகள் ஏற்படுத்துவதாகும்.

(1) நிர்வாக, அரசாட்சித் தொழிற்பாடுகளில் உள்ளூர் மக்கள் பங்குபற்றுவது பற்றி முதலிற் கவனிப்போம். உள்ளூர் மக்கள் ஆட்சியிற் பங்கு பற்றுவதென்பது இந்தியாவில் பஞ்சாயத்துக்கள் மூலமும், பாகிஸ்தானில் அடிப்படைச் சனநாயகங்கள் என்ற பொதுச் சொற்றொடரின் கீழ் நிறுவப்பட்டிருக்கும் பல்வேறு வகைத்தான உள்ளூர் மன்றங்கள் மூலமும் குறிப்பிடக்கூடிய அளவு வெற்றி கண்டிருக்கிறது. இதற்கு மாறாக நமது நாட்டின் நிலைமையைக் கவனிப்போம். இங்கே கச்சேரி முறையின் கீழ் வரம்பு கடந்த அதிகாரக்குவியல் பெற்ற உழுத்துப் போன குடியேற்ற ஆட்சி முறையைத்தான் தொடர்ந்து பின்பற்றி வருகிறோம். இந்தக் கச்சேரி முறையின் கீழ் ஏறத்தாழ கட்டுப்பாடற்ற அதிகாரம் செலுத்தும் மத்திய அரசாங்க அதிகாரிகள் தாம் அதிகாரம் நிர்வகிக்கும் அதே மக்களிடமிருந்தே எண்ணிறந்த வழிகளில் முற்றிலும் துண்டிக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள். இந்த முறைக்கு மிகக் கிட்டியதாயிருக்கும் உதாரணம் பிரான்சு நாடு ஆகும். அந்நாடு பல நிர்வாக அங்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. பிரதேசத் தலைவன் (PREFECT) என்ற சர்வவல்லமை படைத்த மத்திய அரசாங்க அதிகாரி ஒருவன் ஒவ்வொரு பிரிவையும் நிர்வகிக்கிறான்.

### பிரான்சில்

பிரான்சு நாட்டிலே (மத்திய ஆட்சியின்) உள்ளூர் நிர்வாகம் இருக்கிறது. ஆனால் உள்ளூர் ஆட்சி அங்கில்லை என்று சொல்லிக் கொள்வார்கள். இலங்கை நாட்டைப் பற்றியும் இவ்வாறு தான் சொல்லிக் கொள்ள வேண்டும். பிரான்சு நாட்டைப் போல உள்ளூராட்சி அங்கங்கள் இலங்கையிலும் உண்டு. ஆனால் பிரிட்டனைப் போன்ற ஒற்றையாட்சி நாடுகளிலுள்ள உள்ளூர் மன்றங்களுக்கு இருக்கும் ஆட்சி அதிகாரத்தில் புறக்கணிக்கத் தக்க ஒரு சிறு பகுதியே இலங்கையிலுள்ள ஊர் மன்றங்களுக்கு உண்டு. உள்ளூர் மக்கள் தீர்ப்புக்கு இசையத் தெரியப்படும் ஊராண்மைக் கழகங்கள் வசம் தமது அதிகாரங்களை ஒப்படைக்க சிவில் சேவையாளர் விரும்பாதிருப்பதே இந்த ஆட்சியதிகாரம் மத்திய அரசாங்கத்தின் கையிற் குவிந்திருக்கும் கொள்கைக்குப் பிரதான காரணமாகும். ஏதோ ஒன்றிற் கண் வைத்திருப்பவர்கள் தமது அதிகாரத்தை தாமாகக் கைவிட்ட கதை எங்குமில்லை. உள்ளூர் சிவில் சேவையாளர் இதற்குப் புறநடையா?

### கச்சேரி நிர்வாகம்

கச்சேரியோடும் (அரசாங்க அதிபரின் இல்லமாகிய) கச்சேரி மாளிகையோடுந் தொடர்பான வெள்ளைக்காரன் விட்டுச் சென்ற தனிச்சலுகைகள் அத்தனைக்கும் மரபுரிமை பெற்ற இவர்கள் உள்ளூர்களில் நிறுவப்படும் ஆண்மைக் கழகங்களுக்கு அதிகாரம் ஒப்படைக்கும் முயற்சிகளுக்கும் நிர்வாகத்தை (ஒரு மையத்தில்வைத்திருக்காது) பரவலாக்கும் முயற்சிகளுக்கும் வெற்றகரமாகத் திரிவைத்து வந்திருக்கிறார்கள். எனவேதான் மாகாண மன்றங்கள் நிறுவப்பட வேண்டுமென்ற டொனமூர் ஆணைக்குழுவின் மேவுரைகள் காத்திரமாகபரிசீலிக்கப்படவில்லை. இதே காரணத்திற்காகத்தான் உள்ளூராண்மைக் கழகங்களுக்கு பரந்த அதிகாரங்கள் வழங்க வேண்டும் என்ற உள்ளூராட்சிபற்றிய சொக்சியின் அறிக்கை கவனிப்பாரில்லாது போயிற்று. திரு. பண்டாரநாயக்காவின் பிரதேசமன்ற மசோதாவும் உயிரிழந்து போனதும் இதே காரணங்களிலேயாம்.

இந்தப் பிரச்சினைகளின் உட்சூத்திரம் இது தான். அதாவது சுதந்திரம் கிடைத்த நாட்தொடக்கம் ஊராட்சி அமைச்சு ஒவ்வொரு கட்டத்திலும் ஊராட்சி சீர்திருத்தங்களுக்கு ஊக்கமூட்டி வந்திருக்கும் அதே சமயத்தில் கேந்திர நிலையங்களில் சிவில் சேவையாளரைக் கொண்டிருப்பதும் கச்சேரி நிர்வாகத்தைத் தன் அதிகாரத்தின் கீழ் வைத்திருப்பதுமான உள்நாட்டமைச்சு ஏதோ ஒரு வகையில் இந்தச் சீர்திருத்தங்கள் நிகழ வொட்டாமற் சிதைத்து வந்திருக்கிறது. எனவே இந்த நாட்டில் நிர்வாக அதிகாரத்தைப் பரவலாக்குவதானால் முதற்படியாக அந்நிய பிருத்தானிய ஆட்சியின் கீழ் சிவில் சேவையாளர் அனுபவித்து வந்து, இன்றும் தொடர்ந்து அனுபவித்து வரும் சிவில் சேவை அதிகாரங்களைப் பிடுங்கி எறிய வேண்டும்.

### சுயதேவைகள்

(2) (அதிகாரக்) குவியல் முறையான ஆட்சியமைப்பின் கீழ் ஒவ்வொரு இடத்திற்கும் உரியதான உள்ளூர்த் திறமை ("இடசார்புத் திறமை") செயற்பட வாய்ப்புக்கள் முற்றாகக் கிடையாது போய் விடும் என்று ஆரம்பத்திற் குறிப்பிட்டிருந்தோம். உள்ளூர் மக்களுக்கே தெரியும் உள்ளூருக்கான தேவைகள். இலங்கைக்கு எது உகந்ததென்பதை எவ்வாறு ஆயிரம் மைலுக்கப்பாலிருந்த ஆங்கிலேயன் கூற முடியாதோ அதே போல கல்முனைக்கு எது உகந்ததென்பதை நூற்றுக்கணக்கான மைலுக்கப்பால் இருக்கும் கொழும்பிலிருந்தும் கூறிவிட முடியாது. அவரவருக்கு எது மிக உகந்தது என்பது அவரவருக்குத் தான் தெரியும். பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதில் உள்ளூர் மக்கள் பிழைகளை விடலாம் என்பது உண்மைதான். ஆனாலும் பிழைகளிலிருந்தும் அனுபவத்திலிருந்தும் மக்கள் படித்துப் பழகிக்கொள்ள வேண்டும் என்பதுதான் கவனிக்கப்பட வேண்டிய கோட்பாடு. யோன் இஸ்த்துவாட் மில் என்ற ஆட்சி இயற்பேரறிஞன் மிகச் சரியாகவே கூறியிருக்கிறார், "(புறத்தோரின்) நல்லாட்சி என்பது தனதாட்சிக்கு இணையாக முடியாது" என்று.

### அரசாங்க அதிபரின் நிர்வாகம்

சிலபல தேர்தல்களின் பின்னர் கள்ளர்களிலிருந்து நல்லவர்களைப் பிரித்துப் பார்க்க வாக்காளர்கள் விரைவில் தெரிந்து கொள்வார்கள். உள்ளூர் மக்கள் அவ்வாறு படிப்போ அனுபவமோ ஒரு போதும் பெற்றுவிட மாட்டார்கள் என்று அனுமானம் செய்வதும் அவ்வனுமானத்தின் அடிப்படையில் தந்தை உள்ளம் கொண்ட ஒரு அரசாங்கத்தை மேலேயிருந்து திணிப்பதும் ஏற்கக் கூடிய ஒன்றல்ல. ஏனெனில் இம்மக்கள் இதனால் ஓரளவு குடியுரிமையனுபவம் பெறும் வாய்ப்பு மறுக்கப்படுவதுடன் தமக்கு தம்முடைய சொந்தக் கருத்தில் தமக்கு நல்லது எது என்பதைத் தீர்மானிக்கும் உரிமையும் மறுக்கப்பட்டு விடுகிறார்கள். உள்ளூர் மக்களுடன் பெரும்பாலும் கலந்து பேசிச் செய்யப்படுவதானாலும், தமிழ் பேசும் பிரதேசத்தைப் பற்றிய அனுபவமில்லாத ஒரு சிங்கள அரசாங்க அதிபர் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்காகவோ மட்டக்களப்பு மக்களுக்காகவோ ஒரு தீர்மானம் எடுப்பதென்பது கண்டிப் பகுதியையோ அல்லது தென்மாகாணத்தின் தொலையிலுள்ள ஒரு பிரதேசத்தையோ வெற்றிகரமாக நிர்வகிக்க வேண்டுமென்று ஒரு தமிழ் அரசாங்க அதிபரை எதிர்பார்க்கும் அளவிற்கு மடத்தனமானதாகும்.

### அதிகார பரவல்

அதிகாரப் பரவல் என்பதைப் பல வகைகளாற் செயற்படுத்தலாம்.

(1) இந்தப் பலவகைகளில், உச்ச நிலையிலுள்ளதுதான் இணைப்பரசு. தன்னுதிபத்தியமுள்ள தனி நாடுகள் நிறுவிக்கொள்வதான முறைக்கு அடுத்தபடியாக, மாகாண அரசுகளுக்கு உயர்ந்த பட்சப் பாதுகாப்பை நிச்சயப்படுத்துவது இணைப்பாட்சியேயாகும். இணைப்பாட்சியின் கீழ் மத்திய அரசாங்கத்திற்

(18-ம் பக்கம் பார்க்க)


உங்கள் குழந்தைகளின்
ஆரோக்கிய வளர்ச்சிக்கு
ஆதாரமாக 13 வித ஜீவ சத்துக்களும்
மற்றும் ரசமான சத்துக்களும்
கொண்டது
மேஜி பால்




ஏகவிநியோகஸ்தர்கள்:
த. கணேசன்
19 K. செட்டியார் தெரு
கொழும்பு

ஓடு செங்கல் உற்பத்தி இயந்திரங்களும்

இரும்பு வார்ப்புகளும் இரும்பல்லாத வார்ப்புக்களும்

தொழிற்சாலை நிர்மாணம்

கொப்பரு ஆலைகள்

இயந்திரங்கள் பழுதுபார்த்தலும் மேற்பார்வையும்

தண்ணீர் விநியோகமும் வடிகளும்

உருக்கிலான கட்டிட வேலையும் நிர்மாணமும்

மின்சார இணைப்புகள்

வீடமைப்பு

எஸ்டேட் பொருள் விநியோகம்

சாமுவேல் சன்ஸ் அன்ட் கம்: லிமிட்

கொழும்பு—யாழ்ப்பாணம்.

ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல், மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங்கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

இத்துடன் "ஆனந்தா தைலத்தை" த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 6-00 சிறியது ரூபா 3-25

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11

# சினிமாப்பைத்தியங்களுக்கு ஒரு வார்த்தை!

டைரக்டர் கே. எஸ். கோபால கிருஷ்ணன்

ஸினிமாப் படத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை, சினிமாக்கலையைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் பொதுமக்களுக்குஇருப்பதில் தவறில்லை. ஆனால் சினிமாப் பித்து கூடாது.

இன்றுள்ள மலிவான பொழுதுபோக்கு சினிமா தான். பட்டி தொட்டிகளிலுள்ள மக்களையும் சினிமா விடுவதில்லை. உழைத்துக் களைத்தவன், படித்து அலுத்தவன் தன்னை மறந்து இரண்டு மூன்று மணி நேரம் பொழுதைப் போக்குவதுடன், ஏதாவது நல்லனவற்றை தெரிந்துகொள்ள வாய்ப்பிருந்தால் தெரிந்து கொண்டு அந்த அளவோடு நின்றுவிட வேண்டும். கனவு காண ஆரம்பிக்கக் கூடாது.

கனவுகாண ஆரம்பித்தால் தன்னையொரு கதாநாயகனாகவோ, கதாநாயகியாகவோ கற்பனை செய்து கொள்ளுகிறார்கள்.

இது விபரீதமாக முடிகிறது.

இல்லாத ஒரு தகுதியை இருப்பதாக எண்ணுவதாலும் அரைகுறையாக உள்ள திறமையை முழுமையென எண்ணுவதாலும் பலர் நாட்டுப்புறங்களிலிருந்து சினிமாப் பித்துக் கொண்டு நகரத்துக்கு வருகிறார்கள். வருகிறவர்கள் கைப்பொருளை இழப்பதுடன், மானத்தை இழக்கும் நிலைக்கும் ஆளாகிறார்கள். மாளிகைவாசம், படகு போன்ற கார் சவாரி, கைநிறையப்பணம்இவற்றை எதிர்நோக்கி வருபவர்கள், நாதியற்றவர்களாக நடைபாதையில் திரியும் அவல நிலைக்கு ஆளாகிறார்கள். சில உண்மைகளைத் தெரிந்து கொள்ளாத காரணத்தால் அவர்களுக்கு இந்நிலை ஏற்படுகிறது. இன்று சினிமாத் துறையை எடுத்துக்கொண்டால் ஒரு எம். ஜி. ஆர்., ஒரு சிவாஜி, ஒரு ஜெமினி, ஒரு ராஜேந்திரன், நடிகைகளை எடுத்துக்கொண்டால், ஒரு சரோஜாதேவி, ஒரு சாவித்திரி, ஒரு விஜயா, இப்படி எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் விரல்விட்டு எண்ணிவிடலாம். ஆனால் திறமையிருந்தும் முன்னணிக்கு வரமுடியாமல் இன்று சினிமாத் தொழிலில் எத்தனை பேர் இருக்கிறார்கள் தெரியுமா?

வெளி உலகத்தவர்கள் பத்திரிகைகள் வாயிலாக அறிவது மேல்மட்டத்தில் உள்ள ஒரு சிலரைப்பற்றித்தான். தொழில் தெரிந்தும், திறமை இருந்தும், மேலே வரமுடியாமல் தவிக்கும் பலரைப்பற்றி பத்திரிகைகள் எழுதுவதில்லை. அப்படி எழுதினால், பொதுமக்கள் நடிகைகளிடமும், நடிகர்களிடமும் வைத்திருக்கும் அளவுக்குமீறிய பித்தும், சினிமா மோகமும் பெருமளவில் தணியக்கூடும் என்பது என் நம்பிக்கை.



வெண்ணிற ஆடை படத்தில் கவர்ச்சி நடிகை ஜெயலலிதாவின் ஒரு எழிற்தோற்றம்



கொழும்பு சிந்தெட்டிக் தொழிற்சாலைக்கு இலங்கை அழகு ராணிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட 12 அழகிகள் சமீபத்தில் விஜயம் செய்தனர் அவர்களை சிந்தெட்டிக் தொழிற்சாலை உரிமையாளரான திரு ஞானம் வரவேற்றார். சிந்தெட்டிக் தொழிற்சாலையில் தயாரான பட்டர் நைலோன் சேலைகள் அவர்களுக்குப் பரிசளிக்கப்பட்டது. படத்தில் அழகிகள் சேலைகள் தெரிவு செய்வதையும் சிந்தெட்டிக் நிர்வாக அதிபர் திரு. கவுகம் உரிமையாளர் திரு. ஞானமும் நிற்பதையும் பும் காணலாம். திரு. பீட்டர் கெனமன் அவர்களும் அழகிகளுடன் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்தச் சந்திப்புக்கு செல்வி. சாமுவல் ஏற்பாடு செய்திருந்தார்.

## 'சமுதாயம்' ஜூலை 8ல் திரைக்கு வருகிறது

இலங்கையில் தயாரிக்கப்பட்டு வந்த தமிழ்ப் படமான எச்வி பிலிம்சாரின் 'சமுதாயம்' ஜூலை மாதம் 8ம் திகதி சிலோன் தியேட்டேசைச் சேர்ந்த கொட்டக் கொடை மானில் தியேட்டரில் திரையிடக் காத்திருக்கிறதென்று தெரிகிறது. இப்படம் பெரும்பாலும்முடியும் கட்டத்தை நெருங்கிவிட்டது.


# இப்பொழுது மணம் பரப்புகிறது!

சென்ட்ரல் — (மருதானை) ஈரோஸ் — (பாமன்கடை)

ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஓடியன் (கண்டி) லிபர்டி (ஹட்டன்) சிகிரி (பண்டாரவளை) ஜோதி (திருகோணமலை)

ஆகிய திரைகளில்

ஸ்ரீ பாலமுருகன் பிலிம்ஸார் தயாரித்தளிக்கும்

# தாழம்பூ

எம். ஜி. ராமச்சந்திரன்—கே. ஆர். விஜயா

எம். என். நம்பியார், எம். ஆர். ராதா, எஸ். ஏ. அசோகன், மணிமாலா,

நாகேஷ், மனோரமா, புதுமுகம் ராதா நடித்தது.

டைரெக்ஷன்

என். எஸ். ராமதாஸ்





விறுவிறுக்கு விறுவிறு பரபரப்பைத் தோற்றுவிக்கும்

கதை, வசனம்: ஆரூர்தாஸ்
பாடல்கள் கவிஞர் கண்ணதாசன் ஆலங்குடிச்சோமு

சண்டைகளும், திடுக்கிடும் சம்பவங்களும் நிறைந்த துப்பறியும் நவீனம்

இசை கே. வி. மகாதேவன்
பின்னணி சௌந்தரராஜன் சுசிலா

## எதிர்பாருங்கள்!

| | | | |
|---|---|---|---|
| சித்ரா புரொடக்ஷன்ஸ் | ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ் | சன்பீம்ஸாரின் | ஏ. எல். எஸ், புரொடக்ஷன்ஸ் |
| சித்தி | கந்தன் கருணை | சாது மிரண்டால் | ஆனந்தி |
| திரைக்கதை-வசனம்-டைரெக்ஷன் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் பத்மினி, ஜெமினிகணேசன் எம். ஆர். ராதா நடித்தது. | (ஈஸ்ட்மன் கலர்) சிவாஜிகணேசன், கே. ஆர். விஜயா, ஜெயலலிதா நடித்தது. | திரைக்கதை—ஏ. பீம்சிங் டைரெக்ஷன் திருமலை—மகாலிங்கம் நாகேஷ்—டி. ஆர். ராமச்சந்திரன் மனோரமா நடித்தது. | திரைக்கதை—சோலைமலை டைரெக்ஷன் ப. நீலகண்டன் எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி நடித்தது. |

# திரு. செல்வநாயகத்தின் தோற்றம் ஏமாற்றி விட்டது

---o---

## தமிழரசுத் தந்தை பற்றி கே. ஏ. தங்கவேலு


"ஈழத்தில் திரு. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற வியக்கத்தக்க உரிமைப் போராட்டங்களை யெல்லாம் நான் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன். அப்பொழுதெல்லாம், திரு. செல்வநாயகம் என்ற அந்த மனிதர் ஆஜானுபாகுவான தோற்றமும், வலிவான உடற்கட்டும் உடையவராக இருப்பார் என்றே எண்ணியிருந்தேன். ஆனால் ஈழம் வந்து தலைவர் செல்வநாயகத்தைச் சந்தித்தபோது அவரைப்பற்றி நான் கொண்டிருந்த கற்பனைத் தோற்றம் தவறானது என உணர்ந்தேன் அண்ணல் காந்தியடிகளின் முகத்தில் காணப்பட்ட அந்த ஆத்மீகக் களையை திரு. செல்வநாயகத்தின் முகத்திலும் பார்க்கக்கூடியதாயிருந்தது '' இவ்வாறு நகைச்சுவை நடிகர் டணால் கே. ஏ. தங்கவேலு தமிழரசுத் தந்தையைப்பற்றி அவரிடம் கேட்டபோது நமது நிருபரிடம் கூறினார்.

திரு. தங்கவேலுவை நமது நிருபர் பேட்டிகண்டு தமிழரசுத் தந்தையைப்பற்றி வினவியபோது மேலும் அவர் கூறியதாவது:-

'உங்கள் நாட்டு அரசியலில் நான் தலையிடப்போவதில்லை--அரசியல் கட்சி எதிலுமே--இந்தியாவிலும்கூட, நான் சேர்ந்திருக்கவில்லை. ஆனால், தமிழர் தலைவரான திரு. செல்வநாயகத்தைப் பற்றி அபிப்பிராயம் கூறுவது அரசியலுக்கு அப்பாற்பட்டது என்றுதான் நினைக்கின்றேன்.

'திரு. செல்வநாயகம் அவர்கள் ஒரு அவதாரபுருஷர். தமிழ்பேசும் மக்களையும், தமிழ்மொழியையும் காப்பாற்றி இரட்சிப்பதற்கென்றே அவர் பிறந்திருக்கிறார்.

'அவர் தலைமையில் ஈழத்தில் நடைபெற்ற போராட்டங்களைக் கேள்வியுற்று மகிழ்ந்தவன் நான். அவரைக் காணவேண்டும், அவரது பாதங்களைத் தொட்டு வணங்கவேண்டும் என்று பலகாலமாக ஆசைப்பட்டுக் கொண்டுவந்தேன். சரசுவதி மண்டபத்தில், திரு. செல்வநாயகத்தைச் சந்தித்தேன். பலநாட்களாக கொண்டிருந்த ஆவல் அன்றுதான் தீர்ந்தது. தமிழர்களின் தலைவரை ஆசைதீர கண்குளிர பார்த்து மகிழ்ந்தேன். அவரைப் பார்த்ததனால், இலங்கை முழுவதையுமே சுற்றிப் பார்த்துவிட்ட ஒரு பிரமை எனக்கு ஏற்படுகிறது'.



பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெற்ற "விமலா" நாடகத்திற்கு தலைமை வகித்த திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களிடம் ஆசி பெறுகிறார் டணால். கே. ஏ. தங்கவேலுவின் மனைவி நடிகை எம். சரோஜா. அருகில் மட்டக்களப்புப் பிரதிநிதி திரு. செ. இராசதுரையும் காணப்படுகிறார்.


ஜூன் 29-புதன்கிழமை முதல்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

மற்றும் சினிமாஸ் திரைகளில்

● தியாக உணர்ச்சிகளை பிரதிபலிக்கும் சிறந்த திரை ஓவியம் ஸ்ரீதரின் வெண்ணிற ஆடை.

● ஒரு பெண் பைத்தியமாக இருந்தபோது எதற்கோ சிரித்தாள்... எதற்கோ... அழுதாள்... ஆனால் மனநிலை தெளிந்த பிறகு எதற்கோ துடித்தாள்...

● கல்யாணப் பரிசின் வசந்தி நெஞ்சில் ஓர் ஆலயத்தின் சீதா, இன்று வெண்ணிற ஆடையின் சோபாவாக மலர்ந்திருக்கிறார்.

● ஸ்ரீதரின் கற்பனைத் தோட்டத்தில் பூத்த மற்றொரு புனித மலர்தான் வெண்ணிற ஆடை!

சித்திராலயா அளிக்கும்

வெண்ணிற ஆடை

(ஈஸ்ட்மென் கலர்)



கவர்ச்சி நடிகை ஜெயலலிதா, ஸ்ரீகாந்த் மூர்த்தி பி. ஏ., நிர்மலா, சுந்தரராஜன், ருக்மணி, ஆஷா நடிப்பது

இசை விஸ்வநாதன் இராமமூர்த்தி

பாடல்கள் கண்ணதாசன்

கதை, வசனம், டைரக்ஷன் ஸ்ரீதர்

# அதிகார பரவலும்...

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் மாகாண அரசுகளுக்கு மிடையே உள்ள அதிகாரப் பங்கீடு, அரசமைபபுத் திட்டத்தின் மேலாண்மையும் அதன் முறைப்பும், மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசுகளுக்குமிடையே அல்லது மாகாண அரசுகள் ஒன்றுக்குள் ஒன்று தோன்றும் சச்சரவுகளில் நடுத் தீர்ப்பு வழங்கும் ஓர் உயர்நீதி மன்றம் ஆகியவையனைத்தும் மாகாண அரசுகளுக்குத் தேவையான பாதுகாப்புணர்ச்சியை ஊட்டுகின்றன; அத்துடன் பலம் வாய்ந்த அங்கங்கள் பலம் குறைந்த அங்கங்களை ஏப்பமிட முடியாது தடுத்தும் வைக்கின்றன இணைப்பாட்சி முறை; அநேகமாக பரீட்சிக்கப்பட்ட நாடுகளனைத்திலும் திருப்திகரமாகவே இயங்கி வந்துள்ளது. இணைப்பாட்சி முறை 'தால்வியுற்ற நாடுகளெல்லாம் மீண்டும் ஒற்றையாட்சி முறையை மேற்கொண்டனவேயல்லாது பிரிந்து போய் சுதந்திரத் தனியரசுகள் நிறுவியதில்லை. சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்துபோன சமீபத்திய உதாரணம் எதுவொன்றையும் நிருபிப்பதாக இல்லை. மலேசியாவுடன் சிங்கப்பூருக்கு ஏற்பட்ட இணைப்பு புறக்காரணங்களினுற் சிங்கப்பூர் மீது திணிக்கப்பட்ட ஒன்ருகும். அந்த இணைப்பு செயற்கையானது. எனவே ஆரம்பத்திலிருந்தே நிலைக்கக் கூடிய ஒன்ருய் இருக்கவில்லை.

### இணைப்பாட்சி

(2) அதிகாரப் பரவலைச் சாதிக்கக் கூடிய இன்னொரு ஆட்சியமைப்பு வகை 'அரைகுறை இணைப்பாட்சி' என்று வர்ணிக்கப்படலாம்: இந்தத் திட்டத்தின் கீழ் இணைப்பாட்சியிலிருப்பது போல மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்குமிடையே உள்ள முறைப்பான அதிகாரப் பங்கீட்டு வரையறை இல்லாதிருந்தாலும் குறிப்பிடத்தக்க அளவு நிருவாகத் தன்னுதினமும் சட்ட வாக்கற்ற தன்னுதினமும் மாகாண அரசுகளுக்கு உண்டு. இதன் கீழ் மாகாண அரசுகளுக்கு நியாயமான அளவு அரசாங்க அதிகாரப் பங்கு கிடைத்தாலும் காத்திரமான பிரச்சினைகளிற் தனக்கும் மாகாண அரசுக்கும் இடையே முட்டுக்கட்டை நிலை தோன்றினுல் மத்திய அரசு எந்தக் கட்டத்திலும் தலையிட முடியும்.

### தென்னுபிரிக்க பிரித்தானிய முறைகள்

இந்த 'அரைகுறை இணைப்பாட்சி' என்பதற்கு உதாரணமாகத் தென்னுபிரிக்காவிலுள்ள மாகாண மன்றங்களையும் ஒற்றையாட்சி நிலவும் பெரிய பிரித்தானியாவின் ஒரு பகுதியாகிய அல்ஸ்ரர் மாநிலத்தின் நாடாளுமன்றத்தையும் குறிப்பிடலாம். விரைவில் இலங்கையில் நிறுவப்படவிருக்கும் பிரதேச மன்றங்களையும் தென்னுபிரிக்காவிலுள்ள மாகாண மன்றங்கள் போன்றதான. அல்லது பெரிய பிரித்தானியாவிலுள்ள அல்ஸ்ரர் நாடாளுமன்றத்தைப் போன்றதான பிரதேச ஆட்சிக் கருவிகளாக மாற்றியமைத்து விடுவது சாத்தியமாயிருக்கலாம். இணைப்பாட்சி இங்கே ஏற்படுவதானுல் அரசமைப்புத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். அரசமைப்பை மாற்றுவதிலிருக்கும் கஷ்டங்களைக் கவனிக்கும் போது, இந்த இணைப்பாட்சிக்குப் பதிலாக 'அரைகுறை இணைப்பாட்சி' என்ற அதன் கீழ் அடுத்த திறமையதான அமைப்பை நிறுவிக் கொள்வது நல்லது. சட்டபூர்வமாக இந்த 'அரைகுறை இணைப்பாட்சி' முறை இருந்தாலும் மரபொழுங்குல் இதை நிறைவான இணைப்பாட்சியாக இயங்க வைக்க முடியும். ஆனுல் வகுப்பு வாத அரசாங்கம் ஒன்று அதிகாரத்திற்கு வந்தால் இந்த அமைப்பில் ஆபத்துக்கள் ஏற்படும். மத்திய அரசாங்கம் தொல்லை தரக் கூடிய வகையில் அப்போது நெடுகிலும் பிரதேச மன்றங்களிற் தலையிட்டுக் கொண்டிருக்க முடியும். சில சமயம் பிரதேச மன்றங்கள் கலைக்கப்படவுங்கூடும்.

எனவேதான் சிறுபான்மை மக்கள் பிரச்சினைக்கு இந்தப் பிரதேச மன்ற அமைப்பு முறை ஒரு 'தற்காலிகமான இசைவு' என்றும் நிரந்தரமான பரிகாரம் ஆகாது என்றும் தமிழரசுக் கட்சி கூறி வந்திருக்கிறது.

### பலாபலன்

(3) அதிகாரப் பரவலைச் செயற்படுத்துவதற்கான இன்னெரு முறை நிர்வாகத்தில் தன்னுட்சியாகும். எங்கள் சூழ்நிலையில் இதுதான் குறைந்த பட்ச பலன் பயப்பதாகும். மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டைத் தளர்த்திக்கொள்ளாமலே ஏற்கனவே உள்ள ஊராண்மை மன்றங்களின் அதிகாரத்தை அதிகரிப்பதாகவே இருக்கும், இந்த ஏற்பாடு இதன் கீழும் தற்போதைய ஒரே மைய நிர்வாகமே நீடிக்கும். மத்திய அரசாங்க அதிகாரம் நிர்வகிக்கப்படும் வழிமுறைகள் இதனுல் ஒரு சிறிது மாற்றமடைவதோ சில சமயங்களில் திசைதிருப்பப்படுவதோ தவிரக் கதை பழைய கதையாகத்தான் இருக்கும்.

இந்த வகையான உள்ளூர்த் தன்னுட்சி ஒரே தொடர்பான பிரதேசத்தில் வதியும் மக்களின் தேவைகள் அபிலாசைகளையோ தாம் வதியும் பிரதேசங்களின் தலைவிதியை ஓரளவு தமது சொந்தக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க விரும்பும் அபிலாசைகளையோ திருப்திப்படுத்த முடியாது.

# தமிழே உருவான....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தோல்வி வெற்றியின் அறிகுறி என்பதுபோன்று அன்று தமது இலக்கை அடையத் தவறினுலும் இன்று கொள்கைப் பலத்தினுலும் தொண்டின் சிறப்பினுலும் வட்டுக்கோட்டையின் நிரந்தர பிரதிநிதியயாக திரு. அமிர்தலிங்கம் திகழ்கிருர். 1952-ம் ஆண்டுத் தேர்தல் வெற்றியை அடையத் தவறிய போதிலும் அவர் மக்கள் மத்தியிலிருந்து மறைந்துவிடவில்லை. மக்களுடன் மக்களாக வாழ்ந்தார். அன்றே போராட்டங்களில் வீராவேசத்துடன் நேரடியாகக் குதித்தார். இன்று பிரதமர் டட்லி சேனநாயக்காவை வரவேற்கும் அதே கரங்களினுல் அன்று (1954) சேர். ஜோன் கொத்தலாவலைக்கு யாழ்ப்பாண மாநகரசபை முன்றலில் கறுப்புக் கொடி காட்டி பொலிசாரின் குண்டாந்தடிக்கு ஆளாஞர். அதைத் தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாக அவர் பொலீசாரின் குண்டாந்தடிக்கு பல தடவைகள் இலக்காகிஇருக்கிருர். காராக்கிரகத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் தவ வாழ்க்கை மேற்கொண்டுவிட்டார்.

தமிழின விரோதிகளின் (அவர்கள் சிங்கள வகுப்புவாதிகளாக இருககலாம் அல்லது நம்மிடையே உள்ள காக்கை வன்னியர்களாக இருக்கலாம்) சிம்ம சொர்ப்பனமாக விளங்குபவர் திரு. அமிர்தலிங்கம். அவர் என்றுமே தன்னை ஒரு தலைவரராகக் காட்டிக்கொள்வதில்லை. தமிழினத்தின் தொண்டன் என்று சொல்லிக்கொள்வதில் அவர் பெருமை காண்கிருர். அதுவே அவருக்கு மனநிறைவையும் கொடுக்கிறது. ஆனுல் மக்கள் அவரைத் தலைவராகவே அன்று முதல் நோக்குகின்றனர். இந்த உண்மையை அவர் ஏனே இன்றுவரை தெரிந்துகொள்ளவில்லை.

## 'கடவுள் எங்கே?'

''ஸ்புட்னிக் சுருட்டு'' 'யாரது?' ஆகிய நாடகங்களைத் தயாரித்தளித்த வானெலி நாடகக் குழுவினர் இம் மாதம் 24-ம் 25-ம் திகதிகளில் 'கடவுள் எங்கே?' என்ற நாடகத்தை அரங்கேற்றவிருக்கின்றனர். இந் நாடகத்திற்கான கதை, வசனத்தை சி. சண்முகம் எழுதியுள்ளார். நட்டுவாங்கப் பொறுப்பை ஜோர்ஜ் சந்திரசேகரனும், இசையமைப்பை வி. சங்கரலிங்கமும் ஏற்றுள்ளனர். பாடல்களை முத்துராசன் எழுதியுள்ளார்.


# சிலோன் தியேட்டர்ஸ் ஸ்தாபனத்தார்

## தமது திரைகளில் பெருமையுடன்

### அளிக்கவிருக்கும் மிகச் சிறந்த சில திரையோவியங்கள்!

**அரச கட்டளை**
எம். ஜி. ஆர், சரோஜாதேவி, நம்பியார்

**ஆசை முகம்**
எம். ஜி. ஆர். சரோஜாதேவி, நாகேஷ்

**மகாகவி காளிதாஸ்**
சிவாஜிகணேசன், சௌகார் ஜானகி நாகேஷ்

**ராணி மங்கம்மாள்**
ஜெமினிகணேசன், தேவிகா (வணணம்)

**திருவிளையாடல்** (வண்ணம்)
சிவாஜி, சாவித்திரி, தேவிகா' நாகேஷ்

**இதய கமலம்** (ஈஸ்மன் கலர்)
ரவிச்சந்திரன், விஜயா, பாலாஜி

**கன்னித் தாய்**
எம். ஜி. ஆர், ஜெயலலிதா, நம்பியார்

**இதயத்தில் நீ**
ஜெமினிகணேசன் தேவிகா எம். ஆர். ராதா

**இன்ப நிலா**
எம். ஜி. ஆர், சரோஜாதேவி

**நாடோடி**
எம். ஜி. ஆர், சரோஜாதேவி

ஜெமினியின்
**மோட்டார் சுந்தரம்பிள்ளை**
சிவாஜிகணேசன், சௌகார் ஜானகி ஜெயலலிதா, ரவிச்சந்திரன்

**அண்ணாவின் ஆசை**
ஜெமினிகணேசன், சாவித்திரி நாகேஷ்

**யார் நீ**
ஜெய்சங்கர் ஜெயலலிதா வீரப்பா

**தாயே உனக்காக**
சிவாஜிகணேசன் சாவித்திரி விஜயலட்சுமி எஸ். எஸ். ஆர் முத்துராமன் தேவிகா நாகேஷ்

**கள்வனின் காதலி**
எஸ். எஸ். ஆர், விஜயகுமாரி நாகேஷ்

**அன்புள்ள அத்தான்**
சிவாஜிகணேசன், சாவித்திரி

**ஹலோ மிஸ்டர் ஜமீன்தார்**
ஜெமினிகணேசன், சாவித்திரி

**பூமாலை**
எஸ். எஸ். ஆர், விஜயகுமாரி, அஞ்சலிதேவி, நாகேஷ்

**நீலவானம்**
சிவாஜிகணேசன், தேவிகா

# இயக்கமும் இலக்கியமும்

இப்னு சுல்தான்

தமிழ் மொழி உரிமைக்காகப் போராடும் அரசியல் வாதிகள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் இயக்கம் காணவேண்டும். இப்பணியினை பத்து ஆண்டுகளுக்கு முன்னரே செய்திருக்க வேண்டும். அன்று இதைச் செய்யத் தவறியதன் காரணத்தினால் மார்க்சிய வாதிகள் இடையில் புகுந்து தமிழ் இலக்கிய இயக்கத்திற்கு தலைமை தாங்க முற்பட்டனர். இடையில் ஏற்பட்ட பல மாற்றங்கள் அவர்களின் முயற்சிக்கு இடையூறாக அமைந்து விட்டது. இன்று நல்ல சூழ்நிலை ஒன்று உருவாகியுள்ளது. சிந்திக்கும் அவகாசமும் கிடைத்திருக்கிறது. இதனை நல்ல முறையில் பயன்படுத்தி தமிழ் இலக்கியத்திற்கு இயக்கம் காணதமிழ் மொழி உரிமைக்காக வாதிடும் நம்மவர்கள் முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறார் கட்டுரையாசிரியர்.

மிழ் மொழிக்கான உரிய அரசியல் அந்தஸ்தைப் பெறல் வேண்டும்' என்பதை இலட்சியமாகக் கொண்டு உழைத்து வரும் அரசியல்வாதிகள் கூட, தமிழ் இலக்கிய வளர்ச்சி குறித்து உரிய சிரத்தை காட்டாதிருப்பது விசனத்திற்குரியது. அக்கறை இல்லை என்பதல்ல; இத்துறை குறித்து ஆழமாகச் சிந்தித்துச் செயற்படுகிறார்களில்லை. 'இலக்கியத்தை வளர்க்கத்தான் பண்டிதர்கள் இருக்கிறார்களே எழுத்தாளர்கள் இருக்கிறார்களே! ஏன் அரசியல்வாதிகளாகிய நாங்கள் நுழைய வேண்டும்?' என்ற மனப்பான்மைதான் இந்த அசிரத்தைக்குக் காரணமாகும். இந்த மனப்பான்மை மாற வேண்டும்.

## தோற்றுவாய்

மொழிக்கு அரசியல் உரிமை கிடைத்தால், அது நிச்சயமாக இலக்கிய வளர்ச்சியிலேதான் முடிவடையும் என்று நினைப்பதும் தவறு. அதேசமயம் பண்டிதர்கள் தாங்கள் பழந்தமிழ் இலக்கியத்தை உரைத்து உரைத்து'க் காட்டுவதினாலேதான் இலக்கியம் வளருகின்றது என மருள்கொள்ளத்தேவையில்லை. இந்த 'உரைத்தல்' தரத்தை நிர்ணயிக்க உதவலாம். ஆனால், தரமான இலக்கியங்கள் தாமாகவே காலத்தை எதிர்த்துநிலைத்து நிற்கவல்லன! பண்டைய இலக்கியச் செழிப்பு என்ற உரத்திலே புதிய இலக்கியங்கள் தோன்றுகின்றன-தோன்றல்வேண்டும். அதுதான் வளர்ச்சிநிலை.ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிநிலை திருப்தியாக அமையாத படியால் சேதன பூர்வமான இலக்கிய இயக்கம் தோன்றுதல் அவசியம். அதிலே மொழியின் அரசியல் உரிமைச் சுதந்திரத்தில போராளிகளுக்கும் பங்கு உண்டு. இதனை தமிழ் அரசியல்வாதிகள் உணர்தல் வேண்டும்.

## எழுத்தும் எழுத்தாளனும்

இலக்கியம் சுயமேயான ஒன்றன்று. 'எழுத்தாளன் தன்னுடைய வளமான கற்பனையின் துணைகொண்டு எழுதுவதினாலேதான் இலக்கியம் வளருகின்றது" என்பதைப்போன்ற ஆபாசக்கருத்துப் பிறிதில்லை. ஓர் எழுத்தாளனையும் அவனுடைய சிந்தனையையும் அவன் வாழும் நாட்டின் நம்பிக்கைகள், நாகரிகப் பின்னணி, கலாசார நிலைகளன், வாழுஞ் சூழல், பழகும் பாத்திரங்கள், நாட்டின அரசியற் பொருளாதாரப் பிரச்சினைகள் எல்லாமே பாதிப்பதினால், அவனுடைய எழுத்துக்கள் இத்தாக்கங்களைப் பிரதிபலிக்கின்றன. இந்த உண்மை எல்லா இலக்கியங்களுக்கும் பொருந்தும்; சங்கந்தொட்டு வளர்ந்து வந்துள்ள தமிழ் இலக்கியத்திற்கும் பொருந்தும். மேலே நிரற்படுத்துப்பட்டுள்ள பல, இன்றைய சமுதாயத்தில், அரசியலினாற் பாதிக்கப்படுவன. எனவே, இலக்கிய வளர்ச்சி, அரசியற் பிரச்சினைகள் தொற்றியும் கிளைவிடுகின்றது. இதனை மறந்து அரசியலுக்கும் இலக்கியத்திற்கும் சம்பந்தமில்லையென வாளாவிருத்தல் முறையன்றது. இதனை வலியுறுத்த ஓர் உதாரணம் தருதல் நன்று.

## அமெரிக்காவில்....

அரசியற் சுதந்திரத்துடன் சேர்ந்து, 'இங்கிலாந்தின் இலக்கிய ஆதிக்கமும் வேண்டாம்' என்ற எழுச்சி அமெரிக்காவில் தோன்றிது. அரசியல் இயக்கமும், இலக்கிய இயக்கமும் கூறங் கோத்தன. இதன் பயனாகத்தான் தனித்தன்மையான அமெரிக்கத்தேசிய இலக்கியம் வளர்வதாயிற்று. வாரும் இலக்கியத் துறையான சிறுகதை இலக்கியத்தில் புதியதொரு தரிசனம் கண்டனர். அன்றைக் காலத்தில் இலக்கியத்திற்கான நோபல் பரிசுகளை அமெரிக்க எழுத்தாளர் பலர் பெற்றிருப்பது அமெரிக்க இலக்கிய வளர்ச்சியைக் காட்டுகின்றது. ஆங்கில மொழியில் அமையினும், இங்கிலாந்தின் இலக்கியமும் அமெரிக்கஇலக்கியமும் வெவ்வேறானவை என்பது வலியுறுத்தத்தத்தக்கது.

'அனுபவத்தாற் பெறும் அறிவுக்கு நாம் அதிகம் விலை செலுத்துகின்றோம். நீண்ட அலைச்சலின் மூலம் ஒரு குறுக்கு வழியைக் கண்டு பிடிப்பது போல்பது அனுபவம். அனுபவம் இருபது வருடங்களிற் கற்பிப்பதிற் பார்க்கிலும் அதிகமானவற்றை ஒருவருடத்திற்கல்வி ஊட்டிவிடுகின்றது.'

## அரசியல்வாதிகளின் கடமை

இந்த உண்மையறியாது இலக்கியத்தில் தாய்நாடு; சேய்நாடு என்ற மனோபாவங் கொண்டவர்களிருக்கிறார்கள். 'தமிழ் இலக்கியம் இந்தியாவில் வளர்ந்து வருகின்றதுதானே? அவர்கள்வளர்க்கட்டும், நாங்கள் வாசகர்களாக இருப்போம்' என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள். இதனால் நமது இலக்கிய வளர்ச்சி பாதிக்கப்பட்டிருப்பதுடன், நமது வாசகர் மத்தியில் மட்டரகமான இலக்கிய இரசனையும் வளர்க்கப்பட்டுள்ளது. இது வெற்றுக் குற்றச்சாட்டன்று. இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் சஞ்சிகைகளுள் இலங்கையில் அதிகம் விற்பனையாவது 'ராணி' 18,000 பிரதிகள்! தமிழ் Readers Digest ஆன மஞ்சரியின 450 பிரதிகள்மட்டுமே விற்பனையாகின்றன. இஃது எதைக் காட்டுகின்றது? ஈழத்தின் தமிழ் தேசிய பத்திரிகைகளின் சமீபகால போக்கைப் பாருங்கள். கவர்ச்சிப் படங்களும், சினிமாச் செய்திகளும் தாராளமாகப் புகுந்து, தரமான இலக்கியங்களுக்கான பிரசுரகளத்தை ஒரு மூலைக்கு ஒதுக்கிவிட்டன. ஈழத் தமிழ் இலக்கிய வளர்ச்சி கருதி,தரமற்ற சஞ்சிகைகள் வருவதைத் தடுத்தும், ஆற்றலிலக்கியச் சஞ்சிகைகள் நட்டமடையாத முறையில் நடத்தப்படுவதற்கான சகஜ நிலைகளையும் தமிழ் அரசியல்வாதிகளால் உருவாக்கித் தரமுடியும். இந்நிலைகளை ஏற்படுத்தித் தருதல் அவர்களுடைய கடமையுமாகும்.

## ஆற்றுப்படுத்தல் வேண்டும்

"கொப்பூழ்கொடி அறுந்தபின் சேய் ஒரு சுயம் என்பதை மறந்து விடுகின்றனர். காலப்போக்கில் சேய் தன்னிட்டப்படி செயலாற்றமுற்படுவது இயல்பு. தாய் எவ்வளவுதான் அநுபவம் பெற்றிருந்தாலும் பிள்ளைகள் நேர்மை தவறாது மனச்சாட்சிக்கேற்பத் தன் விருப்பப்படி தனது வாழ்க்கையை அமைப்பது உலகியல் நியதி' என்பதைக்கூட அறியாது 'கல்கி'யையும் 'குமுத'த்தையும் வாசித்த அருட்டுணர்வினால் எழுத்தாளராகியவர்களும் நம் மத்தியில்இருக்கிறார்கள். நம் நாட்டினதும், நம் மக்களினதும் ஜீவனைத் தரிசிக்காத இவர்களால் எப்படி ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உபயோகமாகப் பணியாற்ற முடியும்? இவர்களுட் சிலரேனும்எழுத்தாற்றலுள்ளவர்கள என்பது மறுப்பதற்கில்லை. அரசியல் சார்ந்த ஓர் இயக்கத்தினால் இவர்கள் போதகமடைவார்களேயானால், இவர்களினால் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி குறித்துப் பயனுள்ள தொண்டு இயற்றுதல் சாலும் என்பதையும் தமிழ் அரசியல்வாதிகள் உணர்தல் வேண்டும்.

## ஈழத்து இலக்கியமும் சாகித்தியமண்டலமும்

தமிழில், சங்ககாலந் தொட்டு இலக்கிய இயக்கங்கள் தோன்றியுள்ளன. சில இயக்கங்கள் சூழலால் உருவாக்கப்படுபவை; சில மக்களால் உருவாக்கப்படுபவை. சங்க இலக்கிய இயக்கம் மக்களால உருவாககப்படடது. இவ்வியக்கத்தின் பயனை யாவரும் அறிவர். அண்மைக் காலத்தில்,இலக்கியவளர்ச்சி குறித்து சாகித்திய மண்டலம அமைக்கப்பட்டுள்ளது. இதன் தமிழ்ப் பிரிவுநாட்டுப் பற்றுடனும், தமிழ் இலக்கியப் பற்றுடனும் செயற்படுமேயானால், தமிழ் இலக்கிய வளர்ச்சி குறித்து நற்பணியாற்ற முடியும். சுயம்-கட்சி ஆகியவற்றின் ஆதாயங்களுக்கு அப்பாற்பட தமிழ் இலக்கிய வளர்ச்சியையே மூச்சாகக்கொண்டோர்மண்டலத்திற் பணி புரிதல்வேண்டும். சிறுகதை-நாவல்-நாடகம் எதையும் எழுதாத அதன் நுட்பங்களை அறியாத ஒருவரால் அவற்றின் நலன்களைப் பேண முடியுமா? தமிழ்க் கவிதையிற் பயிற்சியோ, அன்றேல் திளைப்போ இல்லாதவர்களாற் கவிதையின் தரத்தை எடைபோடுதல் சாத்தியமா? இலாயக்கில்லாதவர்களே இலக்கியம் வளர்க்கவல்ல ஒரு நிறுவனத்தில் பிரதிநிதுவப்படுத்தப்பாற் புகுகின்றனர். காரணங்கள் என்ன? தமிழ் அரசியல்வாதிகள் அசிரத்தையுடன் கண்விழிப்பாக இல்லாமலிருப்பதும் ஒரு காரணம் என்பது மறுப்பதற்கில்லை.

## தவறிவிட்டனர்

தென்னகத்தில் தமிழ்உணர்ச்சியைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் போன்று வேறு எந்த இயக்கமும் வளர்க்கவில்லை. தமிழுக்காகத் தம் உயிரையேஅர்ப்பணிக்கும் அளவிற்கு அவ்வுணர்ச்சி வளர்ந்துள்ளது. ஆனல், அவ்வுணர்ச்சியை தி.மு.க இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றுப்படுத்தத் தவறிவிட்டது. ஆற்றலிலக்கியத்தில் அவர்கள் பங்கு என்ன என்பதற்குப் பூஜ்ஜியமே விடை. அரசியல் இயக்கம், இலக்கியத்தை அசிரத்தையுடன் நோக்கியமைதான் இதற்குக் காரணம். சாமானியன் உணர்ச்சி வசப்படுகின்றான். உணர்ச்சியைப் பற்றுகவும் பண்பாடாகவும் நிறுவுவதற்கு இலக்கியம் துணை செய்கின்றது. தமிழ் அரசியல்வாதிகள்தமிழ் உணர்ச்சியை வளர்த்துள்ளார்கள் மறுப்பதற்கில்லை. ஆனல்,தமிழ் உணர்ச்சியைப் பிரதிபலிக்கு எத்தனை கவிதைகள் நமக்கு இலக்கியமாகக் கிடைத்தன? எத்தனை கதைகள் இலக்கியமாகத் தேறின? காரணமென்ன? ஆழ்ந்து சிந்திக்கின் தமிழுணர்ச்சியை வளர்த்த அரசியல் வாதிகள் அவ்வுணர்ச்சிகளுக்கு நிலையான இலக்கிய வடிவங் கொடுக்கவல்ல இலக்கிய இயக்கத்தைத் தோற்றுவிக்கத் தவறிவிட்டனர்.

## சுதந்திரனின் தொண்டு

'இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலாகவும் உணர்ச்சிக் குரலாகவும் சுதந்திரன் வெளி வந்து கொண்டிருக்கிறது. தினசரி ஏடுகள் இந்திய ஆரம்ப எழுத்தாளர்களின் பயிற்சிக் களமாகவும், 'ஈழகேசரி' பண்டித சர்ச்சைகளுக்கும் யாழ்ப்பாணப் பழகு தமிழுக்கும் பாலமாகவும் வெளிவந்து கொண்டிருந்த காலத்தில், ஈழமாதேவி சுதந்திரக் குழவியைப் பிரசவிக்க நோக்காடு கண்டிருந்த 1947 ம் ஆண்டில் 'சுதந்திரன் பத்திரிகை பிறந்தது. 1947 ற்குப் பின்னர் எழுத்துத் துறையில் புகுந்து, இன்று தங்களை 'எழுத்துலக ஜாம்பவான்கள்' என்று நினைக்கும் பலரை உருவாக்கி வளர்த்த பெருமை சுதந்திரனைச் சாரும். 1947க்கும் 1956க்கும் இடைப்பட்ட காலத்தின் இலக்கிய வளர்ச்சியின் களமாகச் சுதந்திரனே திகழ்ந்தது. பின்னர் என்ன நிகழ்ந்தது? இதற்கான சரியான விடையைக் காண 1956 க்கும் 1966 க்கும் இடைப்பட்ட காலத்தின் இலக்கிய இயக்க வரலாற்றை பரிசிலனை செய்தல் அவசியமாகும்.

## இயக்கமும் எழுத்தாளர்களும்

களனி மகாநாட்டில் 'சிங்களம் மட்டுமே 'உத்தியோக மொழி என்ற தீர்மானம் நிறைவேற்றப் பட்டதுடன், தமிழ் மொழிக்கு அரசியல் உரிமை பெறல் வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்பட்டது. அந்த உணர்ச்சியை நேர்மையாகப் பிரதிபலிக்க வல்லவர்கள் சுதந்திரன் பண்ணை வளர்த்த எழுத்தாளர்களே என்ற நம்பிக்கையும் தமிழ்மக்கள் மத்தியிலே

(19-ம் பக்கம் பார்க்க)


மலச் சிக்கல் மற்றும் அஜீரணக்கோளாறுகளுக்கு

ரிஷிலேகியம்

66 வருடங்களாகப் புகழ் பெற்றதும் வைத்திய பரம்பரை ஆயுர்வேத டாக்டர் T. H. மதுரநாயகம் வைத்தியராஜ் அவர்களால் தயாரிக்கப்பட்டதுமான அபூர்வ சஞ்சீவி.

ரிஷி லேகியம் நாள்தோறும் மலத்தை ஒழுங்காக வெளியேற்றி, கைகால் அசதி, கை கால் கணுக்களில் வலி, தேகசாங்கை, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வாய்வு, வாதம், திரேகமெலிவு, பசியின்மை, கண் எரிச்சல், நெஞ்செரிவு, வாய்ப்புண், சோம்பல், குதக சிக்கல், உள்மூலம், வெளிமூலம், இரத்த சிழ்மூலம் முதலிய வியாதிகளை அதிவிரைவாக குணப்படுத்துகிறது. ஆப்ரேசனின்றி மூலவியாதியை குணப்படுத்த விரும்புவோர் ரிஷி லேகியம் சாப்பிட்டால் உடன் பலனடைவர். சுகபேதியாகவும் உபயோகிக்கலாம். பத்தியமில்லை.

15 நாள் மருந்து ரூ. 3-50

30 நாள் மருந்து ரூ. 6-50




ரிஷி நேத்திர சஞ்சிவியின் புதிய விலை:

6 அவுன்ஸ் பாட்டல் 3-50

12 ,, ,, 6-50

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் ஆழ்ந்து சிந்திக்கும் நுண்ணறிவையும் பாராட்டினராம்.

## மொராக்கோ சுதந்திரத்திற்கு....

### ரஷ்யப் பயணம்

இருப்புத்திரை யென்று அழைக்கப்பட்ட ரஷ்யாவுக்கு முதன் முதலாகச் சென்ற சிலரில் டாக்டர் நாகநாதனும்ஒருவர். முதன் முதலாக ரஷியா சென்று 18 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்ட அக்குழுவில், டாக்டர் நாகநாதன், ஜோர்ஜ் வாண்டர்பா தம்பதிகள், சாக்லட்வாலா, முன்னள் இந்திய பாதுகாப்பு மந்திரி கிருஷ்ணமேனன் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

### தந்தையுடன் தர்க்கம்

இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கு பற்றி இரத்தம் சிந்திய பெருமையும் டாக்டருக்கு உண்டு. டாக்டர் இங்கிலாந்தில் தமது வைத்தியப் படிப்பை படித்துக் கொண்டிருந்த போது, விடுதலை நாட்களை கழிப்பதெந்கென சென்னைக்கு வந்தார். டாக்டர் சென்னையில் காலடி எடுத்து வைத்த சமயம், இந்தியாவுக்கு வருகை தரவிருந்த வேல்ஸ் இளவரசருக்கு பெரிய வரவேற்புகள் அளிக்க அன்றைய பிரிட்டிஷ் அரசு ஆயத்தம் செய்து கொண்டிருந்தது. ஆனல், இந்திய விடுதலை இயக்கமான இந்திய தேசிய காங்கிரஸ், வேல்ஸ் இளவரசர் விஜயத்தை பகிஷ்கரித்ததுடன் கறுப்புக் கொடி காட்டவும் முடிவு செய்திருந்தது.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பதிவாளராக இருந்த டாக்டரின் தந்தையும் வேல்ஸ் இளவரசருக்கு வரவேற்பளிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். தந்தையின் முயற்சியை அறிந்த இளைஞர் நாகநாதன் குமுறி எழுந்தார். தந்தையுடன் பலமாக தர்க்கித்தார். தந்தையின் செயல் பாரதூரமான துரோகம் எனக் கண்டித்தார். கடைசியில் வெற்றி பெற்றது திரு. நாகநாதன் தான். மகனின் எதிர்ப்பைக் கண்டு தமது திட்டத்தை தந்தை கைவிட்டார்.

பின்பு நடைபெற்ற கறுப்புக்கொடி பகிஷ்காரத்தில் டாக்டர் அவர்களும் பங்கு பற்றினர். அதன் பயனக பொலிசாரின் குண்டாந்தடிகள் அவரது நெற்றியிலும், முதுகிலும் பதிந்தன.

### மறக்கமுடியாத நிகழ்ச்சிகள்

டாக்டர் நாகநாதன் 1947 முதல் இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் அரசியல் நிகழ்ச்சிகளில் மறக்க முடியாத பங்கு கொண்டு வருவது யாவரும் அறிந்ததே. தானே முன்னின்று ஏற்படுத்தி தானேகொள்கை வகுத்துக் கொடுத்த தமிழ் காங்கிரஸ் திசை மாறி தமிழ்த் துரோகியாக மாறியவுடனே தந்தை செல்வாவுடன் சேர்ந்து தமிழரசு இயக்கத்தை தோற்றுவித்ததும், இயக்க வளர்ச்சிக்காக உழைத்து வந்ததும், உழைத்து வருவதும் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைப் போராட்டங்களில் எல்லாம் முன்னேடும் பிள்ளையாக விளங்கியதும்-விளங்கி வருவதும் தமிழ் பேசும் மக்களுக்கு தெரிந்ததே. 1956ம் ஆண்டு காடையர்களுடன் தன்னந் தனியே நின்று டாக்டர் அவர்கள் பொருதிய வீரமும், 1961ம் ஆண்டுப் போராட்டத்தில் பொலிசாரின் குண்டாந்தடி டாக்டர் தலையிற்பட்டு முறிந்ததும், என்றுமே மறக்க முடியாத சம்பவங்கள். எங்கும் எதிலுமே முன்னிற்கும் நெஞ்சுறுதியும், அச்சமே அறியாத வீர உள்ளமும், டாக்டர் அவர்களுடன் கூடப்பிறந்தவையாகும். இதற்கு முன்பு இருமுறை டாக்டர் அவர்கள் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளராகப் பணியாற்றி இயக்க நண்பர்களுடைய அன்பையும் தமிழ் பேசும் மக்களின் நம்பிக்கையையும் பெற்றுள்ளார்.

### புதிய தலைவர்

தனது 60ம் அகவையில் நடைபோடும் இரும்பு மனிதரான இளைஞர் டாக்டர் நாகநாதன் கட்சியின், புதிய தலைவராக பதவியேற்க விருக்கிருர். டாக்டரின் தலைமையில் தமிழரசு இயக்கம் தனது இலட்சியப் பாதையில் மென்மேலும் முன்னேறும் என்று எதிர் பார்ப்போம்!


## உலக....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கழகமும் இருக்கிறது. பிரெஞ்சு மொழிக்கு 'ஜெனிவா' என்று தனியாக ஒரு பல்கலைக்கழகம் இருக்கிறது. அத்துடன் பிரெஞ்சு--ஜெர்மன் மொழிகளைப் போதன மொழிகளாகக் கொண்ட 'பிரிபேக்'பல்கலைக் கழகமும் இருக்கிறது.

### இன்றியமையாதது

வித்தியாலங்கார-வித்தியோதய பல்கலைக்கழகங்களையும் காலமாற்றத்திற்கேற்ப தேசியபல்கலைக்கழகங்களாக மாற்ற அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. பேராதனையில் உள்ள பல்கலைக்கழகம் இரு மொழிகளையும் போதன மொழிகளாகக்கொண்ட பல்கலைக்கழகமாக மாறப்போகிறது. இந்தநிலையில் தமிழைப் போதன மொழியாகக் கொண்ட பல்கலைக்கழகம் நமக்கு மிகவும் இன்றியமையாதது.



# டிஸ்பிரின்

## வலியிலிருந்தும் காய்ச்சற் குணத்திலிருந்தும் நம்பிக்கையான துரித நிவாரணமளிக்கிறது.

டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உட்கொள்ளுங்கள். அது உங்களுக்கு உடனடி நிவாரணம் தரும்.




விரிவான ஆராய்ச்சிகள் செய்து விசேஷ சேர்வம்சங்கள் கொண்டதாக தனி முறையில் தயாரிக்கப்பட்டது - டிஸ்பிரின். இதனுல் தான் டிஸ்பிரின் விரைவாய் இரத்தோட்டத்தில் சேர்ந்து உடன் நிவாரணமளிக்கிறது.

தலைவலி, காய்ச்சற் குணம், உடல்வலி, பல்வலி, மாதவிடாய் முதலியன தரும் வேதனையிலிருந்து விடுபட, டிஸ்பிரின் உட்கொள்ளுங்கள்.

உலகெங்குமுள்ள டாக்டர்கள் நம்பிக்கையுடன் சிபார்சு செய்வது டிஸ்பிரின்.

டிஸ்பிரினை உட்கொள்ளுதல் சுலபம். அதைத் தண்ணீரிற் கரைத்துக் குடிக்கலாம்; அல்லது வில்லையாகவே விழுங்கி விடலாம்.

றெக்கிற் அன் கோல்மன் தயாரிப்பு.

J.W.T R.C.91

அரசாங்கத்தின் 24217ம் இலக்கத்திற் பதிவு செய்யப்பட்டது.

# குதிரைப்பயில்வான் லேகியம்

விலையுயர்ந்த பல ராச மருந்துச் சரக்குகளைக் கொண்டு யூனனி வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்டது. குதிரைப் பயில்வான் லேகியம்.

சுறு சுறுப்பு, உற்சாகம், பசியின்மை, தாது விருத்தி, நித்திரையின்மை, மலச்சிக்கல், இவைகளுக்கு குதிரைப் பயில்வான் லேகியத்தையே பாவியுங்கள்.

**சேர்டின்களாகவும், 10 சத பக்கெட்டுகளாகவும் எங்கும் கிடைக்கும்.**

**கமால்தீன் லேகியம் கொம்பனி**
**NO 2 மருதமுனை**
**கல்முனை.**

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

# களரி

ரைச் சொல்.) மிருக வெறியொன்று மனிதக் குரலிற் பேசுகின்றது.

'ஆரிய சிங்கள லேதமாய்—மகே எங்கேத் துவனவே. மட்ட கமித்தி ஒகெத் எக்க யன்ட, கன காட்டுவென் இன்ன வா பவுலா சனீப்ப நெத்தி நிசாங். விசுவாசங் பிளிகன்ட மங் ஒகேற்றடமாய் சகயோகய தென்ன' ('எங்களுடைய உடம்பிலேயும் ஆரிய சிங்கள ரத்தந்தான் ஓடுது. எனக்கும் விருப்பம் உங்களோடை வாறதிற்கு. நான் துக்கத்தோடை இருக்கிறன் விசுவாசமாகச் சொல்லுகின்றேன். உங்களுக்கு எப்பவும் ஆதரவு தரத் தயார்.) இது நிச்சயமாக ரத்னயக்காவின் குரல் என்பது தெரியும்.

அப்பொழுது சுதுமெனிக்காவின் அனுங்கல் குரலும், 'மகே அம்மே...' என்ற அவலக் குரலும் முன் அறையிற் கேட்கிறது.

'அத்த தமாய். ஹரி கிஹின் என்னங். பொரு நங் உம்பல தென்னம நெத்தி வெய்' (உண்மைதான். சரி நீங்கள் போயிட்டு வாறம். பொய் என்றால் ரெண்டு பேரும் இல்லாமல் போய் விடுவியள்) என்று எச்சரிக்கை செய்து செல்கின்றார்கள்.

அவர்கள் வந்து சென்ற சுவடு தேய்கிறது. பயங்கர அமைதி தொடர்கின்றது. அமைதியைத் தொடர்ந்து ரத்னயக்காவின் அத்திரக் குரல் ஒன்று கேட்கின்றது.

'ஹரியட்டம மே கட்டிய ட்ட பிஸ்ஸு தமாய் நெத்தங் அப்பே சகோதரயா வாகே ஜீவித் வென தெமல சகோதரயாவ கண்ட என வாத.' (இந்தக் கோஷ்டிக்கு விசர் பிடித்திருக்கிறது. இல்லாவிட்டால் எங்கள் சகோதரர் போல சீவிக்கும் தமிழரைத் தின்ன வருவாங்களா?') ரத்னயக்கா தன் பேச்சினால், மனிதனைக அல்ல தெய்வமாக நிமிர்ந்து நிற்கின்றான்.

'அனே மே அபருத கட்டிய எஸ் தெக்க நெத்தி வெண்ட ஓன...' (ஐயோ, அநியாயக் கோஷ்டி. கண் இரண்டும் இல்லாமல் போகவேணும்.)

அந்த அச்சச் சூழலிலும் என் சிந்தனை விழித்துக் கொள்ளுகிறது. 'மனிதன் தன்னுடைய எண்ணங்களைப் பரிவர்த்தனை செய்வதற்கு வசதியாகக் கண்டு பிடித்தது மொழி. இதற்காக இவர்கள் தமிழர்-சிங்களவர் என்று பிரித்து மிருக வெறியாட வேண்டுமா? சிங்களவர் மிருகங்களா? அப்படியானால் தெய்வங்களாக உயர்ந்து நிற்கும் ரத்னயக்காவும் அவன் மனைவி சுதுமெனிக்காவும் சிங்களவர்கள் அல்லரா?...ஒரே மனிதனில் மிருகமும், தெய்வமும் வசிக்கின்றது. அந்த கோஷ்டியினரிடம் மிருகங்கள் பிறந்துவிட்டன. அவர்கள் கருவிகள்...'

ரத்னயக்கா தம்பதிகளின் துணையுடன், எவ்வளவோ கஷ்டங்கள் அனுபவித்து ஊர் வந்து சேர்ந்தோம். என் கடையில் மிச்சம் ஒன்றும் வைக்கப்படவில்லை அமைதி நிலை குடி புகுந்தவுடன் மீண்டும் அம்பாறைக்கு வரத் திட்டமிட்டேன். 'அந்த வாழ்க்கை கனவாக இருக்கட்டும். இனி அந்தப் பக்கம் போகவே வேண்டாம்' என்று பூரணம் கெஞ்சினாள். இளம் மனைவியின் உருக்கமான வேண்டுகோளை என்னால் புறக்கணிக்க முடியவில்லை. யாழ்ப்பாணத்தில் என் வியாபாரத்தை தொடங்கினேன் பத்து வருடங்கள் கழித்து இப்பொழுதுதான் கலமுனைக்கு வந்திருக்கின்றேன்.

'கூட்டம் பத்திமாவில ஆனே நடக்கி?' பீடாக்காரனுக்குச் சமீபமாக நடக்கும் ஒரு கிழவர் தனக்கு முன்னால் நடக்கும் ஓர் இளைஞனைக் கேட்கிறார்.

'ஓ...அதுக்கு நேரம் இரிக்கி...'

'இண்டக் கூட்டத்துக்கு மந்திரிமாரும் வாறதலுவா?... 'சேசே' எண்டான் பம்பலாச் சனம் வரும்...மறுகா கூட்டத்தில கனகாட்டுப்பட ஒண்ணு என்டான் நேர காலத்தோட வாற...'

'பொக்கு வாயும் செக்கச்சிவக்கும் பல்லுவேண்டாம் மெதுவாக் கரையும நம்ம பீடா, இந்த ஜில்ஜில் பீடா...'

பீடாக்காரனை லட்சியஞ் செய்யாமல், கிழவர் இடையிலே சொருகியிருந்த வெற்றிலைக் கடதாசியைக் கையிலெடுக்கிறார்.

பீடா சுவைத்த பெண்--அவள் ஆசிரியையாகத்தான் இருக்கவேண்டும்- தூரத்தில் நிற்கின்றாள். ஒரு அசைபில பூரணத்தின் சாயல்.

பூரணம் போய் ஐந்து ஆண்டுகள் இருக்குமா? அதற்கு மேலும் இருக்கும். 1960 ஆண்டு முதல வந்த எலக்ஷனுக்கு-ஓம் மார்ச் எலக்ஷனுக்கு-வோட்டுப் போட்டிட்டு வந்து, 'வயிறு ஒரு மாதிரியா இருக்குது' என்று சொன்ன பிறகு தானே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனது? மூத்தவனுக்குத் துணையாக இருக்கட்டும் என்று ஒரு தம்பியையும் பெற்றுக் கொடுத்துவிட்டு, தன் வாழ்க்கைப் பயணத்தின் பயன் முடிந்துவிட்டது என்ற நிறைவில் கண்களை மூடிக்கொண்டாள்.

ஐந்து வருடங்களுக்கு மேலாகியும் இப்பொழுதும் என நெஞ்சம் வலிவெடுக்கின்றது. அவள் மரணம் ஏற்படுத்திய பிரிவு ரணத்தைக் கால ஓட்டம் குணமாக்கி இருக்கிறது என்று நினைத்திருந்தேன். நினைவு முள் குத்த, அந்த ரணத்திலிருந்து இப்பொழுதும் துயரச் சீழ் வடிகின்றது.

சாந்தமருதுப் பக்கமாக இருந்து வந்த பஸ், ஸ்டாண்டில் நிற்கின்றது. ஆக்கள் இறங்குகிறார்கள்.

'அக்கரைப்பற்றுக்கும் கல்முனைக்கும் இடையில ஓடுற பஸ் சென்டால் உதவே அக்கரைப்பற்றுக்குத் திருப்பும் என்ற நினைப்புடன் போர்டை' எட்டிப் பார்க்கின்றேன்.

'சயிட் ஓரமாப் போகா... ...ஓ, இது 'துறுவா' பட்டக்களப்புக்குப் போற பஸ் தான்...' என்று கொண்டக்டர் எரிந்து விழுகின்றான்.

தமிழாசிரியர் சிலரும் அந்த பஸ்ஸிலிருந்து இறங்குகிறார்கள். ஓரிரண்டு தெரிந்தமுகங்கள். சூழலைக் கவனிக்காமல் அரசியலை பேசுகிறார்கள். ஜவுளிக் கட்டுப்பாட்டைப் பற்றிய பேச்சு தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குத் தாவுகின்றது.

'வந்தாறு மூலையிலை கலைப்பிரிவு கொண்ட ஒரு கனிஷ்ட சர்வகலாசாலை நிறுவப்பட வேண்டும்...'

'தமிழ்ப் பல்கலைக்கழகம் திருகோணமலையில் நிறுவப்படுவதுதான் சரி...'

'இவர்கள் பத்திமா கல்லூரியில நடக்கிற கூட்டத்துக்குத்தான் வந்திருக்கினம்' என்று என் மனம் நினைத்துக் கொள்ளுகின்றது மறுகணம், 'அக்கரைப்பற்றுக்குப் போறதுக்குச் சலியன புடிச்ச பஸ்ஸைக் காணேலை...' என்று அவசரப்படுகின்றது.

'கூட்டத்துக்கு போறவங்க-இதைக் கேட்டிட்டுப் போயிடுங்க தொட்டாலும் வாய் மணக்கும் ஜில் ஜில் பீடா இங்கே மட்டும் கிடைக்கும்.'

பீடாக்காரனின் குரலை ஊடறுத்து, 'நம்ம மொதலாளியா? கண்டுங் கனகாலம் ஆச்சுங் தானே?' என்ற குரல என் செவிகளில் விழுகின்றது. திரும்பிப்பார்க்கின்றேன். எதிரில் ஒரு சிங்களவன் நிற்கின்றான். 'சட்' டென்று...காலத்தாசியை நினைவுத்துணி துடைக்க, 'அட, எங்கடை ரத்னயக்காவே?...எப்பிடி உன் மனைவி சுதுமெனிக்காவின்ர பாடுகள்?' தெய்வ தரிசனங் கிடைத்த உற்சாகத்துடன் கேட்கின்றேன்.

'நோனா சொகந்தான்... ...கொஞ்சங் காலங் போனா நோனாக்கு ஒரு புள்ள புறக்கப்போறாங் தானே?' என்று நாணத்துடன் கூறி, வெற்றிலைக் கடுதாசியை விரிக்கின்றான்.

'மொதலாளி வெத்தில போடுவாங் தானே?'

'இல்லை, நான் இப்பதான் பீடா ஒண்டு போட்டனான்...'

அவன் ஒரு வாய்க்கு வெற்றிலை போட்டுக் கொள்ளுகின்றான். ஒரு துண்டு புகையிலை நெட்டியைக் கிள்ளி, 'இதுங் செரியான தாவடிதுங்கொல...ஒரு கூட்டாளி கொண்டுவந்து தந்தாங்... ...எப்பவும் நம்ம நோனா, பூரணம் நங்கியப் பத்தி பேசுறதாங்...நீங்கதாங் எங்கல மறந்த...' என்கிறான்.

'மறக்கேல்லை. உங்கள் இருவரையும் சாகும்வரை எங்களால் மறக்க முடியுமா?' என்று உணர்ச்சி ததும்பக் கூறுகின்றேன்.

மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் என்ற பெயர்ப் பலகை மாட்டிய பஸ் வந்து நிற்கின்றது.

'பூரணம் நங்கி சுகந் தானே?'

'ஓம்.' மனமறிந்து இந்தப் பொய்யைச் சொல்லுகின்றேன். தங்கள் உயிரைக் காலனுக்குப் பணயம் வைத்து, காலனிடமிருந்து மீட்டுத் தந்த உயிரை மீண்டும் காலன் கவர்ந்துவிட்டான் என்ற செய்தியை அறிந்து அவன் மனம் வருந்தக் கூடாது என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன்.

'மொதலாளி எங்க போறுங்?'

'அக்கரைப்பற்றுக்கு...'

'இதுதாங் பஸ். ஏறிக் குந்துங்க...இல்லாட்டி கரைச்சல் தானே...'

நான் பஸ்ஸில் ஏறி அமர்கின்றேன். பீடா தரித்த அந்தப் பெண்ணும் இந்த பஸ்ஸிலதான் ஏறுகின்றாள்.

'பஸ் போய் விடும் நான் நின்று விடுவேன்...ஜில் ஜில் பீடா இஸ் வெறி நைஸ் பீடா...'

என்று சொல்லியபடி சுண்ணம்பு தடவிய வெற்றிலையில் பீடாக் கலவையை வைத்து முக்கோணவடிவில் மடித்து கராம்பு குத்துகின்றான்.

என் நெஞ்சிலே ஒரு நினைவு மிதக்கின்றது.

'கழுதாவளை வெற்றிலையும்-காலிப் பாக்கும்-தாவடிப் புகையிலையும் சேர்ந்து சுவையான தாம்பூலமாக ஒன்று சேருகின்றன. சிங்களவர்-தமிழர்-முஸ்லிம்கள் என்னும் மூன்று இனங்களும்... ...முக்கோண வடிவிலுள்ள பீடா கிராம்பினால் முழுமையான உருவம் பெறுகின்றன...முஸ்லிம்கள்-தமிழர்--சிங்களவர் என்ற மூன்று இனங்களும் தேசிய ஒற்றுமையின் வாய்ப்பட்டு, ஈழத் தாயிற்கு நறுமணமூட்டும் தாம்பூலமாக அமைந்தால்...'

என் சிந்தனை அறுபடுகின்றது.

பஸ் புறப்படுகின்றது.

'ஜில் ஜில்' பீடாக்காரன் பஸ் ஸ்டாண்டில் நிற்கின்றான்.



## புதிய சமாதான நீதவான்

கொழும்பு மாவட்ட சமாதான நீதவானாக ஜனாப் எம். எஸ். எம். சறூக் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாப் சறூக் ஒரு வர்த்தகரும் நிலச்சுவாந்தாருமாவர். சிறந்த சமூக ஊழியரான இவர் பல சமூக சமய விளையாட்டு இயக்கங்களை ஊக்குவித்து பணியாற்றியுள்ளார்.

# இயக்கமும்...

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறந்தது. அந்த நம்பிக்கையும், அது சுமத்திய கடமைகளை இயற்ற வேண்டிய பொறுப்பும் சுதந்திரனைச் சார்ந்தது. ஒரு போராட்டத்தில் ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கி எல்லாச் சக்திகளுந் திரட்டப்படுதல் இயல்பாகும். இந்நிலையில் இலக்கிய இயக்கம் புறக்கணிக்கப்பட்டது. இச்சூழலைப் பயன்படுத்த மார்க்சியவாதிகள் முன் வந்தார்கள். எழுத்தாற்றலதுகமற்ற, ஆனால் கம்யூனிஸ இயக்கப் பயிற்சிபெற்ற ஒரு சிலர், புறக்கணிக்கப்பட்டிருக்கும் இலக்கிய இயக்கத்திற்குத் தலைமை தாங்குவதின் மூலமும் தமிழ்மக்களுடைய ஆதரவைத் திரட்டலாம் எனக் கண்டனர். இதன் காரணமாக முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. அதன் பொதுச் செயலாளராக சுதந்திரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய ஒரு கம்யூனிட் நியமிக்கப்பட்டார். அவர் சுதந்திரனின் இலக்கிய களத்தை தமது இயக்கத்தை வளர்க்கப் பயன்படுத்தினர் ஆரம்ப காலத்தில், 'முற்போக்கு எழுத்தாளர் சங்கம் சுயப்புவான இலக்கிய இயக்கம், அரசியல் நோக்கம் எதுவும் அதற்குக் கிடையாது. ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியே அதன் இலட்சியம்' என்று பறை சாற்றப்பட்டது. எனவே, வேறு இலக்கிய இயக்கம் இல்லாத காரணத்தினாலும், மார்க்சீயத்தை விரும்பாத ஆற்றலிலக்கியக்காரர் பலரும் முற்போக்கு இலக்கிய இயக்கத்திற்கு ஆதரவு தந்தனர். இந்த இலக்கிய இயக்கத்தை மார்க்சிய அரசியல் ஆதாயத்திற்காக வளர்க்க வேண்டுமென்ற விருப்புடைய ஒருவர் பிறிதொரு பத்திரிகையின் ஆசிரியர் பதவியில் அமர்ந்தார். இதனால் அவர்களுடைய பிரசார களமும் விரிவடைந்தது.

### 'நற்போக்'கின் எதிர்காலம்

எழுத்தாளர்களுட் பெரும்பாலானோர் இலக்கிய வளர்ச்சி கருதியே அவ்வியக்கத்திற் சேர்ந்துள்ளனர் என்பதை அறியத் தவறி, 'தமிழ் இலக்கிய வளர்ச்சியில் உண்மையான அக்கறை உடையவர்கள் மார்க்சியவாதிகளே' என்பதை நிறுவி அதன் மூலம் அரசியல் இயக்கத்திற்கு ஆதரவு தேட 1962 இல் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. அவ்வியக்கத்தின் தலைமைப் பீடத்தினர் கம்யூனிஸ பயிற்சி பெற்றவர்களாக இருந்த காரணத்தினால் நிலைமையை யதார்த்தமாக அணுகத் தவறியமையால், அம்மாநாடு முற்போக்கு இலக்கிய சங்கம் என்பது மார்க்சிய ஊதுகுழலே என்ற உண்மையை அம்பலமாக்கியது. உண்மையை உணர்ந்த எழுத்தாளர் பலர் அவ்வியக்கத்துடன் வைத்திருந்த தொடர்பினைத் துண்டித்துக் கொண்டனர். இவர்கள் உதிரிகளாகச் சோர்வு மனப்பான்மையுடன் ஒதுங்காமலிருக்க 1963-ல், பட்டக்களப்பில் நடைபெற்ற தமிழ்விழா உதவியது. அதைத் தொடர்ந்து 'நற்போக்கு' இலக்கியக் கோட்பாடு எழுந்தது. அது முற்போக்குக்கு மாறான, கனமான இலக்கிய கோட்பாடாக அமைந்தது. இக்கோட்பாடு முற்போக்கு இலக்கிய காரரின் இலக்கிய ஆழமின்மையை அம்பலப்படுத்தி, அவர்களை வலிகுன்றச்செய்தது. தனிமனிதனின் சாதனையாக நற்போக்கு இயக்கம் அமையினும், பரந்த ஆதரவு எழுத்தாளரிடமிருந்து கிடைத்த போதிலும், அரசியலார்ந்த ஆதரவு இல்லாமையால் பூரண வெற்றி பெறவில்லை. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திற்கு முன்னர் இயங்கிய எழுத்தாளர் சங்கங்கள் அரசியலைத் தவிர்த்து வளர்ந்தமையால் அவற்றால் இலக்கிய இயக்கமாக உயர முடியவில்லை. இதே நிலை நற்போக்கு இலக்கிய இயக்கத்திற்கு ஏற்படவுங் கூடும்.

மாஸ்கோ - பீக்கிங் பிரிவினால் முற்றாகவே இலக்கிய உலகிலிருந்து ஒதுக்கப்பட்ட முற்போக்கு இலக்கியகாரர், காலத்தால் தங்களுடை தவறுகள் அழிக்கப்பட்டு விட்டன என்ற நம்பிக்கையில், மாஸ்கோ - பீக்கிங் அரசியற் பிரிவு விரோதங்களை மறந்து, இலக்கிய ரீதியில் ஒன்றுபடல் வேண்டும் என்று திரைமறைவுப்பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன. அவர்கள் முயற்சி வெற்றி பெறின் தமிழ் உணர்ச்சியை வளர்க்கும் அரசியல் வாதிகளுக்குச் சாதகமாக அமையமாட்டாது. இதனையும் அரசியல் வாதிகள் உணரவேண்டும்,

1956-ல் இருந்த சூழ்நிலையல்ல 1966-ல் இருப்பது. போராட்டக் கருவிகள் கீழே வைக்கப்பட்டுள்ளன. சகஜமான நிலையும் உருவாகியுள்ளது. சிந்திக்கும் அவகாசம் கிடைத்துள்ளது இந்த அவகாசத்தைப் பயன்படுத்தி இலக்கிய இயக்கத்தையும் தம்முடன் இணைப்பதற்கான நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும், இச்செயலால் அரசியல் ஆதாயம் கிடைத்ததுடன், உண்மையாகவே ஈழத்துத்தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பயனுள்ள தொண்டும் இயற்றலாம்.

# கண்ணீர் விட்டே வளர்த்தோம் இப்பயிரை



1961 சத்தியாக்கிரகம்



1961 சத்தியாக்கிரகம்

கண்ணீரும் செந்நீரும் கலந்து ஊற்றி, உழைப்பையும் தியாகத்தையும் கலந்து உரமிட்டு வளர்த்த பயிர்தான் இலங்கைத் தமிழரசுக்கட்சி. இந்த இயக்கத்தின் வரலாறே இந்நாட்டுத் தமிழ்பேசும் மக்களின் வரலாறுமாகும்.

1949ம் ஆண்டு மார்கழித் திங்கள் 18ம் நாளன்று இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் வரலாற்றில் ஒரு புதிய திருப்பு முனை ஏற்பட்டது. ஆண்டாண்டு காலமாக அரசியல் இயக்கங்களுக்கும் மக்களுக்குமிடையில் நிலவிவந்த ஒற்றுமையில் ஒரு திருப்பம். தலைவர்களுக்காக மக்களும் இயக்கமும் என்ற நிலை மாறி மக்களுக்காக தலைவர்களும் இயக்கமும் என்ற நிலை உருவாகியது. தனிப்பெருந் தலைவர்கள் என்ற நிலைபோய் மக்கள் தலைவர்கள் என்ற நிலை தோன்றியது. இந்த நிலையை ஏற்படுத்தியது இலங்கைத் தமிழரசுக்கட்சி.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தோற்றத்திற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் மலையக தமிழ்ப்பாட்டாளி மக்களே. அவர்களின் உரிமையைக் காப்பதற்காகவே மருதானையிலிருந்த அரசாங்க லிகிதர் சேவைச் சங்க மண்டபத்தில் அமரர் வன்னியசிங்கம், திரு. சா. ஜே. வே. செல்வநாயகம், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வி. நவரத்தினம், டாக்டர் இ. மு. வி. நாகநாதன், டாக்டர் ப. கே. பரமநாயகம் உட்பட விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் அன்று கூடினார்கள். அக் கூட்டத்தின் முடிவு இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற குழவியை ஈன்றெடுத்தது.

### கண்ணீர் விட்டே வளர்த்தோம்

பதினெட்டு வயது வாலிபனுகவீர நடைபோடும் இலங்கைத் தமிழரசுக்கட்சி இன்று ஐக்கிய தேசியக்கட்சி என்ற பெண்ணை மணந்து தேசிய அரசாங்கம் என்ற குடும்பத்தை நடத்துகிறது. இத் திருமணத்திற்கு முன்னர் தமிழரசுக்கட்சி என்ற வாலிபன் பட்ட இன்னல்கள் பலப்பல; சாதித்த சாதனைகளோ அவன் சக்திக்கு அப்பாற்பட்டவை. இச்சாதனைக்கு உரமாக பல விலைமதிப்பற்ற முத்துக்களையும் இழந்திருக்கிறான் தமிழரசுக்கட்சி என்ற இளைஞன். இம் முத்துக்களுள் முதன்மையாக இருப்பது கோப்பாய்தந்த கோமான் வன்னியசிங்கம். அடுத்து மூதூர்தந்த நித்திலம் ஏகாம்பரத்தையும், ஊர்காவற்றுறை தந்த ஏந்தல் வி. ஏ. கந்தையாவையும், திருமலை தந்த மாமலை ந. இ. இராசவரோதயரவரையையும் இழந்தான். இன்னும் மலையகம் தந்தவீர மணிகளான பிரான்சிஸ், ஐயாவு, திருமலைதந்த நடராசன், இதேபோன்று மட்டுநகர் தந்த மதிப்பற்ற செல்வம் இராஜேசந்திரன் உட்படப் பலரையும் இழந்துவிட்டான். இத்தனை இழப்புக்கு பின்னரும் தன் இலக்கு நோக்கி நடந்து கொண்டேயிருக்கிறான்.

இன்று தமிழரசுக்கட்சியின் பத்தாவது தேசிய மாநாடு மட்டுநகரின் தென்முனையிலான கல்முனையில் நடைபெறுகிறது. இதற்கு முந்திய ஒன்பது தேசிய மாநாடுகள் நடைபெற்ற இடத்தையும், அக்காலங்களில் நிர்வாகக் கயிற்றை கையில் தாங்கியவர்களையும் நாம் ஒருகால் அசைபோட்டுப் பார்ப்பது இச் சந்தர்ப்பத்தில் பயனுடைத்தாகும்.

### முதல் மாநாடு

1949ம் ஆண்டு மார்கழித் திங்கள் 18ம் நாள் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. தலைவராக திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களும் இணைச் செயலாளர்களாக திரு. வி. நவரத்தினம் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் ஆகிய இருவரும் தெரிவுசெய்யப்பட்டனர். கட்சியின் முதலாவது தேசிய மாநாடு 1951ம் ஆண்டு சித்திரைத் திங்களில் திருமலையில் நடைபெற்றது. மாநாட்டு முடிவில் பழைய பதவியாளர்களை மீண்டும் அவ்வப்பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

கட்சியின் இரண்டாவது தேசிய மாநாடு 1953ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அப்பொழுது தலைவராக திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களும் இணைச் செயலாளர்களாக டாக்டர் நாகநாதன், டாக்டர் பரமநாயகம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மூன்றுவது தேசிய மாநாடு 1955 சித்திரைத் திங்களில் மீண்டும் திருமலையில் கூடியது. இம் மாநாட்டின் போது கட்சியின் அமைப்புவிதிகளில் சில நிர்வாக மாற்றங்கள் செய்யப்பட்டன. இம்மாற்றங்களின் பயனாக இருவரை இணைச் செயலாளர்களாகத் தெரிவு செய்யும் முறைமாறி பொதுச்செயலாளர் முறை பின்பற்றப்பட்டது. அப்பொழுது தலைவராக திரு கு. வன்னியசிங்கம் அவர்களும் பொதுச்செயலாளராக திரு: சா. ஜே. வே. செல்வநாயகமும் தெரிவுசெய்யப்பட்டனர்.



1961 சத்தியாக்கிரகம்

### திருமலை யாத்திரை

தமிழரசுக்கட்சியின் நாலாவது தேசியமாநாடு இந்நாட்டின் வரலாற்றில் ஒருமுக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது. பிரசித்திபெற்ற திருமலை யாத்திரை நடைபெற்றதும், திருமலைத் தீர்மானம் எடுக்கப்பட்டதும் இம் மாநாட்டிற்தான். 1956ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் இம் மாநாடு நடைபெற்றது தலைவராக திரு. கு. வன்னியசிங்கம் அவர்களும் செயலாளராக திரு: சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

ஐந்தாவது மாநாடு 1957ம் ஆண்டு யூலைத் திங்களில் முதன் முறையாக மட்டக்களப்பில் நடைபெற்றது. பிரபல செல்வா—பண்டா உடன்படிக்கை இம் மாநாட்டில் ஆராயப்பட்டது. அப்பொழுது தலைவராக திரு. கு. வன்னியசிங்கம் அவர்களே மூன்றுவது தடவையாகவும் தெரிவுசெய்யப்பட்டார். பொதுச்செயலாளராக டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தெரிவுசெய்யப்பட்டார்.

### வகுப்புக் கலவரம்

1958ம் ஆண்டு மேத் திங்களில் ஆறாவது தேசிய மாநாடு வவுனியாவில் கூடியது. இம் மாநாட்டுக்கு சில வாரங்கள் முன்னராகவே செல்வா—பண்டா உடன்படிக்கை புத்தபிக்குகளின் நெருக்குதலினால் கிழித்தெறியப்பட்டது. அத்துடன் 'சிறீ' எதிர்ப்புப் போராட்டமும் இக்காலகட்டத்தில் நடைபெற்றது. தென்னிலங்கை வகுப்புவாதிகளினதும், தேசிய தினசரிகளினதும் தொடர்ச்சியான வகுப்புவாதப் பிரச்சாரத்தினல் மாநாட்டு முடிவில் தென்னிலங்கையில் வகுப்புக் கலவரம் மூண்டது. அதைத் தொடர்ந்துவட—கிழக்கைச் சேர்ந்த தமிழரசுத் தலைவர்கள் தென்னிலங்கையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். வவுனியா மாநாட்டின் போது தலைவராக திரு. ந. இ. இராசவரோதயம் அவர்களும், செயலாளராக திரு. வன்னியசிங்கம் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். 1959 செப்டம்பரில் திரு. கு. வன்னியசிங்கம் திடீர் மரணமானர்.

ஏழாவது தேசிய மாநாடு 1961 சனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. நாலாவது, ஐந்தாவது பொதுத் தேர்தலின்பின்னர் ஏற்பட்ட நிலைபற்றி இம்மாநாடு கவனமாக ஆராய்ந்தது. இம் மாநாட்டைத் தொடர்ந்து சத்தியாக்கிரகமும், சட்ட மறுப்புப் போராட்டமும் இரண்டுதிங்களாக நடைபெற்றன மீண்டும் தமிழரசுத் தலைவர்கள் தென்னிலங்கையில் சிறைவைக்கப்பட்டார்கள். இம் மாநாட்டின் போது திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்கள் தலைவராகவும், திரு. வி. நவரத்தினம் பொதுச்செயலாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

1962 செப்டம்பரில் எட்டாவது தேசிய மாநாடு மன்னரில் நடைபெற்றது. எதிர்கால நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டு; புதிய போராட்டங்களுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. மலைநாட்டில் தொழிற்சங்கம் ஆரம்பிப்பது என்ற முடிவும் இம்மாநாட்டிலேயே எடுக்கப்பட்டது. அப்பொழுது தலைவராக மீண்டும் திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவர்களே தெரிவுசெய்யப்பட்டார். பொதுச்செயலாளராக டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தெரிவுசெய்யப்பட்டார்.

ஒன்பதாவது தேசிய மாநாடு 1964ம் ஆண்டு திருகோணமலையில் நடைபெற்றது தலைவராக திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்களும், பொதுச் செயலாளராக திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இற்றைவரை எதிர்க்கட்சியில் இருந்துவந்த இலங்கைத் தமிழரசுக்கட்சி முதற்தடவையாக அரசாங்க வரிசையில் அமர்ந்திருக்கும் நேரத்தில் பத்தாவது தேசிய மாநாடு கல்முனையில் இப்பொழுது கூடியுள்ளது முதற்தடவையாக இந்நாட்டு பிரதமரும் அமைச்சர்களும் இம் மாநாட்டில் கலந்துகொள்கிறார்கள்.

தொகுப்பு: பூங்குன்றன்.



1957-ம் ஆண்டு மட்டக்களப்பில் நடைபெற்ற 5-வது தேசிய மாநாட்டில் அமரர் வன்னியசிங்கம் தலைமைப் பேருரை நிகழ்த்துகிறார்.

## மாநாடுகளின் வரலாறு

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1966-ம் வருடம் ஜூன் மாதம் 25-ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.